# வளை ஓசை

## நாதம் - 06

2016




பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வளை ஓசை" சிறப்புற வாழ்த்துகின்றோம்







**புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளை ஓசை

## நாதம் – 06

## 2016

*பிரதேச கலாசாரப் பேரவை,*

பிரதேச செயலகம்,

கண்டாவளை,

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

**நூலின் பெயர்**
வளைஓசை "நாதம் – 06"

**நூல்வகை**
ஆண்டிதழ்

**முதற்பதிப்பு**
ஐப்பசி – 2016

**தொகுப்பு**
மலர்க்குழு,
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், கண்டாவளை.

**பதிப்புரிமை**
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

**வெளியீட்டெண்**
10

**தாள்வகை**
70 gsm Bank paper

**பிரதிகள்**
350

**அட்டை வடிவமைப்பு**
த. கிருஷ்ணகுமார்

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்** - 82


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்-கண்டாவளை ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය-කණ්ඩාවලේ

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே .....

- தமிழ்த்தாய் வாழ்த்து
- கலாசாரப் பேரவைக் கீதம்
- மலர்க்குழு விபரம்

ஆசிச் செய்திகள் i - xxvi


| | | |
|---|---|---|
| 01. | உலக அளவில் தமிழை வெளிப்படுத்த தமிழாய்வுக்கு வித்திட்ட உலகத் தமிழன் தனிநாயகம் அடிகள் | 1 - 3 |
| 02. | பக்திப் பாடல்கள் | 4 - 9 |
| 03. | கலைகிறது கலாசாரம் | 10 |
| 04. | ஏக்கம் | 11 |
| 05. | வரும்காலம் நோக்கி... | 12 |
| 06. | பாரம்பரிய மருத்துவத்தில் மருந்தில்லா மருத்துவக் குறிப்புகள் | 13 - 15 |
| 07. | கல்லூரித் தாய்க்கு | 16 |
| 08. | விதியின் விளையாட்டு | 17 |
| 09. | பூனைக்கும் புலி பிறக்கும் | 18 |
| 10. | சமூகமும் சவால்களும் | 19 - 20 |
| 11. | போதையில் பாதை மாறிப் போகாதே... | 21 |
| 12. | கலைகளைப் பேணுவோம் | 22 - 23 |
| 13. | சிதைகின்ற உள்ளங்கள்... | 24 |
| 14. | சுமைதாங்கிகள் சுமையாவதில்லை | 25 - 27 |
| 15. | போதை நாட்டை ஒழிப்போம் | 28 - 29 |
| 16. | விழியசைத்த விண்மீன் | 30 - 31 |
| 17. | "சுற்றும் பூமியில் உன்பெயரை நடு" | 32 |
| 18. | கடன் | 33 -35 |
| 19. | என்னூரான் கண்ணூரான் | 36 |
| 20. | உன்னத தேசத்தின் சிற்பிகள் | 37 -39 |
| 21. | நிலவின் சதி | 40 |
| 22. | கண்டாவளைப் பிரதேச கல்வி அபிவிருத்திப் பணியில் நான் முகம் கொடுத்த பிரச்சினைகளும் சவால்களும் | 41 - 43 |
| 23. | புதிரான வாழ்க்கை | 44 - 45 |
| 24. | விதிவரைந்த பாதையிலே... | 46 |
| 25. | உனக்குள்ளேயே வாழ்ந்து விடுகிறேன் | 47 |
| 26. | புளியம்பொக்கணை ஒரு பழமை | 48 - 50 |
| 27. | எங்கே தமிழர் கலாசாரம்.... | 51 |
| 28. | விடியலைத்தேடி... | 52 - 53 |
| 29. | ஏற்றமுறும் இளையோரே! | 54 - 55 |
| 30. | அதிதிறன் நற்சான்றிதழ் | 56 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழிக்கும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும்
எல்லை அறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

*மீனாட்சி சுந்தரனார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவைக் கீதம்

தாளம் : ஆதி
இராகம் : (தீரசங்கராபரணம் 29வது ஜன்னியம்) பெஹாக்

**பல்லவி**

வளம் கொழிக்கும் கண்டாவளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

**அனுபல்லவி**

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

**சரணங்கள்**

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்

(வளம்)

"சோ. ப"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. திரு. த. முகுந்தன்
   கலாசாரப் பேரவையின் தலைவரும்,
   பிரதேச செயலாளரும்,
   கண்டாவளை.

2. திரு. ம. பிரதீப்
   உதவிபிரதேச செயலாளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.


3. திரு. சி. குகதாசன்
   கணக்காளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

4. திரு. பூ. ராஜ்வினோத்
   உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

5. திருமதி. து. தனுஷா
   கலாசாரப் பேரவையின் செயலாளர்,
   கலாசார உத்தியோகத்தர்,
   கண்டாவளை.

6. இ. யசோதரன்
   அபிவிருத்தி உத்தியோகத்தர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.

7. திரு. சி. சிவராஜ்
   அபிவிருத்தி உத்தியோகத்தர்,
   பிரதேச செயலகம்,
   கண்டாவளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



நீர் வளமும், நில வளமும் நிறைந்த விவசாய பூமியாக விளங்குவதோடு மட்டுமல்லாது கலை கலாசார பண்பாட்டு விழுமிய மரபுகளையும் தன்னகத்தே கொண்டு சிறப்பாக விளங்கும் பிரதேசமாகக் கண்டாவளைப் பிரதேசம் மிளிருகின்றது. இப் பிரதேசத்திலே கலை கலாசாரப் பண்பாடுகள் தழைத்தோங்க பிரதேச செயல-கத்தினரின் விடா முயற்சியால் வருடா வருடம் பல சிறப்பம்சங்களை உள்ளடக்கி 'வளை ஓசை' எனும் மலர் வெளியீடு நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. இவ் வருடமும் 'வளை ஓசை' நாதம் - 06 ஆகத் தனது சிறப்பினை வெளியிடப்படுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இம் மலர் சிறப்புற அமையவும் இந் நூல் சிறக்க சிறந்த கலையாக்கங்களை வழங்கிய கலை ஆர்வலர்களுக்கும், நூலை வருடா வருடம் வெளியீடு செய்துவரும் பிரதேச செயலகத்தினருக்கும், இந் நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறவும் இவ் வெளியீட்டின் மூலம் மக்கள் அனைவரும் கலை கலாசாரம் பண்பாட்டு மரபுகளைத் தன்னக த்தே கொண்டு வாழ்வில் உயர்வடைய எல்லாம் வல்ல சரித்திரப் பிரசித்தி பெற்ற புளியம்பொக்கணை நாக தம்பிரான் திருவருளாசியோடு கூடிய எனது நல்லாசிகளையும் சமர்ப்பித்து பெருமகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**
அருள்மிகு நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

கண்டாவளைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வருடாந்தம் வெளியிடப்படும் 'வளை ஓசை' இதழிற்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கண்டாவளை பிரதேசத்தில் வாழும் படைப்பிலக்கியவாதிகளின் தரமான படைப்புக்களைப் பதிவுசெய்து வெளிக் கொணரும் ஓர் ஆவணப் பெட்டகமாக 'வளை ஓசை' இதழ் திகழ்வது மிகவும் பாராட்டுக்குரியது. வரலாற்றில் பதிவு என்பது மிகவும் முக்கியமானது. இப்பதிவுகள் ஊடாகவே ஒருதலைமுறையினரிடமிருந்து இன்னுமொரு தலை முறையினருக்கு வரலாற்று சான்றுகள் கடத்தப்படுகின்றன. இந்தவகையில் 'வளை ஓசை' இதழ், நாதம் - 06 ஆக இசைஎழுப்பி ஓர் ஆவணப் பெட்டகமாக வெளிவருவது மிகவும் சிறப்பானதொன்று.

"வளை ஓசை படைப்பிலக்கியவாதிகளின் எண்ணங்களைச் சிந்தனைகளை எழுத்துவடிவில் வெளிக்கொணர் வதற்கு ஒரு தளம் அமைத்துக் கொடுத்துள்ளது. இப்பணியில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் வாழ்த்து க்களைக் கூறிநிற்பதுடன், இனிவரும் காலங்களில் பல நாதங்களாக இவ்விதழ் இசை ஒலித்து மலர எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**அன்ரன் ஸ்ரீபன்**
பாங்குத்தந்தை
புனித சவேரியார் ஆலயம்
தர்மபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கண்டாவளை பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் வருடாந்தம் வெளியிடப்படும் வளை ஓசை நாதம் எனும் சிறப்பு மலரின் 6ஆவது வெளியீடு வெளியிடப்படவிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அவ் விஷேட மலருக் கான வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தமது பிரதேச எல்லைக்குள் உட்பட்ட வரலாற்றுச் சின்னங்கள், சிறந்த படைப்பாளிகளின் தரமான ஆக்கங்கள், தலைசிறந்த நாட்டிய நாடக சிறுகதை எழுத்தாளர்கள், நாவல் எழுத்தாளர்கள் எனப் பலதரப்பட்டோரையும் பட்டியல் இடுவதற்கும் அவர்களின் ஆக்கங்களை சமூகத்திற்கு கொண்டு செல்வதற்கும் இவ்வாறான மலர் வெளியீட்டு நிகழ்வுகள் உதவுகின்றன.

அந்தவகையில் கண்டாவளைப் பிரதேசத்தில் வாழும் படைப்பிலக்கியவாதிகளின் தரமான ஆக்கங்களைப் பதிவு செய்யும் ஒரு ஆவணப்பெட்டகமாக வெளிவரவிருக்கும் வளை ஓசை நாதம் என்ற நூல் சிறப்புற அமையவும் இவை எதிர்கால சந்ததிக்கு ஒரு ஆவணத் தேடலாகவும், உசாத்துணை நூலாகவும் அமையத்தக்க வகையில் வெளிவரும் என எதிர்பார்த்து என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு சிறப்புமிக்க கலை, கலாசாரத்துடன் கூடிய பிரதேச செயலகமாக விளங்கும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் வெளியிடப்படும் “வளை ஓசை நாதம் - 06” சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மிகமகிழ்வடைகின்றேன். அந்த வகையில் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் இவ்விதழானது இப்பிரதேசத்தின் மொழி கலை கலாசாரம் என்பவற்றை வெளிக்கொண்டு வரும் வகையில் ஆக்கப்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

இப்பிரதேச செயலகமானது வெறுமனே நிர்வாகசெயற்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாது இவ்வாறான அறிவு சார்ந்த மனப்பாங்குகளை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதும் பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும். அந்தவகையில் இப்பிரதேசத்து எழுத்தாளர்கள், படைப்பாளிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. எனவே இந்நூலின் பயனைப்பெறுவது வாசகர்கள் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

மேலும் இந்நூல் உங்கள் அனைவரினதும் கரங்களில் தவழ்வதற்காக உழைத்த பிரதேச செயலர் மற்றும் அவரோடு இணைந்த கலாசார பேரவையினர், மலர்க்குழுவினர் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவிப்ப தோடு இம் மலர் தொடர்ந்தும் சிறப்பாக வெளிவர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்,
யாழ் – கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின்
இணைத்தலைவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேச செயலகம் கலாசாரப் பேரவையினால் ஆண்டு தோறும் "வளைஓசை நாதம் - 6" எனும் தலைப்பில் ஆவணப் பெட்டகம் ஒன்று மலராய் வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வளை ஓசை நாதம் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக, பல துறைகளிலும் தரம் மிக்க ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் கலை, இலக்கியம், இசை, பண்பாடு ஆக்கங்கள் உள்ளடக்கியதாக வெளிவரவேண்டும்.

இன்றைய உலகில் புத்தம் புதிய கலைகள், அறிவியல் படைப்புக்கள் அனைத்தும் துறைகளிலும் செறிந்தும் செல்வாக்குக் கொண்டும் புதிய உலகை உருவாக்கி வருகின்றன.

நாமும் ஊர்களிலிருந்து உலகுவரை ஆளுமை கொள்ளும் வகையில் வெல்லும் ஆக்கங்களைப் படைக்க வேண்டும். அதன்மூலம் உலகோடொட்டி உயர வேண்டும். அவை மக்களிடத்தில் குறிப்பாக இளம் சமூகத்தில் பயனுறவேண்டும். புதிய சிந்தனைகளைத் தூண்டும் படைப்புக்களாய் வெளிவர வேண்டும் என எண்ணுகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் எம் தமிழ் மொழியும், முத்தமிழும், கல்வியும், அறிவியலும், கலை இலக்கியங்களும் வாழ்வும் வளமும் பெற ஆய்வுப் பெட்டகம் 'வளைஓசை நாதம் - 06' மலரும் எனப் பேருவகை கொண்டு வாழ்த்துகின்றேன்.

**மாவை. சோ. சேனாதிராஜா**
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர், இலங்கை தமிழரசுக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

**சமூக கூட்டுணர்வின் பிரவாகமாக 'வளைஓசை' விளங்கட்டும்**

கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படுகின்ற 'வளைஓசை' ஆவண மலருக்கு வாழ்த்து ரைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கட்டுறுதி வாய்ந்த சமூகம் ஒன்றின் நிலைபேறிற்கு படைப்புக்களின் பதிவுகள் அவசியமானவை. எமது இன, சமூக இருப்பிற்கு கலை இலக்கியத்துறையினர் ஆற்றிய பணிகள் அபரீதமானவை. இன விடுதலைக்கான பயணத்தின் செல்நெறியை செழுமை செய்த இலக்கியங்கள் இன்று போரின் பின்னரான காயங்களையும் வலியையும் ஆற்றுப்படுத்தும் ஒத்தடமாக விளங்குவது காலத்தேவையாகும். எமது சமூகம் கொண்டிருக்கக்கூடிய சில புரை யோடிய நம்பிக்கைகளை மீள் பார்வைக்குட்படுத்தக்கூடிய புத்தாயிரத்தின் எண்களாக படைப்புக்களைப் பிரதியி டுதல் காலப் பணியாகும். செயற்கையாக உருவாக்கப்பட்ட விதிகளின் எல்லைகள் கடந்து சுதந்திர சிந்த னையின் உள்ளுணர்வாகப் படைப்புக்கள் வெளிவருவதே இலக்கிய நோக்கை நிறைவேற்றும். படைப்பிலக்கியத்தடத்தில் அதிகரித்து வருகின்ற இன்ப இலக்கியங்களுக்கு மேலாக அறிவியல் சார் இலக்கியங்களின் வரவை எமது சமூகம் அவாவி நிற்கின்றது. அத்தகைய படைப்புக்களையும் இணைத்துக்கொண்டு சமூகம் கூட்டுணர்வின் பிரதிபலிப்பாக அதன் பிரவாகமாக 'வளைஓசை' வெளிவருவது கண்டு மகிழ்ச்சியையும் வாழ்த்தினையும் பகிர்ந்து கொள்வதில் மன நிறைவடைகின்றேன்.

தமது வரலாற்றுக் கடமையாய் 'வளைஓசை' ஆவணத்தை சமூகத்திற்கு அளிப்பதில் பங்களித்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.


**சிவஞானம் சிறீதரன்**

பாராளுமன்ற உறுப்பினர்,

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,

கிளிநொச்சி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



கண்டாவளையின் பொக்கிசமாக கண்டாவளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடா வருடம் 'வளை ஓசை' இதழ் வெளியீடு வெளிவருவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி அந்த வகையில் எமது பிரதேசங்களில் வாழுகின்ற படைப்பியல் வாதிகளின் ஆக்கங்களை வெளிக்கொணர்வதுடன் அவர்களை ஊக்குவிக்க வேண்டியது எமது கடமையாகும். கண்டாவளை பிரதேச செயலகத்தின் முழுமையான முயற்சியின் காரணமாக அந்தப் பிரதேச படைப்பிலக்கிய வாதிகளின் ஆக்கங்களின் தொகுப்பாக 'வளை ஓசை நாதம் - 6' இதழ் வெளிவருவது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற ஒரு விடயம்.

நான் எப்போதுமே நிறைய விடயங்களைத் தருகின்ற புத்தகங்களை படிப்பதில் அக்கறையுள்ளவன். இதன் மூலம் நாம் எமது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளலாம். கடந்த காலங்களில் வெளிவந்திருக்கின்ற இதன் இதழ்களை பார்க்கின்ற போது இந்த இதழின் பெறுமதி எமக்குத் தெரிகின்றது. இந்த இதழின் ஆக்கங்களை எழுதியவர்களுக்கும், தொகுப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எதிர்காலத்தில் எமது வரலாறுகள், பாரம்பரியங்கள், கலை கலாசாரம் மற்றும் கல்விப் புலத்தையும்உலகத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்றதாக ஆக்கங்களை சுமந்து வெளிவரவேண்டும் என நான் விரும்புகின்றேன். இன்று வளைஓசை நாதமாக வெளிவருகின்ற இந்த மலர் சிறப்புற வாழ்த்துவதோடு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அங்கஜன் இராமநாதன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்,**
**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதான அமைப்பாளர் யாழ் கிளிநொச்சி மாவட்டங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'வளை ஓசை - நாதம் 06' மலருக்கு இம்முறையும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வன்னிப் பெருநிலப் பரப்பிலே கண்டாவளைப் பிரதேசம் ஐநில வளங்களையும் கொண்ட ஒரு பகுதியாகும். கண்டாவளை என்ற பழம்பெரும் ஊரும், ஆனையிறவு, சுண்டிக்குளம், குஞ்சுப்பரந்தன், கோரக்கன்கட்டு, முரசுமோட்டை என்பனவும் எமது பிரதேசத்தின் பழம்பெரும் ஊர்களாகும். பல நூறு வருடங்களுக்கு முன்னர் மக்கள் இப் பகுதிகளில் செழிப்பாக வாழ்ந்திருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் பல உண்டு. மற்றைய பிரதேசங்கள் யாவும் 1950களின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களின் மூலம் உருவாக்கப்பட்டவையாகும்.

ஒரு மனிதனானவன் தான் வாழும் பிரதேசம் தொடர்பான தகவல்கள், தொன்மை வரலாறுகள், பழக்கவழக்கங்கள், மரபுசார் பண்பாட்டம்சங்கள் போன்றவற்றை அறிந்து வைத்திருக்கும் போதுதான் முழுமையான அப் பிரதேசத்திற்குரியவனாக மாறுகிறான். அவ்வகையான தகவல்களை இன்றைய சந்ததியினரும், எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்வதற்கும், தமிழர் தம் கலாசாரத்தினை இன்றைய தலைமுறைகளிற்கு மீட்டுக்கொடுத்திட இலகுவாக அமைவதோடும், இலைமறை காய்களாக உள்ள பிரதேசவாசிகளின் எழுத்தாற்றலை வளர்க்கவும், கலைகள் சார்ந்த அவரவர் திறன்களை ஆவணப்படுத்தவும் பிரதேச ரீதியாக வெளியிடப்படும் இவ்வாறான மலர்கள் மிகவும் துணை புரிகின்றன.

இம் மலர் சிறப்புற வெளிவர உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் விழா இனிதே நடைபெற எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த. குருகுலராஜா
கல்வி அமைச்சர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

**வளைஓசை ஆறாவது இதழ்கண்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.**

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவானது வயலும் வயல் சார்ந்த நிலமும் உடைய மருத நிலமாக விளங்கி வருகின்றமையோடு அல்லாமல் கடல் வளமும் அமையப்பெற்ற சிறப்புமிகு பிரதேசமாக மிளிர்கின்றமை கண்கூடு. இத்தகைய ஒரு பிராந்தியத்திலிருந்து சற்றேனும் சளைக்காது ஆறாவது முறையாகவும் வெளிவருகின்ற வளையோசை என்னும் பிரதேச மணம் கமழும் மலரை வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

இப்பிராந்தியத்தினுடைய கலை ஆர்வலர்கள் மற்றும் கலைச்செயற்பாட்டாளர்களது அர்ப்பணிப்பு மிகு உழைப்பின் வெற்றியாய் அதன் குறியீடாய் அமைந்து நிற்பது வளைஓசை இதழ் ஆறு ஆகும்.

ஒவ்வொரு இதழும் புதிய புதிய இலக்கிய அறுவடைகளை ஏற்படுத்தி நிற்பது மட்டுமல்ல புதிய படைப்பாளிகளையும் இனங்கண்டு கலையுலகிற்கு அறிமுகம் செய்கின்ற பாரியதொரு பணியினை நிறைவேற்றி நிற்கின்ற பெருமையைப் பெற்று கலைப்பணியூடான பிரதேசத்தின் வளங்களை ஆவணப்படுத்தி வருகின்ற செயற்பாடு போற்றுதற்குரியது.

இச்சஞ்சிகையானது கவிதை, கட்டுரை, சிறுகதை எனப்பல ஆக்கங்களை உள்ளடக்கி அழகிய வடிவமைப்பில் மலர்ந்திருப்பது பாராட்டிற்குரியதாகும். கடினமான இப்பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்ற கண்டா வளை பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களை பாராட்டுகின்ற அதே வேளை இம்மலருக்கு ஆக்கங்களை எழுதி மலரை சிறப்படைய வைத்திருலுக்கும் படைப்பாளிகளையும் வாழ்த்தி வளைஓசை நாதம் - 06 சிறப்பாக மலர்ந்து இலக்கிய வரலாற்றில் தடம்பதித்துச் செல்வதற்கு எனது மனமார்ந்த நல்லா சிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கண்டாவளைப் பிரதேச செயலகம் பிரதேச கலாசாரப் பேரவையுடன் இணைந்து வருடந்தோறும் வெளியிட்டு வரும் 'வளைஓசை நாதம் - 06' மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது கண்டாவளை பிரதேசத்தின் கலை, கலாசார வாழ்வியல் தொன்மைகள், நாட்டுப்புறவியல் சார்ந்த பல விடயங்களை உள்ளடக்கி பிரதேசம் சார் படைப்பிலக்கியவாதிகளின் ஆக்கங்களைத் தாங்கி வெளியிடப்படுகின்றது.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாகவும் இருக்கும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**இ. இரவீந்திரன்**

**செயலாளர்,**

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**

**இளைஞர் விவகார அமைச்சு.**

**வடமாகாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



"பெரும் பொருளால் பெட்டக்க தாதி அருங்கேட்டில்

ஆற்ற விளைவது நாடு"

என்கின்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அதிகப்பொருள் இருப்பதனால் பிற நாட்டினரால் விரும்பத்தக்கதாய் கேடில்லாததாய் மிகுதியாய் விளைவதுமாய் உள்ளதே சிறந்த நாடு. இவ்வகையில் அளவிடமுடியாத நெல் உற்பத்திகளும் வயல்களும் வாழைத்தோட்டங்களுமாய் கடல் வளங்கள் அதிகம் கிடைப்பதுமாய் விளங்குவது கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசம் ஆகும். இப் பிரதேசத்தின் மூச்சாக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற வளைஓசை நாதம் -06 இற்கான வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதன் பிறப்பு முதல் வாழும் காலம் வரை அவனுள் இருக்கும் கலையும் கலையோடிணைந்த இரசனையும் ஆக்கங்கள் படைக்க ஏதுவாக அமைகின்றது. முன்னைய கால கட்டங்களில் மனிதனின் தேடல் என்பது இன்றைய சமுதாயத்துடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் அதிகப்படியானதொன்றாகவே காணப்பட்டது. இருப்பினும் கண்டாவளைப் பிரதேசத்தினைப் பொறுத்தமட்டில் கலைகளை வளர்த்தெடுக்கும் கலைஞர்கள் அன்று தொட்டு இன்றுவரை கலையின்பால் ஈர்க்கப்பட்டு ஆக்கங்கள் புனையப்பட்டு வருகின்றமை பராட்டுக்குரியது.

கண்டாவளைப் பிரதேச வாழ் மக்களின் கலை ஊற்றுக்கும் கலைஞர்களின் கலைசார் வெளிப்பாட்டிற்கும் ஏணியாக இவ் வளைஓசை நாதம் காணப்படுகின்றது. எழுத்தாளர்களின் சிந்தனைகள் படைப்புக்கள் தொடர்ந்து வளம் பெற வேண்டும். அதற்கு வளை ஓசை என்றென்றும் கைகொடுத்து உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வளைஓசை நாதம் - 06 திறம்பட வெளிவர அயராது சேவை செய்த பிரதேச செயலாளர் மற்றும் கலாசாரப் பேரவையின் அர்ப்பணிப்புமிக்க சேவையினைப் பாராட்டி கலாசார விழா சிறப்புற நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
மேலதிக மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையின் இதழ் வெளியிடுவதையொட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடக்குமாகாணம் தமிழர்களின் பண்பாட்டினை அடையாளப்படுத்தும் தொன்மையான மாகாணமாகும். தமிழர்களின் இருப்பும் இயங்கியலும் கலை இலக்கியத்தின் வழியே முகிழ்த்திருக்கின்றது.

தமிழர் வாழ்வின் ஒவ்வொரு கூறுகளிலும் இதன் உள்ளீடு இன்றும் துடிப்போடு இருப்பது பெருமைக்குரியது. மனித வாழ்வில் இன்றியமையா பங்கு வகிப்பது கலையாகும். அத்தகைய கலைகள் உயிர்ப்பது தான் பண்பாடாகும். ஒவ்வொரு இனமும் தனக்கென தனித்துவம் மிக்கதான தனித்தனி பண்பாடுகளைக் கொண்டவை. ஆதலால் தான் ஏனைய இனக்குழுமங்களின் பண்பாட்டிலிருந்து எமது பண்பாடு வேறுபட்டதாகக் சிறப்பு மிக்கதாகக் காணப்படுகின்றது.

எமது இனத்தினதும், மொழியினதும் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காத்து நிற்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். அத்துடன் அழிந்து வரும் அவற்றை அடுத்த சந்ததியினருக்கு கையளிப்பு செய்ய வேண்டியது மிகவும் வேண்டிய ஒன்றாகும். அதற்கு எம்மிடம் உள்ள படைப்பிலக்கியவாதிகளின் தரமான ஆக்கங்களினை ஆவணப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய சந்ததியினரிடம் காணப்படுகின்றது. அத்தகைய மாபெரும் செயற்பாட்டையே இன்று கண்டாவளை பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது.

இவ்வாறு தமிழ் கலாசார விழுமியங்களை எடுத்துரைக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் "வளை ஓசை நாதம் - 6" என்னும் இதழ் சிறப்புற வெளியிடுவதையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு இவ்வாறான இதழ்கள் ஒவ்வொரு ஆண்டும் வெளியிட வேண்டும். இவ் இதழ் வெளிவருவதற்கு முயற்சி செய்த குழுவினருக்கு மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி வனஜா செல்வரட்ணம்,**
**உதவிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளை ஓசை வாழ்வுயர்த்தும்

தமிழர்தம் வாழ்வையும் அவர்தம் பண்பாட்டுக் கோலங்களையும் பேணிப் பாதுகாக்கும் அவசியம் கருதி எமது கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையானது வருடாந்தம் கலாசார விழாவையும் 'வளைஓசை' எனும் இலக்கிய சஞ்சிகையையும் வெளியிட்டு வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டும் 'வளைஓசை நாதம் - 6' இன் ஊடு உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். உலகமொழிகளில் தொன்மையான மொழிக் குடும்பங்களில் எங்கள் செம்மொழியாம் தமிழ்மொழியும் அமைந்திருப்பது எமக்கெல்லாம் பெருமையன்றோ! அத்தகைய உயர்மொழியைப்பேசுகின்ற எமக்குத் தணியாத கலைத் தாகமும் நிறையவே உண்டு. அதனால்தான் எம்மினத்தில் கலைகளும், இலக்கியங்களும் பல்கிப்பெருகி பயன்விளைவிக்கின்றன.

அத்தகைய உயர்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த நாம் எமது கலைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது எம் தலைமுறைக்கு நாம் ஆற்றும் பெரும்கடன். தொன்மையான எம் வரலாற்றுப் பெருமைகள் குன்றிவிடுமோ? எனும் அச்சம் நிலவும் இக்காலப்பகுதியில் எங்கள் கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை யானது கலை, இலக்கிய வளர்ச்சியைக் காக்கும் நோக்கில் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக வளை ஓசை எனும் இதழினை வெளியிட்டு வந்திருப்பது எமக்கு மிகவும் மகிழ்வைத் தருகின்றது. இப்பிரதேசத்தின் வளமும், வனப்பும், கலைகளும் மிளிரும் வகையில் சமைக்கப்பட்ட எம் படைப்பாளிகளின் ஆக்கங்கள் இங்கே பதிவு செய்யப்பட்டு உங்கள் கரங்களில் தவழ்கிறது. அவர்கள் தம் எண்ணம்கண்டு வியப்பீர்! ஆக்கத்திற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு." - புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

**த. முகுந்தன்**
கலாசாரப் பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலாளரும்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசம் பரந்த வயல் வெளிகளையும் கடல் வளத்தையும் நன்னீர் வளத்தையும் அதனோடு நிறைந்த வன வளத்தையும் கொண்ட கலைகள் ஓங்கி விளங்கும் பூமியாகும். இவ் வாறான சிறப்புக்களைக் கொண்ட எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்களினை மேம்படுத்தும் நோக்கோடு 2011ஆம் ஆண்டு முதல் எமது கலாசாரப் பேரவை வினைத்திறனுடன் செயற்படுகின்றது. கடந்தகால வெளியீடுகளின் தொடர்ச்சியாக வளை ஓசை நாதம் - 6 ஓங்கி ஒலிக்கின்ற இவ் இனிய தருணம் மகிழ்வுக்குரியது.

பேரவையின் ஆரம்பச் செயற்குழுவின் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் சார் வெளியீடுகளை வெளியிடுவது எனும் செயற்பாடு தற்போதைய ஐந்தாவது செயற்குழுவின் காலத்திலும் தொடர்கின்றது. முறை-யே வளை ஓசை நாதம் - 1, 2, 3, 4, 5 ஆகியவற்றை வருடந்தோறும் ஓங்கி ஒலிக்கச்செய்த கலாசாரப் பேரவை 2011ஆம் ஆண்டில் 'கலை ஒளி' விருது பெறும் கலைஞர் விபரத்திரட்டு என்ற நூலையும், 2014ஆம் ஆண்டில் 'மண்வாசனை' எனும் சிறுகதை தொகுப்பையும் 2015இல் 'நினைவுகளின் நினைவோடு' எனும் கவிதைத் தொ-குப்பையும் பிரசவித்து இன்று ஒன்பதாவது வெளியீடாக வளை ஓசை நாதம் - 6 இனை வெளியிடுவது குறிப்பிடத்-தக்கதாகும்.

பேரவையின் வெளியீடுகள் இம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதர்களினதும் இப்பிரதே சத்தில் சேவையாற்றி வருபவர்களினதும் படைப்புக்களாகவே அமைய வேண்டும் என்னும் திண்ணிய எண்ணம் எமக்கு உண்டு. அவ்வெண்ணம் இந்நூலிலும் நிதர்சனமாகியிருக்கின்றது. இந்நூலில் பிரதேசம்சார் கலை, இலக்கியம், ஆன்மீகம், மரபுரிமைகள், பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள், மற்றும் வரலாறு சார்ந்த விடயங்கள் உள்ளடக்கியுள்ளன. அவ்வகையில் எமது பிரதேசத்தின் படைப்பாளிகள், படைப்பார்வலர்களுக்காக நல்ல கள மாகவும் 'வளை ஓசை' திகழ்கின்றது என்பது எமது எண்ணம்.

கடந்த ஆண்டு போலவே இவ் ஆண்டும் எமது கலாசார விழா மற்றும் 'வளை ஓசை' மலர் வெளியீட்டுக்கும் நிதிவழங்கலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. மேலும் எமது கலை முயற்சிக்கு என்றும் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்ற எமது பிரதேசம் சார்ந்த பொது மக்களினதும் கலையார்வலர்களினதும் வர்த்தகர்களினதும் பொது அமைப்புக்களினதும் பங்களிப்புக்கள் என்றும் மனங்கொள்ளத்தக்கவை. இம் மலர் வெளியீட்டுக்காக ஆசிச் செய்திகள் மற்றும் வாழ்த்துச்செய்திகள் வழங்கிய பெரியோர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் விளம்பரங்களை வழங்கியுதவிய வர்த்தகர்களுக்கும் நூலினை அழகுற அச்சுப்பதித்துத் தந்த கரிகணன் தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

மலர்க்குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அளவில் தமிழை வெளிப்படுத்த தமிழாய்வுக்கு வித்திட்ட உலகத் தமிழன் தனிநாயகம் அடிகள்

குமரிவேந்தன்
நிறுவுனர்,
இலங்கை குமரி தமிழ்ப்பணி மன்றம்.

இலங்கையில் வாழும் தமிழர்களால் தான் இந் நாளில் தமிழ் உலகத்தமிழ் என்று உலகம் கண்டுகொண்டுள்ளது என்பது உண்மையிலும் உண்மை. உலகத்தமிழ் மாநாடு உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலிய அரசு சாரா அமைப்புக்கள் உருவாக முன்னெடுத்துச்சென்ற வல்லவர், தனிப்பட்ட குறிப்பிடத்தக்க முதன்மையர். ஈழத்துத் தோன்றல் மலையகத்துத் தொடங்கல் "தனிநாயக அடிகளார்" அவரை எண்ணிப் பார்க்கின்றேன். அவ் ஈழமே இந்நாள் தமிழ் உலகத்தமிழ் என்று உணரச் செய்தது என்பதை நினைவில் கொண்டு கடனாற்றல் நம்பிறவிக் கடன்.

முதுமுனைவர் இரா. இளங்குமரனார்.

(முதல்மொழி, புரட்டாதி / ஐப்பசி 2014 சிற்றிதழ், தமிழ்நாடு.)

"கோமரின் ஒடிசியையும், வெர்யிலின் இலியத்தையும் மக்கள் போற்றுவது போல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை - ஒப்புயர்வற்ற முத்தமிழ் தொடர்நிலைச் செய்யுளை - உலகம் போற்றுமாறு நாம் செய்தல் வேண்டும். கொன்பூசியசு, செனக்கா முதலாய நீதிநூல் ஆசிரியர்களை உலகமாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றரோ அங்ஙனம் அவர்கள் திருவள்ளுவரையும் அறிந்து படிக்குமாறு செய்வித்தல் வேண்டும். சாபோ, எலிசபெத் பிரௌனிங், சேகச்பியர் முதலானோரின் காதற்பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவது போல் நம் அகத்துறை இலக்கியங்களையும் அவர் படித்து இன்புறும் புதிய நாள் உதிக்க வேண்டும்." உலக இலக்கியத் திரட்டு (Anthology of world classics) என்னும் பெருந்தொகை நூல்களில் நம் இலக்கியங்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும். மேற்திசை, கீழ்த்திசை, கீழ்த்திசைப்பல்கலைக்கழகங்கள் தமிழ் கலைகளின் தனித்தன்மையை உலகிற்கு உணர்த்துமாறும் செய்வித்தல் வேண்டும்."

"தமிழ் மக்கள் விழிப்பாயிருந்து சிறுவர்களுக்கு, இளைஞர்களுக்கு தமிழிலக்கியத்தின் சிறப்பையும், கலைகளின் சிறப்பையும் உணர்தல் வேண்டும். தமிழர்களின் வரலாற்றைக் கற்பிக்க வேண்டும். பண்பாட்டின் பழக்கவழக்கங்களை குடும்பங்களில் கைவிடாது வளர்க்க வேண்டும்."

தனிநாயகம் அடிகளார்

யாரிந்தத் தனிநாயகம் அடிகளார்? தமிழ் மொழி வெறியரா? அல்லது இனவாதியா?. இல்லை இல்லை அவர் ஓர் தமிழ் மொழிப்பற்றாளர் (பக்தர்), உணர்வாளர், உலக உயர்மொழிகள் 15 இற்கு மேற்பட்டவற்றைக் கற்ற துறைபோகி. எம் மொழியையும் குறைத்து (நையாண்டி) மதிப்பிடாதவர்.

இம் மொழிகளை அவற்றின் இலக்கியங்களையெல்லாம் ஐயம்திரிபறக் கற்றதினால் தமிழ் மொழியின் அதன் இலக்கியத்தின் தன்னிகரில்லாத் தனித்துவத்தை அறிந்து கொண்டதினால், தமிழர்களை அவர்களின் நெட்டுறக்கத்திலிருந்து விழிப்படையச் செய்யவும், உலக அறிஞர்களை தமிழின் மேன்மையைச், சிறப்புக்களை அறிந்துகொள்ள தமிழ் இலக்கியம் வெளிப்படுத்திய உயரிய உலகக் கண்ணோட்டத்தின் வழியாய் தமிழர் பண்பாட்டை உலக அரங்கிற்குக் கொண்டு செல்ல தமது வாழ்நாளின் அரைப்பகுதி (30) ஆண்டுகளைச் செலவிட்டார்.

அவரது பன்மொழிப்புலமை அவரது உலகச் செலவி (பயணத்தி)ன் போது தான் சந்தித்த அறிஞர் முன், மக்கள் முன் அவரை அவர்கள் மொழியில் தமிழ்பற்றிப் பேசவைத்தது. என்ன பேசினார். தமிழர்களுக்குத் தனி (சுய) ஆட்சி பற்றிப் பேசினாரா, அல்லது தமிழ்நாடு பெற்றுத்தருமாறு கேட்டாரா? இல்லை தமிழ் பண்பாட்டைப் பற்றிப் பேசினார். அதன் உலக மனப்பான்மையைப் பற்றிப் பேசினார். அதன் உலகக் கண்ணோட்டம் பற்றி பேசினார். தமிழர் இலக்கிய உள்ளீடுகளை உலக இலக்கியங்களோடும், பண்பாட்டோடும், ஒழுக்கவியலோடும் உலக நீதியோடும், உலக இயற்கையோடும் ஒப்பிட்டுப் பேசினார். தமிழ் இலக்கியங்கள் மக்களையும் இயற்கையையும் பேச உலக இலக்கியங்களோ உயர் குடிகளையும் கற்பனைகளையும் பேசியதென்றார்.

"இந்தியப்பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக்கலைகள், இந்திய மொழிகள் என அவர் (மாக்சு முல்லர், வின்றான்ட்சு போன்ற பலரும்) மொழிவனவெல்லாம் தமிழிய (திராவிட)ப் பண்பு, தமிழிய நாகரிகம், தமிழியக்கலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. பல்லாண்டுகளாக நடுநிலையற்றோர் (தமிழ் தற்குறிகளும்), இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும் ஒழித்தும் நூல்களை யாத்தமையினால் இன்று இவ் உண்மையைக் கூறுவது மக்கள் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது. அதைக் கூறுவதற்கும் பெரிதும் மனத் துணிவும் தேவைப்பட்டது.'' என்று அடிகளார் எடுத்துரைத்தார் (1951 இல் யாழில் நடைபெற்ற தமிழ் விழாவில்) இது அடிகளாரின் 65 ஆண்டுகளுக்கு முற்பட்ட கூற்று.

ஆனால் இன்றும் தமிழறிஞர்கள் இலங்கை இந்திய மொழிகளிலேனும், தமிழ் மொழியிலேனும் தமிழ் மொழியிலும் வேறும் தமிழ்மொழிபற்றி எடுத்துரைப்பதாயில்லை. எனவே தான் தமிழர்க்கும் உலகோர்க்கும் தமிழ் மொழியின் பெருமைகளை நிலைநாட்டும் பொருட்டு "தமிழ்ப் பண்பாடு" என்ற செய்தி இதழையும், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தையும் உருவாக்கினார். அடிகளார் தமது வாழ்க்கையின் உயர்நோக்காக ஆங்கில நாட்டறிஞர் "இட்றுமெண்ட்" என்பவரின் பொன்மொழியான "நான் இவ்வுலகில் ஒரு முறைதான் செலவு (பயணம்) செய்வேன். எனவே மரணம் வந்து என்னைத் தழுவுமுன் என்னாலான எல்லா நல்ல செயல்களையும் செய்ய முயல்வேன். ஏனெனில் இந்த உலகின் வழியாக நான் மீண்டும் இன்னொரு தடவை வரப்போவதில்லை. (I shall pass this way only once therefore, before i die let me do all the good i can because i shall not pass this way again - Drumond)

இத்துடன் திருமூலரின் திருமந்திரப் பொன்மொழியாகிய "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யு-+-மாறே" என்ற வாக்கையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டார். இவர் இப்படியாகச் செயற்படத் தூண்டிய காரணிகளை நோக்குவோமாயின் அது தமிழ்ச் சான்றோர்களாகிய புலவர் பெருமக்கள் தம் இலக்கியங்களுக்கூடாக வெளிப்படுத்திய உலக மனப்பான்மையும் இதன் இன்னொரு இயல்பான உலகக் கண்ணோட்டமாகும்.

சங்ககாலத்திற்கு முற்பட்டகாலந் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியிருந்தது. இது மேலைத்தேய, கீழைத்தேய வணிகத்தொடர்புகளாலும் ஏற்பட்டிருக்கலாம். இதனாலேயே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" (Every country is my country, every man is my kins man) என்றும் "பெரிதே உலகம் பேமனுநர் பேனுநர் பலரே" என்றும் " யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு" (குறள் 397).

கல்வி கற்ற ஒருவனுக்கு எல்லா நாடும், ஊரும் தனது போல இன்பமளிக்கின்றது. அப்படியாயின் ஏன் ஒருவன் தான் இறக்கும் வரை அறிவுதரும் நூல்களைக் கல்லாது தவிர்க்கின்றான் போன்ற உலக மனப்பான்மையை வெளிப்படுத்தும் வரிகள் அடிகளாரை ஆட்கொண்டது.

அத்தோடு புறச்சமயங்கள் தமிழ்நாட்டுக்குள் புகுந்த போது அவைகள் தமது சமயக் கொள்கைகள், கோட்பாடுகள், மெய்யியல்கள் பற்றி விழாக்களில் கருத்துரை வழங்கவும், ஒருவருக்கொருவர் தமது மதக் கருத்துக்களை வெளிப்படுத்தி வாதிடவும் முடிந்தது. அங்கே சமய காழ்ப்புணர்வு இருக்கவில்லை. தமிழர்களின் முதல் இலக்கிய இலக்கணங்களை உற்று நோக்கின் அவர்கள் என்றும் மதவாதிகளாக (கருத்து முதல் கோட்பாட்டாளர்) இருக்கவில்லை. இயற்கையை, சான்றோரைப் போற்றியவர்கள், பொருள் முதல்கோட்பாட்டாளர்கள்.

சமணமும், பௌத்தமும் இசைக்கலை, நாடகக்கலை போன்றவற்றை வெறுத்தனவாயினும், சமணராகிய இளங்கோவடிகள், சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர் தமிழ்க்கலைகளை மிக விரித்து எழுதியிருக்கின்றனர். பார்ப்பனரான நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரைகண்டுள்ளார். சமணரான இளம்பூரணர் அகத்திணையியலுக்கு உரைந்துள்ளார். இடைக்காலத்தில் வைணவர், சைவர் ஆன பார்ப்பனர்கள் சமண நூல்களுக்கு அவற்றின் பெருமை கருதி நுட்பமான சிறந்த உரைகளை எழுதியுள்ளனர். அண்மைக்காலங்களில் சமய சமரசக் கீர்த்தனைகள், சமரசக் கொள்கைகளென்று உண்மைக்கருத்துக்களை தமது நூல்களில் உள்வாங்கியுள்ளார்.

இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் திருக்காவலூர் கலம்பகம், தேம்பாவணி, சீறாப்புராணம் போன்றவற்றுக்குத் தந்த கருத்துக்கள் போல் வேறெவரும் எழுதவில்லையென்றும், வி. கலியாண சுந்தரமவர்கள், புத்தர், இயேசுகிறித்துவின் அருள் வேட்டல்களை இலக்கியமாய் பாடியுள்ளாரென்றும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் புத்தர், இயேசுவைப் பற்றி பாடியுள்ளாரென்றும் உலக மனப்பான்மையில் உருவான கண்ணோட்டம் பற்றி பெருமைப்பட கூறுகின்றார் அடிகளார். (Religion is not a Barrier, It is a Bridge) இக்கண்ணோட்டமே மதம் மாந்தனுக்கு எல்லையல்ல அது ஒரு பாலம் என்று புரியவைத்தது.

தமிழ் என்னும் வித்திட்ட, நீர் ஊற்றி வளர்த்து பெரிய பரந்த விரிந்த ஆலமரமாய் ஆக்கிவிட்டவர் உலகத்தமிழன் தனிநாயகம் அடிகள். அவர் தமது வாழ்நாளில் நான்கு உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தியுள்ளார்.

**முதல் மாநாடு**

மலேசியாத் தலைநகர், கோலாலம்பூர்.

*1966 - 04 - 16 தொடக்கம் 1966 - 04 - 23 வரை*

**இரண்டாம் மாநாடு**

தமிழ் நாட்டுத் தலைநகரம், சென்னை.

*1968 - 01 - 03 தொடக்கம் 1968 - 01 - 10 வரை*

**மூன்றாம் மாநாடு**

பிரான்சுத் தலைநகரம், பரீசு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1970 - 07 - 15 தொடக்கம் 1970 - 07 - 18 வரை*

**நான்காம் மாநாடு**

இலங்கை வடமாநிலத் தலைநகர், யாழ்ப்பாணம்.

*1974 - 01 - 03 தொடக்கம் 1974 - 01 - 10 வரை*

இந்த நிகழ்வின் இறுதி நாள் நடைபெற்ற இலங்கை அரசுக் காவல்துறையின் கண்மூடித்தனமான செயற்பாட்டால் பத்துத் தமிழ் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இதன் பின் அடிகளார் எந்த நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லை.

இறுதியாக இலங்கையரசு தமிழர்களுக்கெதிராகச் செயற்படுத்திய அவசரகால பயங்கரவாதச் தடைச்சட்டங்களுக்கெதிராக 1980 சித்திரை 26 இல் யாழ்ப்பாணத்தில் கூட்டமொன்றில் பேசினார். அடுத்து 27, 28 களில் "தந்தை செல்வா" நினைவு வளாகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். அவர் இறுதியாக கலந்து கொண்ட நிகழ்வு முனைவர் க.பொ.இரத்தினமவர்களின் வேலணையில் நடந்த நூல் வெளியீடாகும்.

இதில் (ஆடித்திங்கள் 1980 இல்) பேசும்போது, தமது உரையின் கடைசி வரிகளாக "கண்கள் பஞ்சடைந்து போகின்றது. கால்கள் நடக்க மறுக்கின்றன, ஆனால் தமிழ் பற்று மட்டும் என்னோடு இருக்கின்றது" என்று முடிக்கின்றார் 1980 ஆவணித் திங்கள் 30ஆம் நாள் இறவாப்புகழாளராகி மறுமையுள் நுழைகின்றார்.

இவரது மறைவுக்குப் பின் 5ஆம் மாநாடு மதுரையில் 1981 இல் நடைபெற்றது. இதில் தஞ்சாவூரில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைய வழிவகுத்தார். அன்றைய தமிழ் நாட்டின் முதலமைச்சர் மா. கோ. இராமச்சந்திரன் அவர்கள் (எம்.ஜீ.ஆர்). இதன் முதல் துணைவேந்தர் அடிகளாரின் உற்ற நண்பரும், தமிழாராய்ச்சி மன்ற உருவாகித் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்ற அடிகளாருடன் தோள்கொடுத்து நின்ற முனைவர் வ. ஐ. சுப்பிரமணியமவர்களாவார். (வ.ஐ.சு). இவர் 1983இல் அமரர். தனிநாயகம் அடிகளாருக்கு தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவிலே முனைவர் (கலாநிதி) பட்டமளித்து நன்மதிப்பு, (கௌரவிப்பு)ச் செய்தார்.

உலக அளவிலே தமிழை வெளிப்படுத்திய தனிப்பெரும் தமிழ்த் தலைவன் தனிநாயகம் அடிகளே. ஆனால் தமிழ் நாட்டின் வந்தேறி ஆட்சிகள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. 1964இல் நடைபெற்ற திட்டமிட்ட தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை காங்கிரசு ஆட்சி தவிர்த்தார்கள். இரண்டாம், ஐந்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் காலத்தில் தமிழ் மாநாடென்று களியாட்ட, கூத்தடிப்பை தமிழ் நாட்டு திராவிட அரசு செய்தது. இவை இரண்டையும் ஒன்றென நினைத்து ஆராய்ச்சி மன்றத்தின் மீது கண்டனங்களைக் கொடுத்தனர் சிலர். இதையும் சாக்காக வைத்து அரசியல் நடத்தினர் வந்தேறிகள். அசல் வித்தான தமிழனின் அரசுபோல் வருமோ இவையெல்லாம்.

எம்.பி. எமனோ தோமசுபறோ ஆகியோர் சமற்கிருத சொற்களின் வேர்களை வட மொழியில் தேடினர், கிடைக்கவில்லை. ஆனால் தமிழிய (திராவிட) மொழிகளில் அதைக் கண்டனர். ஆனால் இதை அவர்களால் உலகிற்கு வெளிப்படுத்த முடியவில்லை. அதேவேளை அடிகளாரின் தமிழியல் இதை வெளிப்படுத்தக் காரணமானது.

இவற்றின் சுருக்கமான பேரா. எம்.பி. எமனோ அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "அடிகளாரின் தோல்வி காணாத அமைதியும், ஆற்றல் மிக்கதும் எழுச்சித் தருவதுமான செயலாட்சித் திறனுமே அனைத்துலக தமிழராய்ச்சி மாநாடுகளின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளின் வெற்றிக்குக் காரணம். அவரது ஆற்றல் கோலாலம்பூரிலும், பரீசிலும் புலப்பட்டது. ஆனால் சென்னையிலும் யாழிலும் நடந்த இன்னல் நிறைந்த மாநாடுகளிலும் உணரப்பட்டது. இருபக்க இழுப்புடைய தேரைச் செலுத்துவது எளிதான காரியமல்ல" என்பார். ஆனாலும் அவர் மறைவிற்குப் பின் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையிலேயே தமிழாராய்ச்சியியல் காணப்படுவதாயினும் இலங்கை, இந்திய, மலேசிய, சிங்கப்பூர், தமிழ்த்துறையுள்ள பல்கலைக்கழகங்களில் இத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை இரண்டோ அல்லது மூன்றோ ஆண்டுகளுக்கொரு முறை நடத்தி தமிழ் மொழிக்கு மெருகூட்ட முடியுமென்பதைத் தமிழ் கல்வியற் சான்றோர், அடிகளால் வழிநின்று செயற்படுவோர்களேயானால் தமிழரால் பல சாதிக்க முடியும், செய்வார்களோ?

அவரை நினைவு கூறும் விதத்திலாவது செயற்படுவார்களா? இதுவே நாம் அவருக்கு அதாவது தமிழ் அன்னைக்குச் செலுத்தும் நன்றிக்கடன். இருந்தாலும் அடிகளாரின் தமிழ் ஆலமரமான உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இன்று ஏதோ செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில் தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை ஒன்றையும் தொடங்கி சில ஆக்கங்களைச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இது பாராட்டப்படவேண்டிய ஒன்றே. ஆனாலும் அடிகளாரின் அளப்பரிய தமிழ்ப்பணிக்கு இது போதுமானதாகாது. உலகத்தமிழர் அனைவரும் கைகோர்த்து தமிழன்னையை வாழ வைக்க தனிநாயகமான தமிழ் நாயகன் வழிநிற்போம்.

*வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப் பாடல்கள்
# பாடல் - 01
# இன்னருள் செய்வாய் தம்பிரானே

திருமதி ப. வைரமுத்து
புளியம்பொக்கணை

இன்னருள் செய்வாய் எம்பிரானே
நன் மக்களைப் பெற்று நாடு உய்ய வேண்டும்
நல் ஆட்சி என்றும் நடந்திடல் வேண்டும்
பல் உயிரும் நன்மை பெற்றிடல் வேண்டும்
இன்னருள் செய்வாய் எம்பிரானே தம்பிரானே

நீதி நாயக முதலியின் சுதனாய் வந்தவனே
நீதி கேட்டு நாமுமைச் சரணடைகின்றோம்
தமிழர் யாமென்று தலை நிமிர்ந்து வாழ
தயவுடன் அருள்வாய் கருணையின் கடலே
இன்னருள் செய்வாய் எம்பிரானே தம்பிரானே.

மண் சுமந்த மேனியனாய் செல்விக்கு அருள் செய்தவனே
புண் சுமந்த உளங் கொண்டு போற்றி நிற்கின்றோம்
எண்ணற்ற உளங்களின் வேதனை நீ அறிவாய்
கண் கொண்டு எமைக் காத்திடுவாய் ஐயா
இன்னருள் செய்வாய் எம்பிரானே தம்பிரானே.

நந்தியின் கொடி உயர்த்தி நமைக் காப்போனே
முந்தியில் நாம் செய் நல்வினைப் பயனதாலே
இம்மையில் உமைப்பணியும் பேறு பெற்றோமே
மறுமையிலும் இப்பணி தொடர வேண்டும் பிரானே.
இன்னருள் செய்வாய் தம்பிரானே எம்பிரானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் - 02
## நாடு செழிக்க வேண்டும் தம்பிரானே

நாடு செழிக்க வேணும் தம்பிரானே
நின் நல்லாசி கிடைக்க வேணும் தம்பிரானே
புளியம்பொக்கணை நல்லூரில் தம்பிரானே
புனிதர் கோயில் கொண்ட கதை சொல்வாம் தம்பிரானே
சிவனார் கோயில் கொள்ள வேண்டியல்லலோ தம்பிரானே
சிறு அரசு ஒன்று தவமிருந்தது தம்பிரானே
சிவன் சென்னிமீதுள்ள கங்காநதியில்
சிவனார் சிறிது அருளினாற்போல் தம்பிரானே
தென் கீழ்த் திசையினிலே ஒரு குணமும்
தெண்டனிட்டு வணங்கி வந்தது தம்பிரானே
முதல்வனாம் நீதிநாயகம் கொழுந்துப் புலவினிலே
முதல்வி கமலம்மையைக் கரம்பிடித்தான்
இல்லை என்ற குறையில்லாது வாழ்ந்தாலும்
இல்லைப் பிள்ளை என்ற குறை இருந்ததினால்
சங்கரனின் அருளை வேண்டி நோன்பிருந்தார்
சங்கரனின் அருளினாலே தம்பிரானே
முதலி மாப்பாணன் பிறந்தானல்லோ
முதலிக்கு அடுத்தவனாய் வவுனியனும் பிறந்தானென்று
பெற்றோர் பெரு மகிழ்ச்சி கொண்டிருந்தார்
பெண் பிள்ளை இலை என்று தம்பிரானே
பெரும் தவம் இருந்து வந்தார் தம்பிரானே
கமலம்மையின் கருவினிலே தம்பிரானே
தாமே பிறப்போமென்று தம்பிரானே
சிவபிரானும் முடிவெடுத்தார் தம்பிரானே
பங்குனி உத்தரப் பௌர்ணமியில்
பெண் வன்னி நாச்சியார் பிறந்த போது
பாம்புருவாய்க் கூடி அவதரித்தீர்
உலகம் உய்ய வென்றோ தம்பிரானே
உருமாறிப் பிறந்தீரையா தம்பிரானே
கமலம்மையும் உமை அணைத்து தம்பிரானே
கருத்தாய் வளர்த்து வந்தார் தம்பிரானே
வளர்ந்து வரும் காலத்திலே தம்பிரானே
வளர் பிறையாய் நிறைந்தீர் ஐயா தம்பிரானே.
அயலிலுள்ள அரவமெல்லாம் தம்பிரானே
அண்டி உமை அணைந்து வந்தார் தம்பிரானே
கூடி விளையாடுவீர். குதித்தும் நீர் ஓடிடுவீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடெல்லாம் நிறைந்திடுவீர் தம்பிரானே
வன்னி நாச்சானோடும் விளையாடுவீர்
வவுனியனும் மாப்பாணனும் சேர்ந்திடுவார் தம்பிரானே
காலக் கிரமத்தில் அவர்களெல்லாம்
கலியாணம் செய்து சென்றார் தம்பிரானே
அம்மை அப்பரோடு அன்பாக நீர் இருந்தீர் தம்பிரானே
நில புலன்களைப் பிரித்தெழுத தம்பிரானே அங்கே
நீதி நாயகம் முடிவெடுத்தார் தம்பிரானே
மூன்றாக வகுத்து எழுதும்போது தம்பிரானே
முடியவில்லை அவர்களாலே தம்பிரானே
எழுத்தாணியைப் பறித்து எடுத்தீர் தம்பிரானே
எழுத்தோலையையும் கிழித்து எறிந்தீர் தம்பிரானே
எழுத்தோலையும் கிழித்து எறிந்தீர் தம்பிரானே
நான்கு பாகமாய் வகுத்தபோது தம்பிரானே
நலமாக ஆமோதித்தீர் தம்பிரானே
அயலில் உள்ள அரவங்களோடு தம்பிரானே
ஆடிவரும் ஒரு நாளில் தம்பிரானே
அதிகாலை வேளையிலே தம்பிரானே
அம்மை முற்றம் அலகிட்டாள் தம்பிரானே
அம்மை முற்றம் அலகிட்டாள் தம்பிரானே
அவ்வேளை ஆய்க்கினைகள் பல செய்திட்டீர் தம்பிரானே
போயோ தொலையுங்கள் என்று சொல்லி அம்மை
பொறுமையில்லாது அடித்தாள் தம்பிரானே
போயோ மறைந்திட்டீர் தம்பிரானே
போன இடம் காணாமல் தம்பிரானே
தாங்கவொண்ணா துயரங்கொண்டு தம்பிரானே
தேம்பி அழுத்திட்டார் தம்பிரானே
இறைவன் அருளினாலே தம்பிரானே
இரவு ஓர் கனவு கண்டார் தம்பிரானே
நீதி நாயகம் கண்டிட்ட கனவினிலே அது
நீல கண்டன் செயல் என்று அறிந்திட்டார் தம்பிரானே
அரவங்கள் போன இடத்தையெல்லாம் தம்பிரானே
அந்தக் கனவின் குறிப்பால் உணர்ந்திட்டார் தம்பிரானே
உற்றார் உறவுகளைக் கூட்டியெல்லோ
உடனே புறப்பட்டார் தம்பிரானே
சங்கு, சல்லரி, பறை முழங்க தம்பிரானே
பூத்தட்டு, ஆலவட்டம், குடை, சாமரை தம்பிரானே
பலப்பல வரிசை வாத்தியங்களோடு தம்பிரானே
கொக்காவில் காட்டினூடே தம்பிரானே
கெதி கெதியாய் நடந்து சென்றார் தம்பிரானே
அடியொற்றிச் சென்றார்களாம் தம்பிரானே
அரவ அடிச்சுவீட்டை எல்லாம் தம்பிரானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை மிக்க புதூர் எனும் பதியிலே தம்பிரானே
பரந்து உயர்ந்த பாலைமரப் பொதும்பரிலே தம்பிரானே
அரவுகள் எல்லாம் இருக்கக் கண்டு தம்பிரானே
ஆனந்தம் கொண்டழுதார் தம்பிரானே
திரு முழுக்கிட்டு வந்தார்
தீப தூபம் காட்டி நின்றார்
மனம் உருகி வேண்டி நின்றார்
பொறுத்தருள வேண்டும் என்று அழுதார் தம்பிரானே
செபங்கள் பல சாற்றி நின்றார்
தட்டை எடுத்து வைத்தார்
பட்டை மேலே பரப்பி வைத்தார்
என்ன அதிசயமோ தம்பிரானே
நின் கருணை நாமறிவோம் தம்பிரானே
பட்டின் மேல் வந்தமர்ந்தீர் தம்பிரானே
பயப்படவேண்டாமென்றோ தம்பிரானே
உருவைச் சுருக்கி வைத்தீர் தம்பிரானே
உச்சி மீது சுமந்து வந்தார் தம்பிரானே
பல்லியம் முழங்கவல்லோ தம்பிரானே
பவ்வியமாக வந்தீரையா தம்பிரானே
உயிலின் எழுத்துப்படி தம்பிரானே
உமக்குரிய எல்லையிலே கோயில் கொண்டீர்
தவமிருந்த அரசமரம் தம்பிரானே
தலை வணங்கி வரவேற்று நின்றது தம்பிரானே
வலப்பக்கமதில் சிவபிரானும் உமையம்மையும் தம்பிரானே
நாகேஸ்வரர் நாகேஸ்வரியாய் கோயில் கொண்டார் தம்பிரானே
நித்திய பூசையெல்லாம் தம்பிரானே
நியமமாய்ச் செய்திட்டார் தம்பிரானே
கொக்காவில் ஊடே புதூர் வரை தம்பிரானே
அரவங்கள் அரைந்து சென்ற இடமெல்லாம் தம்பிரானே
புல் பூண்டு முளைப்பதில்லையாம் தம்பிரானே
நாகம் சரிந்த சோலையாச்சு தம்பிரானே
புதூர் போன காலமென்று தம்பிரானே
மார்கழி மாதமெல்லாம் கதவடைப்பு செய்திடுவார் தம்பிரானே
தைபிறந்த காலையிலே தம்பிரானே
கதவு திறப்பு பொங்கலிட்டு மகிழ்ந்திடுவர் தம்பிரானே
பங்குனி உத்தர நன்நாளிலே தம்பிரானே
பெரும் பொங்கலிட்டுப் பூசை செய்வார் தம்பிரானே
வன்னி நாடெல்லாம் தம்பிரானே
விழாக்கோலம் பூண்டு நிற்கும் தம்பிரானே
அயல் நாட்டில் உள்ளோரும் தம்பிரானே
அடி வணங்கிச் செல்வார்கள் தம்பிரானே
வேண்டி நிற்கும் வரங்கள் எல்லாம் தம்பிரானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாப்போர் அருள்பவனே தம்பிரானே
பிள்ளை அற்றோர்க்குத் தம்பிரானே
பெறும்பேறு அருள்வீரே தம்பிரானே
நோய் நொடி போக்கிடுவீர் தம்பிரானே
நோகாமல் காத்திடுவீர் தம்பிரானே
உள்ளம் உருகி வேண்டும் போது தம்பிரானே
உடனே வந்து காத்திடுவீர் தம்பிரானே
நீதி நாயகமுதலியின் பின் தம்பிரானே
வவுனியமுதலி கோயில் கட்டிப் புதுப்பித்தார் தம்பிரானே
பங்குனிப் பொங்கலுக்காய் தம்பிரானே
எட்டு நாட்கள் முன்பதாகத் தம்பிரானே
விளக்கு வைத்தல் பூசை நாளில் தம்பிரானே
வெள்ளிப் பிரம்பு கொடுப்பார் தம்பிரானே
பிரம்போடு மாட்டு வண்டியில் தம்பிரானே
பிரமாண்டமாய் முன்னே செல்லத் தம்பிரானே
தொடரணியாய்ப் பல வண்டில் தம்பிரானே
தொடர்ந்து போகும் காட்சியெல்லாம் தம்பிரானே
மெய் சிலிக்க வைத்திடுமே தம்பிரானே
மடுக்கரை ஊடாகத் தம்பிரானே
சாவகச்சேரிவரை சென்று தம்பிரானே
வேண்டு பண்டமெல்லாம் தம்பிரானே
வேண்டி வந்திடுவர் தம்பிரானே
போகும் வழியெல்லாம் தம்பிரானே
வரவேற்பின் பெருமையெல்லாம் தம்பிரானே
வார்த்தையினால் அளந்திடல் முடியாதையா
ஒல்லாந்தர் ஆட்சிக் காலமதில்
ஒருபோது நடந்திட்ட செய்தி ஒன்று
மாட்டு வண்டில் தொடரணிகள் தம்பிரானே
மடுக்கரையில் வந்திட்ட போதினிலே
வழக்கம் போல ஊர் மக்களெல்லாம்
வணங்கி வந்து உபசரித்தார் தம்பிரானே
பண்டம் கொண்டு வந்த மாடுகளும்
பண்டத்தோடு வந்திட்ட அடியவரும்
இளைப்பாறி பசியாற இருக்கும் வேளையில்
திடுக்கென ஒல்லாந்தர் வந்திட்டாரே
திகைத்து நின்றார் அடியவரும்
குதிரை மீது வந்திட்ட படையினரும்
குதித்து இறங்கிச் சீறினார்கள் தம்பிரானே
பூசகரைப் பார்த்து ஒல்லாந்ததுரையும் தம்பிரானே
பூசலோடு பேசலுற்றான் தம்பிரானே
தங்களுக்குச் சொந்தமான இந்தநாட்டிலே
தயங்காது பண்டம் சேர்த்திரென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் மதம் மட்டும் தான்
தரணிதனில் உண்மை மதம் என்று நின்றான்
குலதெய்வம், பொங்கல் என்று நீர் கூறும்
கூற்றையெல்லாம் நம்பமாட்டோம்
என்றான் துரை, தம்பிரானே
உங்கள் தேவு பாம்பு என்று சொல்லுகிறீர்
உண்மையான தேவு என்றால்
உடனே காட்ட வேண்டும் என்றான் தம்பிரானே
உண்மையாகக் காட்டாவிட்டால் தம்பிரானே
தாங்கவொண்ணா தண்டனைகள் உண்டு என்றிட்டான் துரை தம்பிரானே
சிவனாரை மனதில் உன்னிப் பூசகரும்
சில கணத்தில் காட்டிடுவேன் என்றிட்டார் தம்பிரானே
புது வளந்துப் பானை ஒன்று, புது வெள்ளைப்பட்டு ஒன்று தம்பிரானே
புதுப்பட்டை முறுக்கி எல்லோ தம்பிரானே
புதுப்பொங்கல் பானைக்குள் இட்டாரையா தம்பிரானே
தூப தீபம் காட்டிநின்றார் தம்பிரானே
தூய்மையான மனத்தினனாய்த் தம்பிரானே
துயர்களைய வேண்டும் என்று தியானித்தார் தம்பிரானே
புதுப்பானைக்குள்ளிருந்து தம்பிரானே
புறப்பட்ட புற்றரவு ஒன்று தம்பிரானே
உருவெடுத்துப் படம் விரித்து ஆடியதே
மெய்யுருகி நின்றாரையா பூசகரும்
மேனி சிலிர்த்து நின்றார் அடியவரும்
மன்னிக்க வேண்டும் என்றார் ஒல்லாந்தரும்
மன்றாடி நின்றாரையா துரைக்கூட்டம்
மறுகணமே நேர்த்தி வைத்தார் ஒல்லாந்தரும் தம்பிரானே
பொங்கல் நாளன்று வந்திடுவோம் என்று தம்பிரானே
பொறுப்பாகச் சொல்லிச் சென்றார் தம்பிரானே
வெள்ளிப் பாம்புப் படமொன்றுடனே தம்பிரானே
வரிசை பல வைத்துத் தம்பிரானே
வலம் வந்து வணங்கிச் சென்றார் தம்பிரானே
எண்ணிலடங்கா நின் புதுமைகள்
எடுத்துச் சொல்லி முடியாது தம்பிரானே
கருணைக் கடலே தம்பிரானே
கண்கண்ட தெய்வம் நீரையா
எடுத்துச் செல்லும் வார்த்தைகளில் தம்பிரானே
எளியேன் பிழை ஏதும் விட்டிருந்தால்
பொறுத்தருள வேண்டுமையா தம்பிரானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகிறது கலாசாரம்

கண்டாவளையூர் இளங்கவி
கூகை மாவடி.

சின்னத்திரை போட்ட சிறைக்குள் பிடிபட்டு
உன்னத பண்பாட்டின் விருந்தோம்பல் குறைக்கப்பட்டு
எண்ணிய செயல்கள் இடை நிறுத்தப்பட்டு
வண்ணத்தமிழ் பெண்ணினம் வழிதவறி நிற்கிறது.

உண்டி கொடுத்து உபசரித்தலும்
உண்டார் மகிழ கலை கொடுத்து மகிழ்வித்தலும்
அன்றோடு அழிந்துவிடுமோ எனும் நிலையறியாது
மன்றாடுகின்றார்கள் தினமும் சின்னத்திரைகளோடு.

அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்பும்
உச்சமாய்க் கொண்ட எம்சில பெண்கள் அதனை
துச்சமாய் நினைத்து ஆடைகளைக் சொச்சமாய் சுமந்து
அச்சமேயின்றி அசிங்கப்பட்டு அலைகிறார்கள்.

ஆசாரமே கலாசாரம் என்று இருந்த பெண்ணினம்
பாசானம் பருகி மயங்கியவர் போல் நிலைமாறி
ஆசாரம் தொலைத்த நிலைகண்டு- எங்கள்
ஈசான மூர்த்தி கூட ஏதுமறியாது நிற்கிறார்.

ஆண்கள் ஆடை பொத்தான் குறைகின்றபோது
அசிங்கமாய் காவாலி என்றவர்கள் இன்று
பெண்கள் ஆடை பொத்தான் குறைவது கண்டு
மொடல் கேள் என்று மோசமின்றிச் சொல்கிறார்கள்.

கலாசாரமே கலைந்து போகாதே- என்றும்
ஆசாரமே ஆணிவேராய் கொண்ட எம்மினம்
சேதாரமாய் சில்லறையாகி சீர்குலையாது என்றும்
ஆதாரமாய் அமைந்திட அனைவரும் வழி வகுப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்



இருப்பவர்கள் : திரு. கா.பாலேஸ்வரன், திருமதி து.தனுஷா (செயலாளர்), திரு. த.முகுந்தன் (தலைவர்), திரு. தி.பிரபாகரன் (உபதலைவர்), திருமதி கோ.தேவப்பிரியா (பொருளாளர்)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திரு. சி. சிவராஜ், திரு. ந. றொபட்நிக்சன், திரு. பெ. புண்ணியராஜ், திருமதி ஜெ. வராகினி, திரு. பா. சசிகரன், திரு. செ. அஜித்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

நட.நிக்சன்
கோரக்கன்கட்டு.

இன்றைய உலகப் போக்கில் மனித இனம் பலவிதமானகண்டுபிடிப்புக்கள்மூலம்முன்னோக்கிய பார்வையுடன் பயணிப்பதை நாம் அறிவோம்.

இந்த நவீன வளர்ச்சியானது மனித வாழ்வியலில் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதும் வெட்ட வெளிச்சம். இந்த அதிவேக வளர்ச்சியை இரு கண்ணோட்டத்தில் பார்க்கலாம் அவை, நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் நோக்கப்படுகின்றது. இங்கே ஒவ்வொரு மனிதனும் தத்தமது பார்வையில் எடுத்துக்கொள்ளுகின்ற பொழுது எதிர்மறையானவை பல பின் புல பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

ஒருவருடைய எண்ண ஓட்டத்தில் எதிர்மறையான சிந்தனைகளும், நிறைவேற்றப்படாத ஆசைகளும் தாக்கம் செலுத்துகின்ற பொழுது பல்வேறுபட்ட மன அழுத்தத்துக்கு ஆளாக நேரிடுகிறது. இவ்விடயத்தில் அவன் தனிமையை தனதாக்கிக் கொள்கிறான். இந்த சந்தர்ப்பத்தில் தான் அவனுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள், ஆற்றுப்படுத்தல்கள் தேவைப்படுகின்றது. இவ்விடயத்தில் கல்மனங்களையும் உருக வைக்கும் கலையானது முக்கியத்துவம் பெறுகிறது.

மெல்ல ஓடும் நீர் கல்லையும் உடைத்துப் பாயும் என்பது போல, கலையானது கல்மனங் களையும் உருக வைக்கும் சக்தி கொண்டது என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

ஆனால் இன்று இக்கலையை வெளிப்ப டுத்துவதற்கான கழகங்கள், இருக்கின்றன அல்லது கழகங்கள், மன்றங்கள் இயங்குகின்றன. முன்னொரு காலத்தில் ஆலய திருவிழாக்களிலும் பிரத்தியேக மேடைகளிலும் நிகழ்த்தப்பட்ட கலை வடிவங்கள் இன்று அற்றுபோய் இருக்கிறது.

ஆனால் தற்போது சினிமா யுகம் அதிக இலத் திரனியல் ஊடகங்களில் அதிக தாக்கம் செலுத்துகிறது

அத்துடன் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது. இவை அனைத்தும் ஒருபுறம் இருக்க, சமூக, கலை, கலாசார, பண்பாட்டு முக்கியத்துவத்தை உணர்ந்து வாழ்க்கைப் புறழ்வுகளில் இருந்து மீட்டு கலைப் பணியினை முன்னெடுப்பதற்கு அல்லது செவ்வனே நிறைவேற்றுவதற்கு, கலை மன்றங்களுடைய பங்கும் முக்கியத்துவம் அடைகிறது. இம்மன்றங்களானது எமது கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய 05 மன்றங்களே இயங்கி வருகின்றன.

இப்பணியை வலுப்படுத்துவதற்கு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் கலை மன்றங்களை அமைத்து செயற்படுத்துவதே சாலச் சிறந்தது ஆகும்.

ஆனால் இன்று இயங்கி வருகின்ற கலை மன்றங்களிலும் எத்தனை மன்றங்கள் சமூக நோக்கோடு செயற்பட ஆரம்பித்திருக்கிறது. இதன் தேவையே அவசியமானது. அவர்களுடைய சமூகப் பார்வைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் விரும்பத்தக்கது.

இன்று இயந்திர மயப்படுத்தப்பட்ட சமூக நீரோட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவதற்கு தடையாக இருக்கிறது என்ற கூற்றுக்கு முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும். இச் சூழ்நிலையில் கலைக்கான தேடலை அதிகரித்துக் கொள்வதற்கு உரிய வழிகாட்டல்கள் அவசியமாகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரும்காலம் நோக்கி...

✍ தனுஜா
கிளி/ முருகானந்தாக் கல்லூரி

ஆல மரங்கள்- இன்னும்
ஆழ மரங்களாகவே!
கிளைகள் துளிரவில்லை
வேர்கள் மட்டும்..

தாவித் தவித்து
தனக்குள் உரிமை தேட
முயல்கள் தவித்த போது
புலிகள் துரத்தின..

உறவுகள் விலக்கி
உறவு விலக்கி
உயிர் காக்க நினைக்க
அரிகள் வீழ்த்தின..

புலிக்கும் அரிக்கும்
இடையில் மாட்டி
இணக்கம் தேடி துணிந்த போது
நரிகள் ஓட்டம் பிடித்தன..

நதியில் முயல்களோ!
முழக்கத்திற்கும் முணுக்கத்திற்கும்
இடையில்
மூழ்கித் தவித்தன..

அத்தனை இன்னல்கள்
அடியோடு தாண்டி
அகிலம் புதிதாய் நோக்கிய போது
அணைகள் வரத்தொடங்கின...

அணுவணுவாய் சிதைந்த
ஆலமரம்..!
அடியில் உயிராய்...
காலம் வரும் என எண்ணி..

மழைகள் ஓய்ந்து போனது போக
மனிதாபிமானம் இழந்து
மரித்துக் கொள்கிறது- இன்றைய
மாட்சிமை!

ஒற்றுமை ஒற்றைக்கால் இழந்து
பாசம் பலி கொடுத்து
உறவு தலையிழந்து
ஊற்று வற்றி நிற்கிறது உறவுகள்...

காலம் தலையிழந்தாலும்
துளிராத ஆலமரம்
இன்னும் நிலையாகவே
வரும் காலம் நோக்கி..

இன்னும் கிளைகள் துளிரவில்லை
வேர்கள் மட்டும்.......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : செல்வி இ.ராதிகா (ADR), திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த.முகுந்தன் (DS), திரு. பூ.ராஜ்வினோத் (ADP), திரு. கு.சிவலிங்கம் (AO), திரு. கோ. சேகர் (Admin GN)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : செல்வி க. செஞ்சுடர் (MA), திருமதி ஜெ. சாரதகலா (MA), செல்வி வி.இலதாங்கி (MA), செல்வி சி.கஸ்தூரி (MA), திருமதி த.தேனினீ (DO), திருமதி ச.உஷா (DO), திருமதி ரா.விஜிதா (MA), செல்வி ர.விதுஷா (MA), செல்வி செ.பிரவீனா (MA), திருமதி கே.விஜயராணி (MA), திருமதி பி.நிசாந்திகிருஷ்ணா (MA), திருமதி கௌ.தாரணி, திருமதி சி.சிவசோதி (Chief MA), செல்வி சோ.தாரணி (Trainee)

நிற்பவர்கள் (2 ஆம் வரிசை) : திரு. வே.தங்கநாதன் (OES), திரு. ச.ரஜீவன் (Driver), திரு. ஜ.குமாரசூரியர் (Driver), திரு. க.இராசகுமார் (DO), திரு. சி.நீலமேகர் (OES), திரு. கு.ஸ்ரீகுமார் (OES), திரு. இ. யசோதரன் (DO), திரு. இ. மதனகுமார் (DO), திரு. பொ.சுலக்சனன் (DO), திரு. இ.லொ.அன்சிலின் பெகின் (DO), திரு. வ.வரேந்திரன் (MA), திரு. த.கிருஷ்ணகுமார் (DO), திரு. ஆ.பாலசந்திரன் (OES)

## கிராம அலுவலர்கள்



இருப்பவர்கள் : திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த.முகுந்தன் (DS), திரு. பூ.ராஜ்வினோத் (ADP), திரு. கு.சிவலிங்கம் (AO), திரு. கோ.சேகர் (Admin GN)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திரு. த.நந்தகுமார் (GN), திரு. செ.அஜித்குமார் (GN), திரு. ந.அம்பிகைபாலன் (GN), திருமதி ஆ.சாந்திகிருஷ்ணா (GN), திருமதி கே. விஜயநிர்மலா (GN), திருமதி கு.துஸ்யந்தினி (GN), திருமதி கி.குணாளினி (GN), திருமதி த.விஜயசாந்தினி (GN), செல்வி நீ. நீலவேணி (GN), திருமதி வி.அஜந்தா (GN), திரு. சி.கௌரிசங்கர் (GN), திரு. ச.சந்திரன் (GN), திரு. தி.கலைரூபன் (GN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய மருத்துவத்தில் மருந்தில்லா மருத்துவக் குறிப்புகள்

✍ ந. சிவசுப்பிரமணியம் (வாணி)
ஆயுள்வேத வைத்தியர்,
வாணி வைத்திய நிலையம்
புன்னைநீராவி, விஸ்வமடு.

எமது மக்களின் பாரம்பரிய மருத்துவமுறை சித்த ஆயுள்வேத மருத்துவ முறையாகும். ஏறத்தாழ மூவாயிரம் மூலிகைகளின் பயன் கண்டறியப்பட்டுள்ளது. தற்போதும் மூலிகைகள் பற்றிய ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்று நாம் மூலிகைகளினால் அடையும் நன்மைகள் எல்லாம் எமது முன்னோரையே சேரும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவக் குணமுள்ள மூலிகைகள் கண்டறியப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அலோபதி (ஆங்கில) மருத்துவ முறைகள் பிரபலமாவதற்கு முன்னர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு வீடுகளிலும் கருஞ்சீரகம், கண்டதிற்பலி, வாய்விளங்கம், வசம்பு, அதிமதுரம், கராம்பு, உள்ளி, ஓமம், சீரகம், மிளகு, சுக்கு, இஞ்சி போன்ற பல அரிய மருத்துவப் பொருட்களை வைத்திருப்பார்கள்.

பல வீடுகளிலும் மூலிகைச் செடிகளான துளசி, மஞ்சள், ஆடாதோடை (பாவட்டை) இஞ்சி, ஊமத்தை, ஆமணக்கு, கரிசலாங்கன்னி, குப்பைமேனி, கற்பூரவள்ளி, குறிஞ்சா, சீந்தில், தூதுவளை, வாதமடக்கி முதலானவை வளர்க்கப்பட்டு வருவது சிறந்த பொழுது போக்காக அமைந்திருந்தது.

எந்த நோய் என்றாலும் பழைய காலத்தில் பாட்டிமார்கள் வீட்டிலே உள்ள மூலிகைப் பொருட்களைக் கொண்டு வைத்தியம் செய்வார்கள். பெரும்பாலான பிரசவங்கள் கூட வீட்டிலேயே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இன்று நிலைமை வேறு விதமாக மாறியுள்ளது. ஒவ்வொரு வீடுகளிலும் விதம் விதமான, நிறம் நிறமான மாத்திரைகள் கொண்ட ஒரு மருந்தகமே காணப்படுகின்றது. எமது பாரம்பரிய மருத்துவத்தில் ஒரு மூலிகை மாத்திரை பலவிதமான நோய்களை மாற்றக்கூடியதாக இருக்கின்றது. ஆயுர்வேத மருந்துகள் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். எமது பழைய விழுமியங்களை எமது சமுதாயம் மறந்து வருவது வேதனைக்குரியதே.

"இம்பூறல் இருப்பது தெரியாமல்
இரத்தம் கக்கி இறந்தானாம்"

என்றும்

"பத்து மிளகு இருந்தால்
பகைவன் வீட்டில் கூட உணவு உண்ணலாம்"

என்றும் பல பழமொழிகள் வழங்கி வருகின்றன.

அந்த வகையிலே ஆயுர்வேத மருத்துவம், எந்த ஒரு பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாதவையாகும்.

மெய்யறிவான ஞானத்தை உணர்த்தியவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர். இவர்கள் யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம் என வாழ்ந்தவர்கள்.

சித்தனே திருவாலவாய் மேவிய
அத்தனே அஞ்சல்........... ஏற்றருள் செய்

என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடியதையும் நாம் உணர வேண்டும்.

மூலிகைச் செடியின் ஒவ்வொரு பகுதியும் பயன்பாடுடையவை (பூ, தோல், தண்டு, வேர், பட்டை போன்றவை)

"அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலப் பெய்த கூழ்கட்டுவைத்தனர்"

(திருமந்திரம் 160)

எனத் திருமூலர் தனது திருமந்திரத்திலே சிறப்பித்துள்ளார்.

**அருகம்புல்**

இது ஆயுர்வேத வைத்தியத்தில் கீரை வகைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

அருகம்புல் வாத பித்த ஐயமோ - பீடை
சிறுக வலுக்கு மின்னர் செப்பி - ஷிவுதரங்
கண்ணோயொடு தலை நோய் கண் புகையிரத்து பித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர்யொழுக்கு முறை.....

(பழம்பாடல் போகர்)

### கடுக்காய்

"காலையிலே இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்
கோலை ஊன்றிக் குனுகி நடந்தவன்
கோலை விட்டுக் குலுக்கி நடப்பான்"

என்ற பாடல் திரிகடுகம், சுக்கு இவற்றை நாம் உணவில் சேர்த்து வந்தால் கோல் பிடித்து நடந்துவரும் கோலை விட்டு நடக்க முடியும் எனக் கூறுகின்றது.

### வெங்காயம்

"வெங்காயம் அக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்து இருப்பார் இச் சரக்கை மங்காக
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே!

(சொக்கநாதப் புலவர்)

எமது பாரம்பரிய தமிழ் வைத்தியத்தை தமிழ் இலக்கியம் எவ்வாறு கையாண்டது என்பதை அறிய முடிகின்றது.

இலந்தைப் பழம் வாதநோய் நீக்கும், பித்தத்தைத் தணிக்கும் உடலுக்குப் பலம் தரும். இவ்விதம் பல நன்மைகள் இப்பழத்தில் உண்டு.

பூப்பூவாய் பூத்திருக்கு
பூமியிலே ஆயிரம் பூ
பூவிலே சிறந்த பூ
செம்பரத்திப் பூ

இது தங்கச் சத்துள்ள பூவாகும். இப்பூவில் பலவிதமான மருத்துவக் குணங்கள் அடங்கியுள்ளது.

### மருந்தில்லா மருத்துவக் குறிப்புகள்

- தேசிக்காய்ச் சாற்றுடன் சம அளவில் துளசிச் சாறு சேர்த்து முகத்தில் பூசிவர தேமல் மறைந்து விடும்.
- வேப்பம் இலையை அவித்துக் குளித்தால் சொறி சிரங்கு ஒவ்வாமை நீங்கும்.
- வசம்பை சிறிது நீர் விட்டு அரைத்து தலையில் பூசி அரைமணி நேரத்திற்குப் பின்பு முழுகினால் பேன் தொல்லை நீங்கும்.
- நெருப்பு சுட்ட புண்களுக்கு முள்ளங்கியை அரைத்துப் பூசிவர நீர் வடிதல் நின்று விடும். காயமும் மாறிவிடும்.
- இரவு நித்திரை வராமல் இருப்பவர்கள் ஒரு கிளாஸ் சூடான பாலில் சிறிதளவு தேன் கலந்து குடித்து வர நல்ல நித்திரை வரும்.
- சின்ன வெங்காயச் சாற்றை தலையில் பூசிவர பொடுகு நீங்கும்.
- தினமும் காலையில் பாகற்காய்ச் சாற்றுடன் சிறிது எலுமிச்சம் சாறு கலந்து அருந்திவர இரத்த சுத்தி ஏற்படும் சொறி சிரங்கும் மாறும்.
- கண்ணுக்குக் கீழ் பகுதியில் கருவளையம் (கறுப்பு) இருப்பின் பாலாடையுடன் மஞ்சள் பொடி கலந்து பூசிவர இல்லாமல் போகும்.
- உதடு கறுப்பாக இருப்பின் கரட் சாற்றை ஒருவாரம் உதட்டில் பூசிவர கறுப்பு நிறம் மறைந்து விடும்.
- அறுகம்புல்லைச் சிறு துண்டுகளாக்கி நல்லெண்ணெயில் போட்டு ஒருவார காலம் வெயிலில் வைத்த பின்பு தலையில் தேய்த்து சுடுநீரில் குளித்து வர இளநரை மாறுவதுடன் கண்கள் பிரகாசமாய் மாறும்.
- பசி எடுக்கவில்லை எனச் சிரமப்படுபவர்கள் காலையில் வெறும் வயிற்றில் சிறிது கொத்தமல்லியை மென்று சாப்பிட்டு வர நல்ல பசி உண்டாகும்.
- வாழைப்பூவைச் சாறு பிழிந்து காலை, மாலை இரு வேளையும் ஒரு வாரம் குடித்து வர இரத்த மூலம் குணமாகும்.
- கரட், தக்காளி, கோவா போன்றவற்றை பச்சையாகச் சாப்பிட்டு வர முகத்தில் இருக்கும் சுருக்கம் மாறும்.
- தேங்காய்ப் பாலைத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் கூந்தல் கருமை பெறும்.
- கண் புருவங்கள் அடர்த்தி பெற சுத்தமான ஆமணக்கு எண்ணெய்ப் பூசி வந்தால் போதும்.
- மணத்தக்காளிக் கீரையைப் பருப்புடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் மூலநோய் குணமாகும்.
- மாம்பழச் சாறு, கரட் சாறு இரண்டையும் கலந்து பாவித்து வர தோல் நோய்கள், முகப் பருக்கள் மறையும்.
- சிறிதளவு நீரில் வசம்பைத் தூளாக்கிப் போட்டுக் காய்ச்ச வேண்டும். நன்றாக ஆறியவுடன் நெற்றியில் பற்றுப்போட ஒற்றைத் தலைவலி குணமாகும்.
- குடற்புண்ணுக்கு வாழைப்பூவையும் முருங்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரையையும் வதக்கிச் சாப்பிட்டு வரக் குண-மாகும்.

- ரோஜாப் பூக்களின் இதழ்களைச் சாப்பிட்டு வர வாய்ப்புண் குணமாகும்.
- கொதிக்கும் நீரில் வேப்பம் பூவைப் போட்டு ஆவி பிடித்து வர தலைவலி, காதுவலி நீங்கும்.
- மாம்பழம் அதிகம் சாப்பிட்டு வர இரத்த அழுத்தம் குறையும்.
- பித்தம், மலச்சிக்கல் உள்ளவர்கள் பனங்கிழங்கு சாப்பிட்டு வர குறையும்.

எமது பாரம்பரிய வைத்தியமானது உடல் நோய்கள் மட்டுமன்றி உள நோய்களையும் தீர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றது.

"மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உள நோய் மருந்தெனலாகும்
மறுப்பது நோயை வராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே"

ஆயுர்வேத மருத்துவமானது நோய் உற்ற வேளை தீர்ப்பதோடு மட்டும் நின்று விடாமல் நோய் வராமல் காப்பதிலும் சிறந்து விளங்கி வருகின்றது.

இனிய வாழ்வு வாழ எமது மருத்துவம் துணை செய்கின்றது. உணவை மருந்தாகவும் மருந்தை உணவாகவும் கொண்டு சுகாதாரம் கருதி உண்டு வாழ்ந்து வந்தால் நோயின்றி வளமான வாழ்வுண்டு என நம்பலாம், இயற்கையால் ஆன உடலுக்கு இயற்கை தரும் பொருட்கள் தான் அரிய மருத்துவம் ஆகும்.

நலம் பெறுக நலிவு நீங்குக
நலம் வாழ்க! நாளும் நலமே ஆளுக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரித் தாய்க்கு

✍ திருமதி மாதினி சுரேந்திரன்
குமரபுரம்

கல்லூரித் தாய்க்கு...
கவியெழுத வந்தேன்..
அன்றிலிருந்து இன்றுவரை
ஆறாக வாய்க்கால் வழிந்தோடும்
இருபோக நெல்விளையும்
இன்பமாய் நாம் வாழ
வயலும் வயல்சார்ந்த மருதநில மண்ணில்
வற்றாத வளம்கொழிக்கும் நெல்மணிகள்
கற்பக தருவாய் கல்விக்கண் திறக்கும்
கருவறைக் கூடமாய் எம் கல்லூரி.

ஆறிலிருந்து பதினெட்டுவரை தாலாட்டி
அறிவூட்டி அப்பப்போ வெறுப்பேற்றி
அடியோடு வெறுக்காமல்
அடிபோட்டு செவிமுறுக்கி அறிவுரைத்து
புடம் போட்ட தங்கமாய் மெருகேற்ற
புகழுடனே வந்தீர்கள்
எப்பொழுதும் நினைவிருக்கும் ஆசான்கள்
அப்பப்போ வந்துபோகும் நினைவலைகள்
இனம்காட்டி கலையோடு கல்விநிறைவாக
இயல் இசை நாடகமாய் ஈர்த்தெம்மை
எமக்குள்ளே நிலைகொள்ள வேண்டுமென
எமை முத்தமிட்டு முத்தமிழ் கதைகொண்டு
அரங்கேற்றி " றொட்டிக்கோ" மைதானத்தில்
அவைபோற்ற வெற்றிக்கனம் கண்டு
கண்ணிமைக்காது எமை ரசித்த உத்தமியே!

உன்னைப்போல் செயல்கொண்ட
உத்தம பத்தினி கல்லூரி பாரெல்லாம் இருந்தாலும்
எனைவளர்த்த தாயைப்போல்
ஏனோ! இனங்காட்ட யாருமில்லை
பட்டப்படிப்போடு முட்டிமோதி பயிற்றுவித்தும்
பரணியில் பாடுபடும் மக்களுக்காய் எனை
ஈர்த்தாய்
கண்ணிமைக்காது காத்திருந்த தேவதையோ நீ
கணக்காளர், பொறியியலாளர், மருத்துவர்கள்
ஆசான்கள் என எண்ணற்ற துறையோடும்
ஆயகலைகளோடும் கல்வியோடும்
மிடுக்கோடு உலகெங்கும் இருந்தாலும்
அப்பப்போ எமை வளர்க்க வந்துபோன
அறிவு கல்விமான்களும் ஆங்காங்கே..
நீடுழி வாழட்டும் என வாழ்த்தும் என் தாயே!

எனக்கு வரம் தந்தாய் நல்வாழ்த்தும் தந்தாய்
எனைக் கருவுற்ற மண்தனிலே தொழிலும் தந்தாய்
கல்வி தந்தாய் ஊர் சந்ததிக்காய் தவம் இருந்தாய்
கவியால் நான் எழுத வார்த்தை உண்டா?
எமக்கு வேறென்ன இதைவிடவும் வேண்டுமம்மா?
எப்போதும் உம்மோடு நாமிருந்து
தொழில்புரிவோம்..
நின்மடியில் சரணடைவோம்..
எம்தாயே...!
நீடூழி வாழ்க வாழ்க..!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திரு. ஆ.ஆனந்தரூபன் (Chief M.A), திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த.முகுந்தன் (DS), திரு. பூ.ராஜ்வினோத் (ADP), திரு. கு.சிவலிங்கம் (AO), திரு. கோ. சேகர் (Admin GN)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திருமதி. பா.கலைமதி (DO), திருமதி. கோ.சுமதி (DO), திருமதி.பி.சுரேந்தினி (DO), திருமதி. பு.லதா (DO), செல்வி.க.சுரேகா (DO), செல்வி.வி.சுரேதினி (DO), திருமதி.இ.யசிகலா (DO), திருமதி. ந.சுமித்திரா (DO), திருமதி. த.அனுராதா (DO), திருமதி. பா.குமுதினி (DO), செல்வி.சி.புஸ்பவதனா (DO)

நிற்பவர்கள் (2 ஆம் வரிசை) : திரு.அ.மதன் (TO) திரு.இ.கௌர்தமன் (DO), திரு.ஆ.சுதாகரன் (TO), திரு.தே.ஸ்ரீபன்ரஞ்சித் (DO), திரு.தி.பாலச்சந்திரன் (DO), திரு.தி.பிரபாகரன் (DO), திரு.இ.யோகேந்திரராசா (TO)

# திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திரு. ஆ.ஆனந்தரூபன் (Chief M.A), திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த. முகுந்தன் (DS), திரு. பூ. ராஜ்வினோத் (ADP), திரு. கு. சிவலிங்கம் (AO), திரு. கோ. சேகர் (Admin GN)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திருமதி ச.லோகப்பிரியா (DO), செல்வி மு.பவித்திரா (DO), திருமதி சி.டெய்சிகா (DO), திருமதி.செ.சிந்துஜா (DO), செல்வி.க.தேனுகா (DO), திருமதி.க.சுதர்சினி (DO), திருமதி.த.ஜீவிதா (DO), திருமதி. வ.லட்சுமிகுமாரி (DO)

நிற்பவர்கள் (2 ஆம் வரிசை) : திரு.ஆ.சிவபாலன் ஸ்ரீபன் (MA), திரு.அ.பிரபாகரன் (DO), திரு.இ.தர்மேந்திரா (DO), திரு.கா.சுதாகரன் (DO), திரு.வீ.பிரதீபன் (DO), திரு.த.பார்த்தீபன் (DO), திரு.சி.பிரதீபன் (DO), திரு.வி.கஜதாசன் (DO), திரு.மு.அருட்செல்வநாயகம் (DO), திரு.ம.ஜஸ்டினன் (DO), திரு.க.சிவகரன் (DO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் விளையாட்டு

✍ நிசாந்தன் தஷாயினி
கலவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை

அழகிய காலைப்பொழுது பறவைகள் தம் ஒலிகளைப் பரப்பி வானத்தில் பறக்கின்றன. பூக்கள் தம் வாசத்தைப் பரப்பி இதழ் விரிக்கின்றன. சூரியன் பொற்கதிர்கள் விரித்து தன் வருகையைப் பறைசாற்றுகின்றான். மாணவர் பாடசாலை செல்ல ஆயத்தமாகின்றனர். தொழிலாளர்கள் வேலைக்கு ஆயத்தமாகின்றனர். அப்பொழுது தன் இருகைகளாலும் கண்ணைக் கசக்கிக்கொண்டு அவசர அவசரமாக எழும்புகிறாள் அபிநயா. இரவு அதிக நேரம் நித்திரை விழித்துத் தைத்ததால் உடம்பு அலுப்பில் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

அபிநயா ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழகம் போகக் காத்துக்கொண்டிருந்தவள். அவள் நினைத்த பரீட்சைப் பெறுபேறை விட அதிகமாகவே பெறுபேறு வந்தது. மாவட்ட மட்டத்தில் ஐந்தாவது இடத்தில் இருந்தாள். ஆனந்த உலகத்தில் இருந்தாள். பெற்றோர்களும் தம் பிள்ளை பல்கலைக்கழகம் போய் தங்களைப் பார்த்துக் கொள்வாள், சந்தோசமான வாழ்க்கை கிடைக்கும் என ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

அபிநயா கணினிக் கல்வி கற்பதற்காகவும், ஆங்கிலக் கல்வி படிக்கப் போவதாகவும் கேட்க பெற்றோரும் சம்மதம் தெரிவித்தனர். தினமும் பஸ்ஸில் பிரயாணம் செய்து வந்தாள். கவனமாகப் படித்து நல்ல திறமையுடன் செயற்பட்டாள். ஒருநாள் அப் பஸ்ஸில் ஏற அபிநயா நிற்கும்பொழுது பஸ் நடத்துநர் ஒரு காகிதத்தை நீட்டினார். அதை அவள் வாங்க மறுத்து விட்டாள். பஸ்ஸில் ஏறி இருப்பிடத்தில் அமர்ந்து கொண்ட அபிநயாவிடம் பஸ் ரிக்கட்டையும் அக் காகிதத்தையும் சேர்த்துக் கொடுத்தான் ரூபன். மௌனமாக இருந்தாள். பஸ்ஸால் இறங்கிக் கடிதத்தைப் பிரித்தாள். பயமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. அவள் அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் வகுப்பிற்குச் செல்லவில்லை. மூன்றாம் நாள் வகுப்பிற்குச் செல்லும்போது தன்னைக் காதலித்துத் திருமணம் செய்யாவிட்டால் தாம் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டினான். ஒரே பதற்றம் இருந்தும் சில நாட்கள் செல்லச் செல்ல காதல் வரத்தொடங்கியது. அவனது உண்மையான குணங்களை அறியாது காதல் வலையில் சிக்கிக்கொண்டாள்.

பல்கலைக்கழகம் செல்ல ஒருமாதத்திற்கு முன்பு ரூபன் அபிநயாவைக் கூட்டிக்கொண்டு திருமணம் செய்து கொண்டான். அவள் பல்கலைக்கழகம் முடிந்து வேலை ஒன்று கிடைத்தவுடன் திருமணம் செய்வோம் எனக்கூறியும் கேட்கவில்லை. பல்கலைக்கழகம் விடுகிறேன் எனக்கூறி சமாளித்துக் கொண்டான். அப்பொழுது அபிநயாவின் பெற்றோர் கதறினர். அவள் படித்தவள் அவளுக்குப் புத்தி கெட்டுவிட்டது எனப் புலம்பினர். ஊரார் அறிவுரை கூறினர். பெண்பிள்ளை வீட்டார் நீங்கள் தாழ்ந்து போக வேண்டும். ''பிள்ளையைக்கூட்டி வந்து பதிவுத் திருமணம் செய்யுங்கோ" என்று அயலவர்கள் கூறினார்கள். அப்பொழுதுதான் பிரச்சினை வெளியே வந்தது.

ரூபன் ஏற்கனவே ஒருத்தியயை திருமணம் செய்து மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் அவன் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்வதாகவும் தெரிய வந்தது. புழுவாய்த் துடித்தாள், அழுதாள், புரண்டாள். என்ன செய்வது? தன் வாழ்க்கையைத் தானே சீரழித்து விட்டதாகக் கதறினாள். ரூபன் யாருக்கும் தெரியாமல் பின் வாசல் வழியாகச் சென்று விட்டான். அபிநயா பெற்றோருடன் போய் வாழ்ந்தாள். நாட்கள் சென்றன. பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போது தன் நகைகளை அடைவு வைத்து தையல் மிசின் ஒன்றினை வாங்கிக் கொடுத்தார் தாயார். சுயதொழிலினை செய்துகொண்டு வேலைக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிக் கொண்டிருந்தாள். சில வருடங்கள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை. தையலைத் தைத்து அதில் வருகின்ற பணத்தைக் கொண்டு குடும்பத்தைப் பார்த்தாள்.

திடீரென்று மாரடைப்பினால் தந்தை இறந்துவிட்டதாகக் கடையில் யாரோ கதைத்ததைக் கேட்டு வீட்டுக்கு ஓடினாள். அங்கே அயலவர்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். தாய் புலம்புகிறாள். செய்வதறியாது திகைத்தாள். ஒருவாறு சேர்த்து வைத்த பணத்தினை செத்த வீட்டுக்குச் செலவுக்கு எடுத்து கடனும் மாறினாள். காலங்கள் உருண்டோடின. வாசலில் தபாற்காரன் மணி அடிப்பது போல இருந்தது. வாசலைப் பார்த்தாள். உண்மையாகவே தபாற்காரன். ஓடினாள். அப்போது அவளுக்கு அரசாங்க வேலை கிடைத்திருப்பது தெரிய வந்தது. சந்தோசப்பட்டாள், ஆனாலும் அவளது வாழ்வில் ஏற்பட்ட விதியின் விளையாட்டை நினைக்க வாழ்வே வெறுத்தது. பின் வேலைக்குப் போகத் தொடங்கினாள். இரவில் தைத்து வாழ்வில் முன்னேறினாள். தாயாருடன் தானும் சந்தோசமாக வாழ்ந்து வந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூனைக்கும் புலி பிறக்கும்

முருகையா கனிஷ்ரன்
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

எழுதத்துடிக்கும் என் விரல்களின் நடுவே ஏராளம் கனவுகள்
நொடிப் பொழுதில் சூல் கொண்டு கருவாகி முட்டி மோதி பிரசவமாகின்றன
இலக்கியமாய் கலையாய்........

சமூகமே எனக்கு கெட்டிக்காரன் எனும் பட்டத்தை எப்போதோ சூட்டிவிட்டது.
பூனைக்குப் பிறந்த புலி என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

என் தந்தையும்
என் வயதில்........ எழுதத்துடிக்கும் கரங்களிற்கு
தீனிபோட்டிருந்தால்........ கனவுகளை எல்லாம் கலையாக வடித்திருந்தால்
இலக்கியமாய் சில ஏடுகளை கீறியிருந்தால்
சிலவேளை.........
நானும் புலிக்குப் பிறந்த பூனையாகியிருப்பேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமும் சவால்களும்

அனுசுயா
கண்டாவளை மகா வித்தியாலயம்

இன்றைய வளர்ந்து வரும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. சமயம், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் மக்கள் மத்தியில் நிழலாடுகின்றது. ஏனெனில் மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு பணம் என்பது அத்தியாவசியமானது. இதனால் தான் நம் முன்னோர்கள் "பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்" என்று பழமொழி கூறியுள்ளார்கள். அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் ஒன்றாக பணமும் நிற்கின்றது.

"வாழ்க்கை நிலையற்றது" எனினும் இவ் வாழ்வில் மக்கள் பல்வேறு சுகங்களைக் காணமுற்படும் போது சமூகத்தில் சவால்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையாயிற்று இதனால் தான் இன்று மனித நேயம் என்பது இறந்து மக்கள் வழிதவறி நடக்கின்றார்கள். நவீனயுகமான இன்று இயந்திர சாதனங்களின் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப விருத்தியிலும் வேலையில்லாப் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. சமூகத்தில் மக்கள் அன்றாட தேவைகளை நிறைவேற்ற பணம்சம்பாதிக்க வேலையில்லாப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் கொலை, களவு என்பன அதிகரிக்கும் போக்கைக் காணலாம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!" என்று வாழ்ந்த சமூகம் சவால்களை கண்டு நெறி பிறழ்வைச் சந்திக்கின்றது. கடனுதவித் திட்டங்களைப் பெற்று வாழ்வில் முன்னேற்றலாம் என்று எண்ணி இறுதியில் எதிர் கொள்ள முடியாமல் இறப்பே வழி என்று மாண்டு போகின்றன பல உயிர்கள். இதற்குக் காரணம் சவாலைத் தற்துணிவுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள முடியாத நிலையாகும். இன்று வங்கிகளுக்கும் மக்களுக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது.

நல்ல மனிதராக கடவுள் எம்மைப்படைத்து விடுகின்றான். ஆனால் நாம் குடும்பத்தில் ஏற்படும் உட்பூசல்கள் காரணமாக இவ்வரிய மானிடப் பிறப்பை மறந்து ஆவி துறந்து வருகின்றது. இதுவே இன்று சமூகத்தில் பல்வேறு இடங்களிலும் துளிர் விட்டு காணப்படுகின்றது. த‌ற்கொலை என்பது பரவலாகக் இடம் பெற்று வருகின்றது. சமூகத்தில் மானிடர் நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுறுகின்றனர். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பார்கள் வைத்திய சேவை நவீன மயப்படுத்தப்பட்டாலும் நோய்த் தாக்கமும் அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம் உணவுப்பழக்க வழக்கங்களும் குடிபானங்களுமாகும்.

"குடி குடியைக் கெடுக்கும்" என்பார்கள் இன்று சமூகத்தில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மது போதைக்கும் புகைத்தலுக்கும் அடிமைப்பட்டுள்ளனர். இதனால் தான் வன் செயல்கள் அதிகரித்து வாழ்வில் சவால்களும் மேலோங்கி நிற்கின்றது. மதுவுக்கு அடிமையாகிய மனிதன் பொருளாதாரத்தைப் பற்றிச்சிந்திக்காது சுயநலப்பற்றுடன் மட்டும் செயற்படும் போது குடும்ப உறுப்பினர்களைப் பாதிக்கின்றது. சிறுவர்கள், பெரியவர்கள் அனைவரும் புகைத்தலில் ஈடுபடுவதால் பல்வேறு புற்றுநோய்கள் ஏற்படுகின்றது.

அன்றாடம் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பயணம் செய்யும் போது விபத்து என்பது பெரும் சவாலாகக் காணப்படுகின்றது. தினமும் விபத்தின் மூலம் உயிரிழப்பு ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பேருந்துகளிலும் பல அசௌகரியங்கள் ஏற்பட்டு மக்களின் வாழ்வை சீர்குலைக்கின்றது. தொடர்பாடல் சாதனங்கள் மக்களுக்குத் துணைபுரியும் அதேவேளை சில சந்தர்ப்பங்களில் மக்களை தீய வழிக்கும் இட்டுச் செல்கின்றது. இளஞ் சமுதாயத்தினர் வாழ்க்கையை கைத்தொலைபேசியிலே தொலைத்து விடுகின்றனர்.

"கல்வியே கண்" எனக் கொண்டு கற்றுவரும் மாணவர் சமுதாயம் உயர்கல்வி கற்கச் சென்று அவர்களது தகுதியை வைத்து வேலைபெற்றுக் கொள்வது என்பது கடினமான ஒன்றாகக் காணப்படுகின்றது. குறைந்த ஊதியச் செறிவில் வாழ்க்கை எனும் வண்டியை ஓட்டிச் செல்வது சவாலாகவே காணப்படுகின்றது. நாட்டில் நடைபெறும் அசௌகரியமான செயற்பாடுகள் மாணவர்களின் கல்வியைப் பின்தள்ளுகின்றது. அத்துடன் குடும்பத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளும் கல்வியைத் தொடர்வதற்குச் சவாலாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனயுகமாம் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தினராகிய நாம் பல்வேறு துறைகளிலும் சவால்களை எதிர்கொள்கின்றோம். எனினும் அவற்றை வெற்றி கொண்டு வாழ வாழ்வில் நம்பிக்கை என்பது அவசியமாகும். இப்பரந்த பூமிப்பந்தில் வாழும் சமூகத்தினர் அனைவரும் சவால்களை வெற்றி கொண்டு வாழ்வாங்கு வாழ்வோமாக!

"சவால்கள் ஒழியட்டும்

சமூகம் மிளிரட்டும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திரு. சு.ஜெயானந்தராசா (SSO), திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த.முகுந்தன் (DS), திரு. பூ.ராஜ்வினோத் (ADP), திரு. கு.சிவலிங்கம் (AO), திரு. கோ.சேகர் (Admin GN)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திருமதி து.தனுஷா (CO), திருமதி ஆ.விஜோஸ்வரி (CRPA), திருமதி தி.றஜிதா (DO), திருமதி யு.கவிதா(WDO), திருமதி ரா. யூட்ஸ் ஜெயசீலி (DO), செல்வி செ. திவானி (DO), திருமதி சோ.சுகந்தினி (DO), செல்வி சி.நிலாஜினி (DO), செல்வி த.பிரின்சியா (DO), திருமதி மு.டெல்சியா (DO)

நிற்பவர்கள் (2 ஆம் வரிசை) : திரு. சி.செல்வரூபன் (DO), திரு. ம.வசந்தன் (DO), திரு. சி.சிவராஜ் (DO), திரு. சோ.கஜேந்திரமூர்த்தி (NCPA), திரு. சி. சுதர்சன் (DO), திரு. வை. மாதவன் (SO), திரு. க. கோபாலசூரியர் (CO)

## வாழ்வின் எழுச்சி கிளை உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : செல்வி உ.சாரதாதேவி (DM), திரு. சி.குகதாசன் (Accountant), திரு. ம.பிரதீப் (ADS), திரு. த.முகுந்தன் (DS), திரு. பூ.ராஜ்வினோத் (ADP), திரு. கு.சிவலிங்கம் (AO), திரு. கோ.சேகர் (Admin GN), திருமதி ந.கௌரிதேவி (MD)

நிற்பவர்கள் (1 ஆம் வரிசை) : திருமதி கா.சபிதா (DDO), திருமதி சு.மாதினி (DDO), செல்வி தி.சிந்துஜா (DDO), திருமதி சு.பிரதீபா (DDO), திருமதி ற.செல்வமதி (DDO), செல்வி சி.கஸ்தூரி (DDO), செல்வி த.புனிதவதி (DDO), செல்வி அ.மேரி அனிற்றா (DDO), திருமதி டி.தங்கமணி (DDO), திருமதி ஜெ.கமலினி (DDO)

நிற்பவர்கள் (2 ஆம் வரிசை) : திரு. பா.சசிகரன் (DDO), திரு. லூ.பிறைசல் (DDO), திரு. யோ.சிவகுமார் (DDO), திரு. க.பார்த்தீபன் (DDO), திரு. கு.அருமைராசா (DDO), திரு. ச. சத்தியசீலன் (DDO), திரு. சி. யாதவன் (DDO), திரு. கி.பிரதீபன் (DDO), திரு. ச. ஶ்ரீதரன் (DDO), திரு. யோ. கோபிநாத் (DDO), திரு. பொ. மணிமாறன் (DDO), திரு. ஶ்ரீ. ரூபாகரன் (DDO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் பாதை மாறி போகாதே...

வி. சுதர்சினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

போகாதே தம்பி போகாதே- நீ
போதையிலே பாதை மாறிப் போகாதே
கண் கண்ட போதையிலெல்லாம் மூழ்குகின்றாயே - உன்
கடைசி நாளை விரல் விட்டு எண்ணுகின்றாயே.

நல்லவங்க போதையைத்தான் தொட்டதுமில்லை - அது
தொட்டவனை லேசில தான் விட்டதுமில்லை
பையில் உள்ள பணத்தையெல்லாம் போதை கடிக்குது - உன்
மெய்யில் உள்ள ரத்தத்தையே நாளும் குடிக்குது.

குடும்பத்தையே தெருவினிலே கொண்டு வருகுது - இது
குடித்தவனை அருகினிலே மரணம் நெருங்குது
உடும்பைப் போல போதையை நீ இறுகப் பிடிப்பதால் - உனை
ஊருலகில் அடிமையாக்கி பெருமை குறைக்குது.

பள்ளிச் சிறுவர் கைகளிலும் போதைப் பொருட்களே - இதை
பரப்புவதில் கற்றவரும் சேர்ந்திருப்பரே
வேலியெல்லாம் பயிரை மேயும் கேலிக் கூத்தினால் - நம்ம
வீடுகளில் உள்ளவர்க்கோ கண்ணீர் கோலந்தான்.

அச்சமூட்டும் போதைவஸ்து பாவனையாலே - கெட்ட
சேதி கேட்டு நாளும் நாளும் காது உடையுது - இது
மிச்சமின்றி சிறுவர் வரை சீரழிக்குது.
பெத்த மனம் வெதும்பி தினம் கண் கலங்குது
போகாதே தம்பி போகாதே - நீ
போதையிலே பாதை மாறிப் போகாதே...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளைப் பேணுவோம்

ச. சந்திரன்
கிராம அலுவலர்,
பரந்தன் நகரம்

ஒரு சமூகம் தன் இருப்புக்கும் பண்பாட்டுப் பேணுகைக்கும் கலை இலக்கியங்களிலேயே தங்கியுள்ளது. கலை என்பது சமூகத்தின் விம்பமாகவும் சமூகத்தினைப் புரிந்து கொள்ளும் சாதனமாகவும் விளங்குகின்றது.

அந்த வகையில் பண்டைக் காலத்தில் தமிழில் தோன்றிய கலைகளும், தமிழர் தம் வாழ்க்கை முறை, பண்பாடு, கலைமரபு, அழகியல் இரசனை ஆகியன பற்றிக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. இவை இயற்கையாகவும் இயல்பாகவும் மனிதரிடத்தே முகிழ்விக்க வேண்டியவை. என்பதை "கலைகளெல்லாம் இயற்கையின் நகல்களே!" என்று அறிஞர் செனிக்கோ அவர்கள் அழகாக கூறியுள்ளார். கலைகளெல்லாம் உலகிலே மனிதனை மனிதனாக்குகின்ற அதேவேளை வாழ்வியல் உண்மைகளையும் வெளிப்படுத்தும் ஓர் பல்லூடக வழங்கியாக காணப்படுவது முக்கியமானதாகும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியானது எவ்வளவு தான் முன்னேறியபோதிலும் கலை இலக்கியம் இன்றேல் அச்சமுதாயத்தில் விழுமியப்பண்புகளையோ, பண்பாட்டு வளர்ச்சியினையோ காணமுடியாது. அத்துடன் மனிதன் தன் கவலைகளை மறந்து சிரித்து வாழ வழிகோலுவதுதான் இசை, நடனம், நாடகம், சித்திரம் போன்ற அழகியற்கலை வடிவங்கள் இவை தனியே மனிதனுடைய மன அழுத்தங்களைக் குறைப்பதோடு நின்றுவிடாது மனமாற்றத்திற்கும் வழி கோலுவதாக அமைகின்றது. கலைகள் பொழுதுபோக்கு அம்சத்தை மட்டும் கொண்டு விளங்காமல் அதன் மூலம் சிறந்த கருத்துக்கள் முதலியனவற்றை வெளிப்படுத்துவனவாகவும், இருத்தல் வேண்டும். மேலும் ஆத்ம விருத்திக்கும் கற்பனை விருத்திற்கும், உதவுகின்றது. கலைகள் பொதுவாக மக்களை நல்வழிப்படுத்துகின்றன. கலைகள் மூலம் கலைஞர் மட்டுமன்றி பார்வையாளர்களும் உணர்ச்சிகள், ரஸங்கள் முதலியவற்றை அனுபவிக்கின்றனர். இயந்திரமயமான இவ்வுலகில் ஒவ்வொருவரும் மன அழுத்தம், களைப்பு, உடல் மனச் சோர்வுகள் முதலியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அவர்களை அதனின்று விடுவிக்கவும் உற்சாகத்துடன் ஒவ்வொரு நாளையும் புதிதாக அனுபவிக்கவும் இவ் ஆற்றுகைக் கலைகள் பெரும்பங்காற்றுகின்றன. முன்னைய காலங்களில் இக்கலைகள் கோ வில்களிலும், அரண்மனைகளிலும், பொது அரங்குகளிலும் நிகழ்த்திக் காட்டப்பட்டன. சென்ற நூற்றாண்டு முற்பகுதியில், நடுப்பகுதியில் திரைப்படங்களிலும் சாஸ்திரியக் கலைகளிலும் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

ஒரு இனம் வாழவேண்டுமானால் அதன் பண்பாடு கலாசாரம் அழிந்து விடாமல் பேணிப்பாது காக்கப்படவேண்டும். இன்ற நவீன மயமாக்கலுக்கு உள்வாங்கப்பட்டு "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என மனிதர் தம்மை மாற்றிக் கொள்வது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். உலகம் உள்ளங்கையில் இருப்பது போன்றாகிவிட்டது. இது வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தபோதிலும், முன்பெல்லாம் பொழுது போக்குவதற்கு வழி தேடியவர்கள் இன்று அவ்வாறு ஒன்றைக் காணாது தேடுகின்றனர். இளைஞர்கள் கைகளில் எந்நேரமும் "செல்பேசி" மாலையானதும் மங்கையர் சீரியலிலும், தாயின் தாலாட்டைக் கேட்டு உறங்க வேண்டிய குழந்தை இன்று குத்துப் பாடல்களையே செவிமடுத்துகின்றது. இந்நிலை தொடருமானால் எமது பாரம்பரியக் கலைகள் அழிவடைந்து செல்லும் நிலை ஏற்படும்.

எனவே இதற்கு புத்துணர்வு கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். எமது பிரதேசத்தில் காணப்படும் நாட்டுக் கலைகள், கிராமியப் பாடல்கள், கிராமிய நடனங்கள் ஆகியவற்றையும், கலைஞர்களையும், இனங்கண்டு அவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

எமது மக்களிடையே காணப்படும் வெளிப்பாடுகளை உணர்த்தக்கூடிய வகையில் சமூக நாடகங்களை அரங்கேற்றல், ஆலயத்திருவிழாக்களில் நாட்டுக்கூத்துக்கள், கரகம், கோலாட்டம், கும்மி, செம்பு நடனம் போன்றவற்றை நிகழ்த்துவதன் மூலம் கலை விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். சில பிரதேசங்களில் இவ்வாறான கலைகள் இன்றும் காணப்படுகின்றமை வரவேற்கக்கூடியதாகவுள்ளது. எமது பிரதேசங்களில் குறிப்பாகக் கரகம் ஆடுவதில் தருமபுரம், முரசுமோட்டை, மயில்வாகனபுரம் ஆகிய இடங்களில் கலைஞர்கள் இருந்தமையும், அறக்கூத்துக்களில் தட்டுவன்கொட்டி, புளியம்பொக்கணை, புன்னைநீராவி பிரதேசங்களில் கண்ணகை அம்மன் ஆலயங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றமையும் கல்மடுநகர் (சம்புக்குளம்) கட்டைக்காடு பகுதிகளில் காமன் கூத்துக்கலை பிரபல்யம் பெற்று வந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளமையும் அறிய முடிகின்றது. ஆயினும் இவை அருகிச் செல்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இவை மட்டுமன்றி கிராமிய இசைக்கலைகளும் இப்பிரதேசங்களில் சிறப்புற்றிருந்தது. வில்லிசை, கதை படித்தல், உடுக்கடித்தல், தெம்மாங்குப் பாடல், நாட்டார் இசை போன்றவை குறிப்பாக கண்டாவளை, கலவெட்டித்திடல் ஆகிய இடங்களில் சிறப்புற்று விளங்கியுள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது. இவையும் தற்காலத்தில் அருகிச் சென்றுள்ளமையைக் காணலாம்.

இத்தகு கலைகள் தற்காலத்தில் புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு உள்வாங்கும் வகையில் இனங்கண்டு தேடி ஆவணப்படுத்தும் முயற்சிகளில் பிரதேசம்சார் இளம் ஆர்வலர்கள் முன் வருதல் வேண்டும். அது மட்டுமன்றி பாடசாலைகளில் அழகியல் பாடங்களுக்கு மாணவர்கள் முக்கியத்துவம் அளிப்பதை ஊக்குவிக்க வேண்டும். அழகியற்பாடங்கள் அதாவது மாறிவரும் தொழில்நுட்பம், உலகமயமாக்கல் போன்றவற்றால் மாணவர்களுக்கு நவீன மயப்படுத்தப்பட்டு அளிக்கப்பட வேண்டும். இவற்றில் வெகுசன ஊடகங்களின் பங்களிப்பு, கலைகளின் அணுகுமுறைபற்றி காலத்திற்குத் தகுந்தவாறு அழகியல் பாடங்களில் அமையப்பெற வேண்டும்.

எமது பிரதேச பாரம்பரிய கலைகளைப் பேணுவதற்கும் அவற்றை வளர்த்தெடுப்பதற்கும் அனைவரும் முன்வரவேண்டும். எமது பிரதேச கலாசாரப்பேரவையினரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பிரதேத்தில் கவின்கலை நிலையம் அமைக்கப்பட்டு வாத்தியக்கலைப்பயிற்சிகள் இசைக்கலைகள், நாடகப்பயிற்சிகள் என்பன வழங்கப்பட வேண்டும். இலை மறை-காய்களாக உள்ள கலைஞர்களை இனங் கண்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். கிராமங்கள் தோறும் கலைக்குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு கலைகளை வளர்த்தெடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ளல், கலை விழாக்கள், போட்டிகள், அரங்கேற்றம் என்பன நடாத்தப்பட வேண்டும். நாடகப்பட்டறைகள், கவியரங்கள், இசை விழாக்கள் போன்றவை நடாத்தப்படுவதன் மூலம் மக்களிடையே கலை விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

மனித இனத்தின் தனித்துவத்தைக் கோடிட்டுக் காட்டுவது கலைகளும் கலாசாரமுமே மனிதன் தன் முழுமையைப் பெற்று நற்பிரஜையாக வாழக் கலைகள் உதவுகின்றன. மனிதர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கலைஞர்களாக விளங்குகின்றனர். அத்துடன் அவர்கள் சிறந்த இரசிகர்களாக இருப்பது உடல், உள ஆரோக்கியத்திற்கு உகந்தது மட்டுமன்றி அமைதியான சமூகக்கட்டமைப்புடன் வாழவும் துணைபுரிகின்றது. இதனைக்கருத்திற் கொண்டு சிறுவயதிலிருந்துதே கலையுணர்வுமிக்க கலையம்சத்தை மதிக்கின்ற, இரசிக்கின்ற சமுதாயத்தை வளர்த்தெடுக்க நாம் அனைவரும் முயன்றிடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைகின்ற உள்ளங்கள்...

வேல்மகள்
புளியம்பொக்கணை

வஞ்சனை இல்லாத குஞ்சு
துள்ளி விளையாடும் பஞ்சு
கள்ளம் இல்லாத உள்ளம்
கனவுகள் சிறகடிக்கும் வானம்
நனவுகள் ஆக்கிடத் துடிக்கும் மனம்
தொட்டு விட முடியாத தூரம்
விட்டிட நினைக்காத வீரம்.

வாழ்ந்திடத் துடிக்கும் துளிர்கள்
வாழ்விழந்தன பள்ளி மணிகள்
மனிதம் இல்லாத கயவர்கள்
புனிதம் கொன்று போனார்கள்
அருவியாய் துள்ளிய சிட்டுக்கள்
கருகி வீழ்ந்தன மொட்டுக்கள்
தீய எண்ணம் கொண்ட கயவர்கள்
மாய வேண்டும் இவ் உலகதில்.

அச்சமே இல்லாத வாழ்க்கை
இச்செகத்தில் வேண்டும் சிறுவர்க்கு
தொல்லை கொடுப்பவர் வாழ்வு
இல்லை என்றாகட்டும் இவ் உலகில்
சிட்டுக்கள் சிறகடித்துப் பறக்க
சட்டம் தன் கடமையைச் செய்ய
சின்னஞ் சிறுசுகள் எல்லாம்
இன்னல்கள் தொலைந்து வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கிகள் சுமையாவதில்லை

சரவணமுத்து ரங்கநாயகி
இல 24, குமரபுரம், பரந்தன்.

சரவணன் ஏழ்மையிலும் நம்பிக்கை நாணயத்துடன் வாழ்ந்து வந்தான். இவர் ஒரு விவசாயி. தன் உழைப்பினால் வீடுகட்டி பொருள் பண்டங்கள் வாங்கி சந்தோசமாக வாழ்ந்து வந்தான். தன் சொந்தங்கள் உறவுகளில் பாசம் இல்லாது தன் அயலவர்களை நேசித்தான். அங்குள்ள பிள்ளைகளை தன்னுடைய பிள்ளைகள் போலவே வளர்த்தான். பாடசாலை விடுமுறைக் காலங்களில் சரவணன் வீட்டில் பிள்ளைகள் கூட்டம் கூட்டமாக வந்து சேருவார்கள். கோயில் திருவிழாக் காலங்களில் உழவு இயந்திரப்பெட்டியில் பயணம் செய்வார்கள். அவருடைய வீட்டில் எந்நேரமும் கலகலப்புத்தான். அவருடைய வயல் வேலைகளிலும் சரி வீட்டு வேலைகளிலும் சரி அயலவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். அறுவடைக்காலங்களில் சம்பளம் கொடுக்காமலே கூட்டு வேலையாக மாறி மாறிச் செய்வார்கள். இதனைப் பார்த்தே சரவணன் பெருமிதம் கொள்வார். என்றும் கூட்டாக ஒற்றுமையாக மகிழ்வாக இருக்கவேண்டும். ஏழைகள் என்று யாரும் இருக்கக் கூடாது என்று அடிக்கடி கூறிக்கொள்வார்.

'' கொடுத்தாருக்கு குறைவில்லை'' என்று தன் மனைவியிடம் கூறிக்கொள்வார். நாம் சந்தோசமாக எல்லோருக்கும் உதவி செய்யவேண்டும். பிற்காலத்தில் அவர்கள் உதவுகின்றார்களோ இல்லையோ நிச்சயமாக ஆண்டவன் எமக்கு உதவி செய்வான்.

'' கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.'' இவருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார். அவர்களும் கூடவே சரவணன் வீட்டிலே தங்கியிருக்கும் போது இடப்பெயர்வு ஏற்பட்டது. மாறி மாறி எத்தனை இடங்கள் தான் செல்வது அயலவர்களும் பிள்ளைகளும் திக்குத்திக்காக இடம்பெயர்ந்தார்கள். எத்தனை வருடங்களாக என்னையே சுற்றிவந்த அயலவர்கள் உறவுகளைப் பிரிந்து சரவணனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதனால் நோய் ஏற்பட்டு படுக்கையிலேயும் கிடந்து கொண்டு மனைவி, பிள்ளைகளிடம் கூறிக்கொள்வார் "தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்று.'' சொந்தம் பந்தம் எல்லாம் பிறகுதான் எங்கட அயல்தான் எப்போதும் உதவி. நல்லது கெட்டதுகளுக்கு முன்னுக்கு வருவது அயலவர்கள்தான். வீடு, சொத்து, தொழில், அயலவர்களை இழந்த துயரில் தினமும் கவலை கொண்டு இறந்து விட்டார்.

'' குத்து விளக்காக ஒளிவீசிய குலதெய்வம்'' இழந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாத மனைவி, பிள்ளைகள், அயலவர்கள் இவருடைய இழப்பைத் தாங்கிக்கொள்ளாத மனைவி தன் சுயசிந்தனையே இழந்துவிட்டாள். தன்னுடைய மகளுக்காகவாவது வாழவேண்டும் அதுவும் நீங்கள் இல்லாது தவித்துவிடும் என்று அயலவர்கள் கூறியும் கேட்காமலே இருந்து நோயாளியாகிவிட்டார். எந்நேரமும் யோசித்துக் கொண்டே இருப்பதனால் வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற்றுக் கொள்வார்.

தாய் கண்மணியும் மகளும் மீள் குடியேறி தம் சொந்த நிலத்திற்கு வந்தார்கள். வீடு இருந்த இடத்தையே காணவில்லை. மரம், செடி, கொடி ஒன்றும் இல்லை. காணிக்குள் வந்ததும் '' ஓ'' என்று கண்மணி அழுதுவிட்டார். பழைய நினைவுகளுடன் மூழ்கியிருந்தாள். எத்தனை பிள்ளைகள் துள்ளிவிளையாடிய முற்றம், எத்தனை பேர் தங்கிய வீடு....... அயலே வெறிச்சோடிக் காணப்பட்டது. சுடுகாடு போன்று காட்சி கொடுத்தது. சரவணனை இழந்த கவலையில் மகளும் சேர்ந்து கவலையுடன் துவண்டு போனாள். இப்படியே இருந்து பயனில்லை... வீட்டு நிலத்தைத் துப்பரவு செய்து கொட்டில் போட்டார்கள். மீள்குடியேறிய போது கொடுத்த மரம், தகரங்களைக் கொண்டு தற்காலிக வீடமைத்து அதிலேயே வசித்து வந்தார்கள்.

வீட்டுத்திட்ட அடிப்படையில் UN/Habitat ன் உதவியுடன் வீடு கட்டிக் கொடுத்தார்கள். மகளும் சிறிய வேலையில் இணைந்து கொண்டாள். மகளுக்காக வாழவேண்டும் என்று கண்மணியும் தன்னால் இயன்ற வீட்டு வேலைகளில் பங்கு கொண்டு செய்வாள். மகள் வேலையைவிட்டு வரும் வரையும் காத்திருப்பாள். இப்படியே நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தது. மகளுக்கும் வயது ஏறிக்கொண்டே போகின்றது. கண்மணியின் மகளுக்குத் திருமணம்செய்து வைக்க வேண்டும் என்று அயலவர்கள் முன்வந்தார்கள். அதற்கு மகள் திருமணம் வேண்டாம் என்று தடுத்து விடுவாள். திருமணப் பேச்சு எடுத்தால் சண்டை போடுவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்கின்ற வயது தாண்டிவிட்டது. இனி என்ன திருமணம் எங்கட வயதுக்குத் திருமணம் தேவையா? என்று வருகிறவர்களிடம் கேட்பாள். தாய் சொல்லுவாள் மகளே திருமணத்திற்குரிய வயதில் மாறி மாறி இடம்பெயர்ந்தோம். கட்டிய வீடு, கிணறு, சொத்துக்களோடு கணவனையும் இழந்தேன். இந்த நிலையில் எப்படி மீள்வது, இப்ப மீள்குடியேறி கட்டிய வீடு ஒன்றுதான் சொத்தாக உள்ளது இல்லையேல் எந்த மண்குடிசையில் இருப்பமோ தெரியாது என்று கூறி பெருமூச்சு விட்டாள் கண்மணி.

இனியாவது நான் கண்மூட முன்பு உனக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திட்டன் என்றால் நான் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்திடுவன். உன்னை நினைத்து நினைத்து நித்திரையும் இல்லை. நிம்மதியும் இல்லை, நான் உயிரோடு இருக்கும்போது திரும்பிப் பாராத அண்ணன், தம்பி உன்னை எப்படிப் பார்ப்பார்கள், உன்ர சொத்துக்களைப் பறித்துப் போட்டு தெருவில விட்டுடப் போறாங்கள் என்று பெருமூச்சுவிட்டாள். தாயின் உள்ளக்குமுறலைக் கண்டு கொண்ட மகள் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டாள் இவளின் சொத்துக்களைச் சுரண்ட இருந்த அண்ணன், தம்பி, மச்சாள்மாருக்கு இவள் திருமணம் செய்வது விருப்பமில்லை திருமணத்தை முன்நின்று நடாத்துவதற்கு யாரும் முன்வரவில்லை. திருமணச் செலவுக்குப் பணம் இல்லை. யார் பண உதவி செய்வார்கள். காலங்கள் கடந்து கொண்டே போகின்றன. தாயின் ஏக்கம், இதனைப் புரிந்து கொண்ட மகள் இதற்குத் தான் நான் திருமணம் செய்யவில்லை. இந்தப் பேச்சை நிறுத்துங்கள் என்று தாயிடம் சண்டை போடுவாள். திருமணப் பேச்சு என்று யாரும் தொடங்கினால் மகள் சண்டை போட்டு நிறுத்தி விடுவாள். கண்மணி கண்ணீர்விட்டு அழுதுவிட்டாள். தாயின் வேதனையை அவதானித்த அயலவர்கள் மகளுடைய வயல் காணியை விற்றுத் திருமணம் செய்துவையுங்கள். அதற்குத் தாய் உடன்பட்டாள். உரிய வேளையில் காணியை விக்கமுடியாத நிலையில் உள்ளதால் அயலவர்களே பிணைநின்று வங்கியில் கடன் எடுத்துக் கல்யாணம் நடாத்திவைத்தார்கள். மகளின் கல்யாணக் காட்சியைப் பார்க்க (கணவர்) சரவணன் இல்லையே என்று தாய் கண்கலங்கி விட்டார். மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்து விட்டேனே என்னுடைய பிள்ளைகள் எத்தனை இருந்தும் கூடிப்பிறந்தவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை உரிய வயதில் அமைத்துக் கொடுக்கவில்லையே என்று மனதிற்குள் எண்ணிக் கொள்வாள்.

“ பிறர் பிள்ளை தலை தடவினால் தன் பிள்ளை தானே வளரும்” என்பதற்கு இணங்க கண்மணியும் கணவரும் அயலவர்களுக்கு உதவியதால் இன்று அவளுடைய மகளுக்கு அயலவர்ளே முன்நின்று திருமணம் நடாத்தி வைத்தார்கள்.

மகளுடைய வாழ்க்கை சந்தோசமாக உருண்டோடிக் கொண்டிருந்த வேளையில் உடன் பிறப்புக்களுக்கிடையில் காணித் தகராறு ஏற்பட்டது. விக்க இருந்த காணியையும் விக்கவிடாது தடுத்தார்கள். பட்ட கடனை கட்டமுடியாது கண்மணி தவித்தாள். இதனை அவதானித்த மகளின் கணவர் பல கட்டுப்பாடுகளைப் போட்டார். கடன் பட்டமாதிரியே அம்மா கடனைக் கட்டிக்கொள்ளட்டும் இல்லையே கடன் எடுத்தவர்களே கட்டிக்கொள்ளட்டும் என்று மகளுக்கு வந்த கணவர் கூறிக்கொள்வார். மகள் தாயார் கண்மணியுடன் சண்டை போடுவாள். இதற்குத்தான் நான் திருமணம் வேண்டாம் எனக்குச் சீதனம் தர பணஉதவி செய்ய யாரும் இல்லை. நாமே உழைத்து நாமே சாப்பிட வேண்டியுள்ளது. எம்கையே எமக்கு உதவி என்பது உண்மைதான். கடன் எடுத்தால் பட்டினிகிடந்தாவது வட்டியும் முதலுமாகக் கட்டியே தீரவேண்டும். இதற்கு மகள் கூறிக்கொள்வாள். இங்கு யாரும் கடன் கட்டவும் வேண்டாம் காணி விற்கவும் வேண்டாம் நானே உழைத்து கடன் கட்டுவன். இது வந்த கணவருக்குப் பிடிக்கவில்லை. கடன் காறியையே திருமணம் செய்தது என்று மனைவியுடன் கேட்டுக்கொள்வான். உழைக்கிறன் பட்டகடனைக் கொஞ்சம் கொஞ்சமாக கட்டி முடித்துவிடலாம் என்று மனைவி கூறிக் கொண்டாள். கணவன் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். “ கணவன் மனைவிக்கிடையில் புரிந்துகொள்ளும் தன்மை இல்லாத” கணவர் பெண்ணின் உழைப்பிலே சாப்பிடலாம் என்று நம்பியுள்ளான் போலும் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

அயலவர்கள் முன்நின்று திருமணம் செய்துவைக்கின்றார்களே அயலவர்களுக்கும் கட்டிய மனைவிக்கும் ஏதோ தொடர்புகள் இருக்கிறது என்று கதையையும் கட்டிவிட்டுச் சென்றுவிட்டான். கண்மணி எவ்வளவு கௌரவமான குடும்பம் அதேபோன்று கௌரவமான அயலவர்கள். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தவர்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து வந்தவன் கதையைச் சோடிக்க முடியுமா? மகளால் இந்த வேதனையைத் தாங்கிக் கொள்ளமுடியாது தவித்தாள். இவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மகன்களுக்குத் தெரியாது. அயலவர்களுக்கும் தெரியாது. எத்தனை நாட்களுக்கு இப்படிச் சொல்லாமல் மறைக்க முடியும். இதைச் சொன்னால் அயலவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கண்மணி நொந்து கொண்டாள். அயலவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணியுடன் கேட்டுக் கொள்வார்கள் மகளின் கணவரைக் காணவில்லை என்று. ஏதோ உண்மை நிலைமையைச் சொல்லத்தானே வேண்டும் என்று கண்மணி ''ஓ'' என்று அழுதுவிட்டாள். நாங்கள் இன்று நேற்றுப் பழகிய அயலா?.. எத்தனை வருடங்களாக அப்பாவின் காலத்தில் பழகிய அயலை இப்பவந்தவர் கதைகட்ட முடியுமா?.. என்று அயலவர்கள் கண்மணியையும் மகளையும் தேற்றினார்கள். கண்மணியின் மகன்களுக்கு பெரிய சந்தோசம். காணியையும் வீட்டையும் தாமே பகிர்ந்து கொள்ளலாம் என்ற மகிழ்ச்சி. அதுமட்டுமா. கண்மணி வீட்டுக்கு வேண்டிப் போட்ட பொருட்கள் ஏராளம். அத்தனையும் தங்களுக்குத்தானே கிடைக்கும் என்ற பெருமிதம். கண்மணியின் மகளுக்கு வந்த கணவர் வீட்டைவிட்டு வெளியேறியதை அறிந்தும் அறியாதவர்கள் போலவே இருந்து கொண்டார்கள். அயலவர்கள் செய்துவைத்த கலியாணம் இப்ப எப்படி இருக்கிறது என்று அண்ணன், தம்பி கூறிக்கொள்வார்கள்.

தன்மகள் எவ்வளவு காலத்திற்கு திருமணம் செய்யாமல் என்னுடன் இருக்கிறது அவளுக்கு ஒரு உதவியாக வந்தவன் இருப்பான் என்று கனவு கண்ட கண்மணியால் இந்த வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நோயாளியாகப் போய்விட்டாள். கண்மணியின் பிள்ளைகளும் திரும்பிப் பார்ப்பது இல்லை. மகளும் தாயும் நொந்து கொள்வார்கள். மகள் அடிக்கடி கூறிக் கொள்வாள். சாகும்போது கன்றுக்கு புல்லுத்தேடி வைத்திட்டா சாகுது என்பாள். தினமும் இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தால் பயனில்லை. நடக்கப்போறது நடந்தே தீரும் மகள் வெளியில் எப்படித்திரிவது என்று வேலையை விட்டு வீட்டுடன் அன்னையைப் பராமரித்துக் கொள்கிறாள். தாயின் பணிகளைச் செய்யும் சுமையாகவே தாங்கிக் கொண்டாள். தாய்க்கு மகள் சுமையாக இருந்து பாதுகாத்த காலம் மாறி மகளுக்கு தாய் சுமையாக மாறிவிட்டாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை நாட்டை ஒழிப்போம்

வ. குகனியா
A/L கலைப்பிரிவு (2018)
கிளி/ பிரமந்தனாறு மகாவித்தியாலயம்

மனிதா! நீ கற்றதுவும் தமிழா
நீ வாழும் உலகம் உருண்டை அல்லவோ
பொன்னும் பொருளும் பொற்கிளியும் கொடுத்தாலும்
போன மானம் திரும்பி வருமா மனிதா?

வீதியிலே அல்லுண்டு கிடந்தாலும்
பெற்ற பெருமையை விட பெற்ற மானம் மேலல்லவோ
பிறந்த பயன் தெரிகின்றதோ போதைப் பொருளாய்
பெற்ற குழந்தை கதறி அழ நீ போதையில் நிற்பது தகாதது
-தமிழா

ஏழை வீட்டில் தானே நீயும் பிறந்தனையோ?
ஒரு நாள் உழைத்து அரைவாசியை
போதைக்குச் செலவழிக்கும் எளிய மனிதன்
கால் நூற்றாண்டாய் காற் செருப்பு இல்லாமல் இருக்கின்றாய்
-இது தெரியவில்லையா?

போதையற்ற உலகம் போதையற்ற நாடு
ஒழிப்போம் போதையை ஒழிவோம் நாங்கள்
இளைஞர்களே! இத் தொனி காதில் கேட்கட்டும்
உயர்த்துவோம் காதுகளில்

தனியார் பள்ளி தனில் பக்குவமாய்
கற்பிக்கும் ஆசிரியரிலே போதைப் பொருள்
சீர்கேடும் நாடு நம்நாடு அல்ல என
ஓங்கி உயர்த்துவோம் நாட்டை

பிறந்த மண்ணில் இதுவும் ஒரு கேவலமா?
நீ கற்றதுவும் தமிழ் தானே
போதையை ஒழிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்
இதனைக் கேட்போம் தமிழா?

செய்தி நீதிதனில் செய்தித் தாளிதனில்
அரைவாசிப் பக்கம் போதைச் சீர்கேடு தமிழா
பெற்றவளையே வெறுக்கும் உலகம்
போதைப் பொருளாலே!

நில் வைக்கும் வரிசையிலே
நின் படலையில் நிற்கின்றார்கள் கடன்காரர்
யாரென்று கேளாயோ? அதுவோ
போதைப் பொருள் ஆட்களே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி மாணவியுடன் பள்ளியிலே
மகள் ஏங்கித் தவிக்கின்றாள் சந்தோசத்திற்காக
நீ போதை வீட்டில் சந்தோசப் படுகின்றாய்
இது உனக்கே தகுமோ?

போதை நாட்டை ஒழிப்போம்
நாட்டைப் போதையில் இருந்து மீட்போம்
இளைஞர்களை வாழவிடுவோம்
இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியசைத்த விண்மீன்

நா. ஹேமமாலினி
தையல் ஆசிரியர், தருமபுரம்

பசுமை நிறைந்த வயல் வெளிகளும் உயிரோட்டம் உள்ள நீர்நிலைகளும் வனப்புமிகு வனங்களும் நிறைந்த வன்னிமண் அழகே ஒரு தனி அழகுதான். குளங்களும் குன்றுகளும் கண்டு குதூகலிக்கும் மனம். இரணைமடுக்குளமும், தூய மடுமாதாவும், வற்றாப்பளை கண்ணகையும், ஒட்டுசுட்டான் சிவனும், கிளியில் முறிகண்டியானும், புதூர் புளியம்பொக்கணை நாக தம்பிரான் என வணக்கத்திற்கென எத்தனை தான். வன்னி அழகைக்காணக் கண் கோடி வேண்டும்.

"உண்மை தான் அடங்காப்பற்று வணங்கா மண் வீரம் நிலைத்த மண் அல்லவா!"

புறநானூற்று வீரம் பொதிந்த மண்ணில் தமிழரின் வாழ்வோடு ஒத்திருந்த அக நானூறும் இல்லாமல் விடவில்லை. இந்த வன்னி மண்ணில் தான் கந்தையருக்கும் கனகாவிற்கும் கிடைத்த மிகப் பெரும் செல்வம் இலக்கியா. விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருந்த கந்தையர் ஓர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அக்கிராமத்தில் அவருக்கு கஸ்ரத்திலும் கௌரவமாக வாழ்பவன் என்ற நற்பெயர் கிடைத்திருந்தது. " சாடிக்கு ஏற்ற மூடி போல்" கந்தையாவைப் போலவே அவருடைய துணைவி கனகாவும் அழகிலும் அடக்கத்திலும் இலக்கியாவிற்கு நிகராக அக்கிராமத்தில் யாருமே இருக்கவில்லை எனலாம்.

இலக்கியாவைப் பற்றிச் சொல்லப்போனால் அவள் கண்கள் அகநானூற்று தலைவியின் கண்களை ஒத்திருக்கும். "இரணைமடுவில் துள்ளிய மீனொன்று தாவி வந்து கண்களாகியதோ!" அவளின் மேற்புருவம் வீரனின் வாளை ஒத்திருக்கும். செவ்விதழ் வாய்பிறை ஒத்த நுதலும் முழுமதி முகமும், முந்திரி மூக்கும், முழங்காலை எட்டிப்பிடிக்கும் கரிய கேசமும், கொடி இடையும் வன்னி போன்றே வனப்புக்கள் எனப் பல அவளிடம் இருந்தது. ஆண்டவன் எல்லா நிறைகளையும் இலக்கியாவிற்கு கொடுத்திருந்தார்.

இலக்கியா க.பொ.த. உயர்தரம் படித்துக்கொண்டிருந்தாள். அம்மா, அப்பா ஆசைப்படி தான் டொக்டராக வேண்டும் என்பதே அவளுடைய ஆசையாகும். அன்றொருநாள் அக்கிராமத்தில் நடைபெற்ற கோயில் திருவிழாவிற்கு இலக்கியா தன் பெற்றோருடன் சென்றிருந்தாள். கோயிலிலே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் கூட்டம் நிறைந்து வழிந்தாலும் அழகு தேவதையாக வந்திருந்த இலக்கியாவைப் பார்க்காதவர்கள் யாருமே இருக்கவில்லை எனலாம். அதில் இரண்டு கண்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தன. அதை இலக்கியா பொருட்படுத்தவில்லை. திருவிழா முடிந்ததும் இலக்கியா பெற்றோருடன் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருக்கையில் "ஹலோ உங்கட பேரென்ன?" எனக் குரல் கேட்டு இலக்கியா திரும்பிப் பார்த்தாள். தன்னை வைத்த கண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன். இலக்கியா பதில் ஏதும் கூறாமல் தாய் தந்தையுடன் வீட்டை அடைந்தாள்.

அன்று இரவு முழுவதும் இலக்கியாவால் தூங்கவே முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். தூக்கமின்றித் தவித்தாள். சுருண்ட கேசங்களை உடைய நெடிய கட்டுமஸ்தான உடல் வாகை கொண்ட ஒரு ஆணழகன் எனக் கூறலாம். அவனின் நினைவுகளே இலக்கியாவின் மனதில் வந்து சென்றது. மறுநாட்காலை வீட்டு வாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தாள் இலக்கியா. கோயிலில் தன்னை வைத்த கண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் மென்மையான புன்னகையுடன் நின்றிருந்தான். அம்மா யாரோ வந்திருக்கினம் எனக்கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள் இலக்கியா.

"வாங்கோ தம்பி என்ன வேணும் யாரை யாவது தேடுறியளோ? எனக் கேட்ட கனகாவிடம் உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும் என்றான். உள்ளே கூட்டி வந்து அமரச் செய்து இருங்கோ தம்பி இவர் கடைக்குப் போனவர் இப்ப வந்திடுவார் என்று கூறிவிட்டு கிச்சின் பக்கம் சென்றுவிட்டாள். கனகா தேனீருடன் வரவும் கந்தையரும் கடையால் வரவும் சரியாக இருந்தது. "இஞ்சருங்கோ உங்களத்தான்" தம்பி ஏதோ உங்களோடை கதைக்க வேணுமாம் என்று கனகா சொல்லவே... சொல்லுங்கோ தம்பி என கூறியவாறு அமர்ந்தார் கந்தையர்.

வந்த இளைஞன் தான் வந்த விடயத்தைத் துணிச்சலுடனும் சாதுரியமாகவும் கூறத் தொடங்கினான். நான் உங்கட மகள விரும்புறன் என்றவன் பணிவாக தனது பெயரையும் ஆதவன் எனக் கூறினான். உங்கட மகளைச் செய்து தந்தால் கலங்காமல் வைச்சிருப்பன் எனக்கூறி அன்பாக சிறிது நேரம் உரையாடிவிட்டு ஆதவன் விடைபெற்றான். கந்தையருக்கு ஆதவனை மிகவும் பிடித்துக் கொண்டது. ஆதவன் சென்றதிலிருந்து ஆதவனைப் பற்றியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக "ஆதவனுடைய நடையை சோழன் என்றும், அன்பை சேரன் என்றும், பெருமையை பாண்டியன் என்றும், மனதைப் பாரி என்றும்" தேன் மதுரத்தமிழில் தன் துணைவியிடம் புகழ்ந்து எம்மகளுக்குப் பொருத்தமானவன் ஆதவனே என முடிவாக்கிக் கொண்டார்.


ஆதவனோ இலக்கியாவே தனக்கு மனைவியாகக் கிடைக்க வேண்டும் என வற்றாப்பளைக்குப் பொங்கல், புதூர் புளியம்பொக்கணைக்குப் பொங்கல், திருமுறிகண்டியானுக்கு 108 தேங்காய், மடுவுக்கு யாத்திரை, ஒட்டுசுட்டான் சிவனுக்கு பிர தோஷ விரதம், மம்மிலுக்கு அவியல் என அவனது வேண்டுதல்கள் நீண்டு கொண்டே இருந்தது.

இலக்கியா உயர் படிப்பிற்காக நகரத்திற்குப் புறப்பட்டாள். கல்லூரி காலம் சென்று பல்க லைக்கழகக்காலம் இலக்கியாவை மென்மையான தென்றலாய் வருடிச்சென்றது. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி காலங்கள் உருண்டோடியது. வன்னியில் இறுதிப் போர் அரக்கன் வடிவில் சதிராடினான். வனப்பு மிகு வன்னி மண் வறண்டு போயிற்று. பல்குழலின் பரிசால் பசுமை குலைந்தது. ஊரை விட்டு, உறவுகளை விட்டு சொல்லிக் கொள்ளாமல் ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. குண்டு மழைகள், கூவும் எறிகணைகள், சிதறும் சன்னங்கள், சீறும் தோட்டாக்கள் வான் சுற்றும் வான்படைக் கழுகுகள் என்று உயிரை கையில் கொண்ட தங்கள் வருங்கால மருமகன் ஆதவனின் துணையோடு கந்தையரும் கனகாவும் ஓடிக்கொண் டேயிருந்தனர்.

வன்னியின் இறுதி நாட்கள் எண்ணப்பட கந்தை யர் கவலை கொண்டார். நாம் இருவரும் எம் மகளைப் பிரிந்து விடுவோமோ என்று இரைச்சலிலும் இசை உள்ளது என்று இசையை உயிராய் நினைத்த உள்ளம் இசையைக்கூட மறக்க வைத்த கணம் அது. அவ்வேளை கூவி வந்த எறிகணை ஒளிப்பிழம்பாய் ஆதவனின் கண் முன்னே விழுந்து சிதறியது. அவன் கண்டது எறிகணையின் ஒளியைத்தான்.

ஆதவனே கதியென்று இருந்த அவர்கள் அவன் கண் எதிரே பறிபோனதை உணர்ந்து கதறியழுதான், புழுவாய் துடித்தான், செய்தவதறியாது தவித்தான் வன்னி மண்ணும் விடுபட்டு காலச் சக்கரம் உருண் டோடிற்று.

"ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரை காத்திருக்குமாம் கொக்கு" என இலக்கியாவின் வரவிற்காய் காத்திருந்-தான் ஆதவன். இலக்கியாவும் தன் பெற்றோர் ஆசைப்பட டொக்டராகி தனது கிராமத்தை வந்த டைந்தாள். இலக்கியாவின் மனதில் இருந்த சுமைகள் அவள் விழிகளில் நீராய் ததும்பியது. இருகரங்களை நீட்டி புன்னகையோடு வாங்கே டொக்டரம்மா என ஆதவன் அழைக்க மெய் சிலிர்த்து மெதுவாக விழயசைத்து ஆதவனுடைய மார்பில் சாய்ந்து கொ ண்டாள் இலக்கியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுற்றும் பூமியில் உன்பெயரை நடு"

த. பிரணவன்
A/L 2016 கலைப்பிரிவு,
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்.

இளைய தலைமுறையே காலம் அசையும் ஓசைகேட்கிறதா?
காற்று வெளியில் அதன் விரல் தடவல் தெரிகிறதா?
கண்ணுக்கு தெரியாத சிற்றெறும்பின் வரிசையிலும்
காலத்தின் ஓட்டம் நடப்பது புரிகிறதா?

இளைய தலைமுறையே கூடுகட்டி உன்கையில் ஓடவிடும்
மூன்று முள்ளின் முனையில்
காலம் பிடிபடுமா?
உன் இதயத்துடிப்பா அன்றி காலச் சுவடறிவா?

உன் காலத்தை கூடுகட்டி ஓடவிடும் நீ
ஏதும் பிரக்ஞையற்று அதைப் போட்டிறைக்கிறாய்
கால் கழுவ ஊற்றும் நீராய்
காலம் வழிகிறது

ஓய்விலும் செயற்படு - உயர்
ஒழுக்கத்தைக் கைபிடி
தேய்விலும் முதுமை காண் - உயிர்
போகிலும் உன் பெயர் வாழும்

இன்று அயலவனுக்கு நடப்பவை
நாளை உனக்கும் வரலாம்.
அநீதிகளைத் தட்டிக் கேட்கும் போது
முகத்தைப் பாராதே நீதியைப் பார்

பொறுமையில் பூமியாய் இரு
கடமையில் அடைமழையாய் எழு
பொங்கி எழும் போது சூறாவளியாய்ச் சுடு
சுற்றும் பூமியில் உன்பெயரை நடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வளை ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்"

KN/203

## கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## Karachchi Northan Fishermen's Co Operative Society Federation

# பனிக்கட்டி உற்பத்தி விற்பனை நிலையம்


**புளியம்பொக்கணை**

## எமது சேவைகள்...

- நிழற்ப்பட பிரதி
- லெமனேற்றிங்
- கணினித் தட்டச்சு
- கதிரை வாடகை
- பந்தல் சேவை










**புளியம்பொக்கணை, கண்டாவளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திக்கெட்டும் பரவும் இன்னிசை வளை ஓசை"

NSB

**National Savings Bank**

**தேசிய சேமிப்பு வங்கியின் பல்வகை சேமிப்புக் கணக்குகளும் அதன் மூலம் உங்களுக்கு கிடைக்கும் அனுகூலங்களும்.**

- சேமிப்பிற்காக அதியுயர் வட்டியைப் பெற்றுத் தரும்
- "Happy Savings" சிறுவர் சிறுமியருக்கு ஹப்பன், புஞ்சி ஹப்பன் கணக்குகள்
- இளைஞர் யுவதிகளுக்கு "இத்துறு மித்துறு கணக்கு"
- பெண்களுக்கு விசேடமான "ஸ்திரி" கணக்கு
- வாகனக் கொள்வனவிற்கான Auto Loan வசதி
- தனிநபர் கடன் 1,500,000/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
- "உங்கள் வைப்புத் தொகைக்கு பூரண அரச உத்தரவாதம்"
- அந்நியச் செலவாணியைச் சேமிப்பதற்கு "ரண்மசு" NRFC/ RFC சேமிப்பு நிரந்தர வைப்புக்கள் (3 மாதம், 6 மாதம், 12 மாதம், 24 மாதம்)
- 24 மணி நேரமும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வசதிகள்.
- உழைக்கும் போதே நன்மைகளைப் பெற SESA கணக்குகள்.
- Internet, SMS Banking.
- நீர், மின்சாரம், தொலைபேசி பட்டியல்களைச் செலுத்தக்கூடிய வசதிகள்
- NSB தொடர்பான எந்தவொரு தகவல்களையும் பெற்றுக்கொள்ள வெப்தளம் www.nsb.lk
- 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஸ்ட பிரஜைகளுக்கு உரிய வட்டியை வழங்கும் வைப்புக்கள் 15%
- குறைந்த வட்டியில் "ரண்சஹன" அடகுச் சேவை 15%
- ஓய்வு பெறும் வேளையில் சேமிப்பாக அமையும் PENSION + கணக்கு
- உங்கள் வசதிக்காக NSB Call Centre 2379379
- சொந்த வீடொன்றை உங்கள் வசமாக்க பலவிதமான வீட்டுக் கடன் வசதிகள்
- வைப்பின் மீதான வீட்டுக் கடன் வசதிகள்
- வைப்பின் மீதான 90% கடனைப் பெற்றுகொள்ள Speed Loan
- ATM வசதியுடன் பொருட்களைக் கொள்வனவு செய்ய Shopping Card வசதி
- 5 வருட நீண்டகால நிலையான வைப்புகளுக்கு 13%
- **தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்

சு. பாஸ்கரன்
3ம் யுனிற், ஊரியான்.

கடந்தகால யுத்தமும் பொருளாதார நெருக்கடிகளும் அதன் பின்னரான இடப்பெயர்வுகள் இழப்புக்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் மீள்குடியேறியுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வாழ்விட வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நிலை வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலை பல்வேறு சவால்களை மீள்குடியேறிய மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு கடன்களைப்பெற்று அவற்றை மீளச்செலுத்த முடியாமல் ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வங்கிகளிலும் தனியார் கம்பனிகளிலும் நுண்கடன் நிதிநிறுவனங்களிடமிருந்து பல்வேறு வட்டி வீதங்களில் தொழில் தேவைகள் கருதி பெற்றுக்கொள்ளும் கடன்கள் அந்த நோக்கத்திற்காகச் செலவு செய்யாமல் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிலையில் அவற்றை மீளச் செலுத்த முடியாமல் பல குடும்பங்கள் உள்ளன.

இதனை விடவும் தேவைகருதி வங்கிகளில் கடன்பெற்று அந்த தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்ட போதும் அதனால் போதிய வருமானம் கிடைக்காமையினால் கடன்களை மீளச்செலுத்த முடியாமலும் காணப்படுகின்றன.

இவ்வாறான பல்வேறுபட்ட கடன் சுமைகளால் மீள்குடியேறிய குடும்பங்களிடையே குடும்பப் பிணக்குகள், குடும்ப வன்முறைகள், தற்கொலைகள் என்பன நாளுக்கு நாள்நீண்டு செல்கின்றன.

யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறிய மக்களின் தேவைகருதி நிதி நடவடிக்கைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களில்பல்வேறுபட்ட பாதக சாதக நன்மைகள், தீமைகள் ஏற்பட்டுள்ளன என மத்திய வங்கியினால் தெரிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் தற்போது அரச தனியார் வங்கிகள் என 21 வரையான வங்கிக் கிளைகள் இயங்கி வருகின்றன.

கடந்த 2009ம் ஆண்டுக்கு முன்னர் நான்கு வங்கிகள் மாத்திரமே கிளிநொச்சி நகரில் இயங்கி வந்தன.

இதனைவிட நிதி நிறுவனங்கள் குத்தகைக் கம்பனிகள் என அழைக்கப்படக்கூடிய லீசிங் கம்பனிகள் இதனைவிட நுண் நிதிக் கம்பனிகள் எனப்படுகின்ற மைக்றோ பினான்ஸ் நிறுவனங்கள் இயங்குகின்றன.

அத்துடன் கிராமிய வங்கிகள், சமுர்த்தி வங்கிகள் என்பனவும் இயங்கி வருகின்றன. இவைதவிர வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், அடைவுபிடிப்பவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் நிதி நடவடிக்கைகளை கையாளுகின்றனர்.

இவற்றில் வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் இலகுபடுத்தப்பட்ட வகையில் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் வங்கிகளூடாக வழங்கப்பட்ட கடன்களில் பத்து வீதமான கடன்கள் இதுவரை மீளச்செலுத்தப்படாமல் உள்ளன.

இவ்வாறு கடன்களை செலுத்தமுடியாதவர்கள் அதிகமாக நுண்கடன் நிதி நிறுவனங்களை நாடி அதிகூடிய வட்டிக்குக் கடன்களைப் பெற்று அதனை செலுத்த முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதாவது வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங்களில் கடன்களைப் பெற்றுக்கொண்டு அவற்றை உரிய காலத்தில் மீளச்செலுத்தப்படாமல் இருக்குமாயின் கடன்பெற்றவரின் பெயர், தே. அ. அட்டை எண் என்பன கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் அவரது நிதி ஒழுக்கம் எவ்வாறு உள்ளது என அவதானித்து எதிர்காலத்தில் கடன்களையோ அல்லது ஏனைய நிதி நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான நிலையில் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட 46 நிதி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 26இற்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்கள் தற்போது வடக்கில் இயங்கி வருகின்றன.

இவை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களாகும். இதனைவிட மத்திய வங்கியின் ஆளுகைக்குட்படாத நுண்பாக நிதி நிறுவனங்களும் இயங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிதி நிறுவனங்களில் கடன்களை பெற்றுக்கொள்பவர்கள் அதனை மீளச்செலுத்த முடியாமல் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் அத்துடன் கடன்களால் குடும்பப் பிணக்குகள் குடும்பங்களின் பிரிவுகள் தற்கொலைகள் என்பன இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நுண்கடன் திட்டங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டிய தேவையும் அதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவைகளும் எல்லோரிடத்திலும் உள்ளது.

இவ்வாறான கடன்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகும் நிலையினை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அவதானிக்க முடிந்துள்ளது.

அதாவது வீட்டுக்கே வந்து கடன்களை வழங்கும் தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை மீளச் செலுத்திக் கொள்வதற்கு தற்போது தொழில் வாய்ப்பின்மை பொருளாதார நெருக்கடி, வருமானமின்மை காரணமாக அவற்றை உரிய காலத்திற்குச் செலுத்த முடியாதுள்ளது.

இதற்காக அவர்களிடம் நாங்கள் தவணைகளை கேட்கின்றோம். அவர்கள் அதற்கு உடன்படுவதில்லை. இந்த கடன்களைச் செலுத்துமாறு வற்புறுத்தி தினமும் இரவு 10.00 மணி வரையும் அதற்கு பின்னரும் வீடுகளிலேயே நிற்கின்றனர். இதனால் வயது வந்த பிள்ளைகளை வைத்திருக்கின்றோம். பெண்களாகிய நாங்களும் குடும்பத்திலும் சமூகத்திலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனக் கடன் பெற்ற பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வவுனியா, நெடுங்கேணி மற்றும் முல்லைத்தீவு மல்லாவி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் இயங்கி வருகின்ற நிதி நிறுவனங்கள் அதி கூடிய வட்டிக்குக் கடன்களை வழங்கியிருக்கின்றன.

இதில் 90 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களே இவ்வாறான கடன்களைப் பெற்றுள்ளன.

சிலர் நிதி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்று அதனை அதிகூடிய வட்டிக்கும் அதனைவிட ஒரு தொகையினை தாம் எடுத்துக்கொண்டு மிகுதியை ஒப்பந்த அடிப்படையில் சிலருக்குக் கொடுத்துவிட்டு முழுத்தொகையினையும் அந்த பணத்தினைப் பெற்றுக்கொண்டவர் கட்டுகின்ற நிலைமையினைக் கூட அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு நுண் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களை பெற்றுக்கொள்பவர்களில் அதிகூடிய தொகையினர் பெண்களாகவே உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளைகள் எதனையும் கொண்டிருக்காத நிதி நிறுவனம் ஒன்று கிளிநொச்சியில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் மக்களிடத்தே அதிகூடிய வட்டி வீதங்களில் கடன்களை வழங்கிவிட்டு அவற்றை அறவிட்டு வருவதுடன் உரிய காலத்தில் கடன்களை செலுத்தத் தவறின் பயனாளிகளிடம் அதற்குப் பதிலாக மிகவும் பெறுமதி வாய்ந்த வீட்டுப்பாவனைப் பொருட்களை குறைந்த தொகைக்காக பறித்துச் சென்றுள்ளது எனவும் பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது,

குறித்த ஓர்கிராமத்தில் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பெண்தலைமைத்துவக் குடும்பத்தில் உள்ள ஒருவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருவதுடன் அந்த குடும்பத்திற்கான மாத வருமானம் 18000 ரூபாவிற்கும் குறைவான தொகையில் உள்ள நிலையில் குறித்த குடும்பம் இவ்வாறான நிதி நிறுவனங்களிடமிருந்து நான்குக்கும் மேற்பட்ட கடன்களைப் பெற்று மாதம் ஒன்றுக்கு சுமார் எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொகையை வட்டியும்முதலுமாக செலுத்த வேண்டியநிலையில் 54000 ரூபாவிற்கு வாங்கிய தொலைக்காட்சிப் பெட்டியை குறித்த நிறுவனங்களில் ஒன்றுக்கு 20000 ரூபாவிற்கு கட்டாயத்தின் பெயரில் கொடுத்துள்ளார்.

இதனைவிட அடுத்தகடனைச்செலுத்த முடியாமல் உள்ள நிலையில் குளிர்சாதனப் பெட்டியை தருமாறு நிதி நிறுவனத்தினர் வற்புறுத்தி வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

கடன் அறவிடுபவர்கள் கடனைக்கட்டுமாறு வீட்டில் வந்துநிற்பதுடன் இரவு 10.00 மணி என்றாலும் அவர்கள் போக மாட்டார்கள் அதனால் மேற்படி தொலைக்காட்சிப் பெட்டியை கொடுத்தேன் இவர்கள் இரவு வேளைகளில் வீடுகளில் இருப்பதனால் நாங்கள் இருவரும் பெண்கள் என்பதால் பல்வேறு சமூக பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். இனித் தற்கொலை தான் செய்து கொள்ள வேண்டும் எனவும் அந்த பெண் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று நுண்கடன் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்பெற்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் அதனை செலுத்த தவறிய நிலையில் கடன் அறவிடுபவர்கள் தினமும் வருவதனாலும் இரவு வேளைகளிலும், பகல் வேளைகளிலும் காலநேரமின்றி இவர்கள் வருவதனால் எங்களது குடும்பத்தில் ஒரே பிரச்சினை. அத்துடன் எனது கணவனின் உறவினர்கள் மத்தியில் நான் தவறாகப் பார்க்கப்படும் நிலை கூட காணப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகளவிலே இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கடன்களைப் பெறும் பயனாளிகள் அதனை செலுத்தத் தவறிய நிலையில் பகல் வேளைகளில் வீடுகளைப் பூட்டிவிட்டு வேறு இடங்களுக்கு சென்று விட்டு இரவு வேளைகளில் வருவதும் ஒரு காரணமாகவுள்ளது.


இவ்வாறான நுண்கடன் நிதி நிறுவனங்கள் மற்றும் அதிகூடிய வட்டி வீதங்களைக் கொண்டவர்களிடமிருந்து வட்டிக்கு பணம் பெற்றுக்கொள்பவர்கள் பல்வேறு தேவைகளுக்காகக் கடன்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

குறிப்பாக வீட்டுத்திட்டங்களை நிறைவு செய்தல் மற்றும் வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறுபட்ட தேவைகளுக்காக இவ்வாறு முறைகளற்ற விதத்தில் அதிகூடிய வட்டிக்குக் கடன்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால் வங்கிகளில் இதற்கான திட்டங்கள் உள்ளன. அவற்றை பெற்றுக்கொள்வதற்குரிய தகைமை அல்லது ஏற்கனவே பெற்ற கடன்களை செலுத்தப்படாமை என்பவற்றால் வங்கிகளில் கடன்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்களே இவ்வாறு நுண்கடன்களைப் பெற்றுக்கொண்டு சிரமங்களை எதிர்கொள்கின்றர்.

இதனைவிட வாழ்க்கைச் செலவுக்கான வருமானங்களைத் தேடுவதற்கே பெரும் போராட்டமாகவுள்ள இந்த போட்டியுலகில் மற்றவர்களைப் போன்று மோட்டார்சைக்கிள், தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி மற்றும் கட்டில், கதிரை என்பவற்றை வாங்கி ஆடம்பரமாக வாழவேண்டும் என்றும் கடன்களைப் பெற்று கடனாளிகளாக மாறி அவற்றை செலுத்த முடியாமல் உள்ளவர்கள் ஒருபுறம் இவ்வாறு பல்வேறுபட்ட கடன் சுமைகளால் தொழில் வாய்ப்புக்கள் இன்றி ஏராளமான குடும்பங்களில் குடும்ப வன்முறைகள், குடும்பப் பிணக்குகள், குடும்பப் பிரிவுகள், தற்கொலைகள் என நீண்டுசெல்கின்றன.

இவ்வாறு கடன்திட்டங்களின் பாதக, சாதக நிலைமைகளை அறிந்து பயனாளிகள் கடன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது மிக மிக முக்கியமானதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னூரான் கண்ணூரான்

✍ ம. றோமியல்
கட்டைக்காடு.

ஊன் உருக்கி
உறவிழந்து ஊமையாய்
ஊரை வாழ வைப்பதற்காய்
உயிரோடு போராடுவான் என்னூரான்......


மீண்டெழுந்தான் மிடுக்குடன்
நன்செய் நிலமெலாம்
தீமூண்டெழுந்த போதும்
வன்கரம் பற்றி வயலோடு என்னூரான்......

ரங்கூன் அரிசி வரும்
அமெரிக்கன் மா வரும்
சிங்கப்பூர் சீமை பருப்பு வரும்
ஏக்கத்தை விட்டு எழுவான் என்னூரான்......

கெந்தகமாய் எந்தை நிலம்
மாயையுறும் உலக மயமாகலில்
கரைந்து போகா வண்ணம்
காத்து நிற்பான் என்னூரான்......

தன்கை நம்பியவன்
ஏணியாய் நிலை உயர்த்த முனைபவன்
பாறை தினம் பிழந்து வாழ்வுக்கு
பறையறிவான் என்னூரான்......

கூடி வாழ்வு வாழக் கூட்டாக நின்று
குதூகலம் செய்திடுவான்
குற்றமற்ற குலம் செயும்
கோடி பெருமை கொள்வான் என்னூரான்,
என்றுமே அவன் கண்ணூரான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. Anthony's Supply Centre





Mob : 077 304 8648, 076 798 2956
T.P : 021 228 0006

144/2, Mullai Rd.
Paranthan junction,
Paranthan.




# அம்மனாட்சி உந்துருளி சீர்களம்




முல்லை வீதி, தருமபுரம்.

தொ. இல : 077 123 9055


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத தேசத்தின் சிற்பிகள்

✍ ஜெயநிதி கஜீபன்
கிளி /தர்மபுரம் மத்திய கல்லூரி

ஒரு தேசத்தின் வளர்ச்சி அத்தேசத்தின் மக்களது நடத்தையிலேயே தங்கியுள்ளது. ஒரு தேசத்தின் மக்கள் அமைதியானவர்களாக, ஒழுக்கமானவர் களாக, முழுமையானவர்களாக இருந்தார்களேயா-னால் அத்தேசம் உன்னத வளர்ச்சியடையும். இயற் கையன்னை மனிதனை அறிவு வளர்ச்சிக்குரிய மூளை-யோடும் உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளான். ஆகவே மனிதனின் முழுமையான வாழ்விற்கு அறிவும் வேண்டும் உணர்வும் வேண்டும். இவற்றையெல்லாம் மனி-தனுக்கு வழங்கி அவனை முழுமையான மனிதனா-லேயே உன்னதமான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இலக்கியமானது மொழியை கருவியாகக்கொண்டு பிறப்பது காலத்தினால் அழிவின்றி நிலைப்பதனையே அளவு கருவியாக கொண்டு வாழ்வது. உணர்ச்சியுங் கற்பனையுங் கூடிய அனுபவ வெளிப்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது இக் காரணங்களினால்; அது மனிதனை பண்புடையவனாக்குவதில் சிறப்புடையதாகிறது. இத்தகைய இலக்கியத்தின் பயன்கள் எண்ணற்றவை. உலக வரலாற்றையே மாற்றியமைக்கும் தன்மையுடையன. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களிலும் பார்க்க மன வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையவை. மனித சமுதாயத்தின் மன வளர்ச்சிக் கூறுகளான விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை போன்றவற்றை பண்படுத்துவதனாலேயே வரலாறு பெருமளவு மாற்றமடைகிறது. உள்ளத்தின் ஆழத்திலே முளைவிட்டு வளர்ந்து செழிக்கும் அன்பு, அருள், தியாகம், தன்னலமறுப்பு முதலிய நல்லுணர்வுகளால் உண்டாகும் சீர்திருத்தமே நிலையானதும் பயனுள்ளதும் ஆகும்.

இந் நல்லுணர்வுகளை மனிதனிடத்தே பயிர் செய்வது இலக்கியம் எனவே உயரிய சமுதாய மலர்ச்சியை உண்டாக்க வல்லது இலக்கியம் வரலாற்றுக் கண்கொண்டு நோக்குவோர்க்கு இவ்வுண்மை புலனாகும். அதனாலேதான் 'சட்டம், அறிவியல், தத்துவத்துறை' முதலியவற்றை ஆக்குவோரிலும் பார்க்க இலக்கியங்களை படைக்கும் புலவர்கள் ஆற்றலும் செல்வாக்கும் உடையவர்களாய் மனித உள்ளங்களை ஆள்கிறார்கள் என இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கை யென்னும் நறுங்கனியின் தீஞ்சுவைச்சாறே இலக்கியமெனில். அது முற்றும் பொருத்தமுடையது. பொய்யில் புலமைச் சான்றோர்கள் ஆக்கித்தந்த இலக்கியங்கள் மாந்தரியல்பின் ஆழத்தையும் அகலத்தையும் நன்மை தீமைகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து கூற வல்லன. அவற்றை விட பல கோணங்களிற் கிளைத்துச் செல்லும் உணர்வோட்டங்களையும் மன வெண்ணங்களையும் ஆசாபாசங்களையும் நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவாக படம் பிடித்துக் காட்டவல்லன.

சங்க இலக்கியத்து அகத்துறைப் பாடல்களும் புறத்துறைப் பாடல்களும் இவ்வுண்மையைத் தெளிவாகவும் ஆழமாகவும் நுட்பமாகவும் புலப்படுத்துகின்றன. புறத்துறைப் பாடல்களிலே சங்கச் சான்றோரின் மனச்சான்றும் அஞ்சாமையும் புலப்படுத்துகின்றது. வாழ்க்கைத் தத்துவங்களும் பண்டைத்தமிழர் வாழ்வு முறையும் வைர மணிகளாய் ஒளி விடுகின்றன. அகத்துறைப் பாடல்களிலே மாந்தரின் நுண்ணிய உணர்வோட்டங்கள் துடிக்கின்றன. ஆனால் இலக்கியம் கற்போர் மனவளர்ச்சியுடையவர்களாய் ஒழுக்க நெறி போற்றும் சீரிய உலகியலறிவைப் பெறமுடிகிறது.

இவ்வுலகில் குற்றம் குறையும் இன்றிய முழு நிறைவு பெற்ற மனிதன் எவனுமே இருக்க முடியாது அங்ஙனம் இருப்பானேயானால் அவன் மனிதநிலை கடந்த தெய்வமாகிறான். அந்நிலையடைவதற்கு தன்னிடமுள்ள குற்றங் குறைகளையுணர்ந்து அவற்றை நீக்கும் வழிகளை கண்டறிந்து நீக்க வேண்டும் அதற்கு சிறந்த கருவிகளாவன இலக்கியங்களேயாகும். இலக்கியங்கள் புலவனது உணர்ச்சியையும் கற்பனையையும் மாத்திரமன்றி அவனது அனுபவங்களையும் புலப்படுத்தும் இயல்பு கொண்டன. அவ் அனுபவங்களுக்கு உருக்கொடுத்துப் பாத்திரங்களாக நடமாட விடுகின்றனர். புலவர்கள் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் உயர் பண்புகளின் சிகரமாய் இராமன் சித்தரிக்கப்படுகின்றான். பொறுமையின் சின்னமாய் இராமனும் தியாகத்தின் திருவுருவமாய் பரதனும் கள்ளங்கபடமற்ற அன்பின் வடிவமாய் குகனும் தந்தைக்குரிய பாசத்திற்கு தசரதனுமாக சகோதர பாசத்திற்கு இலக்குமணனுமாய் கற்புக்கு சீதையும் வருகின்றனர். ஆனால் வீரமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுணர்வும் ஆன்மீக பக்தியாளனுமாக இருந்தும் பிறன் மனைவியை நயந்தமையில் அழிவுறும் இராவணன் காணப்படுகிறான். வஞ்சனை வடிவமாக கூனி வருகிறாள்.

இவ்வாறே மகாபாரதத்தில் தர்மவாதிகள் அதர்மவாதிகள் என பலவகை இயல்பு கொண்டோர் உலாவுகின்றனர். இப் பாத்திரங்களின் இயல்புகளை ஆழ்ந்து கற்பதனால் நல்லுணர்வுகளைப் பெருக்க முடியும். தீய உணர்வுகளை நீக்க முடியும். இப்படியானவர்களாக வாழ வேண்டும். அதனால் உயர்வடையலாம். இப்படியானவர்களாக வாழக்கூடாது. அதனால் துன்பமே கிட்டும் என்ற உணர்வினை மக்கள் அகங்களிலே ஊட்டி அவர்களை நல்வழிப்படுத்துகிறது.

அனுபவக்களஞ்சியங்களான இலக்கியங்கள் ஒவ்வொருமனிதனையும்சீர்திருத்தவல்லனவாகின்றன. அதனாலே தான் கவலையடைந்தோரும் உலக வாழ்வில் வெறுப்படைந்தோரும் அவற்றை வெறுத்தொதுக்கத் துணிவதில்லை. வாழ்வை வெறுத்து சாகத்துடிக்கும் மனிதனைக் கூட தேற்றி மாற்றி விடக்கூடிய இலக்கியமாக அமைவது பகவத்கீதை வேதனையுடனான மனதிற்கு மருந்து போல அமைவது அதில் "எது நடந்ததோ நன்றாகவே நடந்தது, எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்..." என வாழ்வில் யதார்த்தத்தை உரைக்கின்றது.

அதுமட்டுமன்றி இலக்கிய கர்த்தாக்கள் தமது அனுபவங்களை இலக்கியமாக படைக்கும் போது உலக ஒற்றுமைக்கு தேவையான சகல அம்சங்களையும் இரண்டடி பாடல்களாகவும் படைத்துள்ளனர். உதாரணமாக திருக்குறளை குறிப்பிடலாம். மனித மனத்திலே ஆழமாக பதியக்கூடிய வகையில் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கூறப்பட்டுள்ளது. அதாவது கல்வி, கல்லாமை, செங்கோல், கொடுங்கோல் என தொடர்ந்து பத்து குறள்களில் கூறியமையால் அதன் கருத்து மக்கள் அகத்திலே ஆழப்பதிந்து மனிதனை பண்புடையவனாக மாற்றுகிறது. அதனாலேயே திருக்குறள் நாற்பதிற்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாக விளங்குகிறது.

இது போலவே நாலடியார், இன்னா நாற்பது இனியவை நாற்பது, ஆசாரக்கோவை போன்ற அற இலக்கியங்கள் மனிதன் பின்பற்ற வேண்டிய விதி முறைகளைக் கூறி அவனை நெறிப்படுத்துகிறது. இவற்றைவிட பாரதியார் கவிதைகள் கண்ணதாசன் கவிதைகள் போன்றனவும் அவர்களது அனுபவ வெளிப்பாடு அவையும் மனிதனை நெறிப்படுத்து வனவையே.

வரலாற்று முறையில் ஆராயும் போது உலகில் மனிதன் தோன்றிய நாள் தொடக்கம் இன்றுவரை பல வகைப்பட்ட புதிய புதிய சிக்கல்கள் கிளர்ந் தெழுந்துள்ளமையை அறிய முடியும் தேசங்களோடு தேசங்களும் நாடுகளோடு நாடுகளும் பகைத் தெழுந்து சீர்குலைந்து உள்ளன. மக்கள் ஒருவரோ டொருவர் பழகும் போதும் குடும்பமாக வாழும் போதும் பிணக்குகள் பல தோன்றியுள்ளன. இத்தகைய சீர்கேடுகளும் பிணக்குகளும் காரணமாயமைவது மக்கள் மனதில் கலையுணர்வும் சால்புணர்வும் வேர் கொள்ளாமையே இவற்றை யெல்லாம் காவியங்கள், கவிதைகள், புராணங்கள் வெளிப்படுத்துகிறது. கலை யுணர்வை மனிதனுக்கு ஊட்டுபவையாக கலைகள் விளங்குகின்றன.

பண்பாட்டிற்கு பண்பாடு அதன் இயல்புகளுக்கு ஏற்ப கலைகள் பயிலப்பட்டு வந்திருக்கின்றன. கலை இல்லாது எந்த சமூகமும் இருந்ததில்லை. ஏனெனில் உணர்ச்சி வெளிப்பாடு அழகியல் நாட்டமும் மனிதனின் அடிப்படையான இயல்பு ஊக்கங்களோடு சம்பந்தப்பட்டு இருந்தது தான் அடிப்படையில் கலை என்பது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் பாலமாக இருக்கின்றன. ஒரு அழகியல் வெளிப்பாடாகும். அதனால் கலை சமூக வெளிப்பாட்டிற்கு உதவும் ஒரு காரணியாக இருக்கின்றது.

கலையை நுண்கலை, கவின்கலை, அழகுக்கலை எனவும் கூறுவர். அவை கட்டிடம், ஓவியம், சிற்பம், நாடகம், நாட்டியம், இசை என பல பகுதிகளை உடையது. இவை அனைத்திற்கும் உணர்ச்சி வெளிப்பாடே உயிராக இருக்கும். கட்டிடக்கலை மனித மனத்தை லயிக்கச் செய்வதனாலேயே சோழர் காலத்தில் பிரமாண்டமான ஆலயங்களை கட்டினர். மனம் கவரும் வகையில் இருநூற்று பதினாறு அடி உயரமான தஞ்சைப் பெருங்கோயில் விமானம் கட்டப்பட்டது. தொடர்ந்து கோபுரங்கள் கட்டப்பட்டன. இதைவிட சாஜகானின் தாஜ்மகால் இதேபோல ஓவியங்கள் பிரசித்தம் பெற்ற அஜந்தா ஓவியம், சிகிரியா ஓவியம், லியானாடோ டாவின்சியின் ஓவியம் இன்றும் மனித மனத்தை கவர்ந்தவையே. வரலாற்று சம்பவங்கள் புராண சம்பவங்கள், இயற்கை காட்சிகள் என பல தரப்பட்ட ஓவியங்களை வரைவதனாலும் இரசிப்பதனாலும் மனிதன் பூசல்களையும் பிணக்குகளையும் தக்க வகையில் புறங்கண்டு தோல்வியும் துன்பமுமற்ற நல்வாழ்வு வாழ முடிகிறது. இது போலவே சிற்பங்களும் மனித மனங்களை வென்று பண்புடையவனாக்குகிறது.

அடுத்து நாடகமும் ஓர் சிறந்த கலைப்படைப்பு இலக்கியங்களை வாசிக்கத் தெரியாத பாமர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் கூட நாடகம் மூலம் இதிகாச புராண கதைச் சம்பவங்களை அறிந்து வாழ்வின் உண்மையை உணர்கிறான். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து உண்மை பேசியதாக மகாத்மா காந்தியே கூறியுள்ளார். நாடகத்திலே பாத்திரங்கள் தாம் கொண்ட வேடத்தை உணர்வுடன் ஆடிக் காட்டுவதன் மூலம் நல்ல பாத்திரத்தின் பண்புகள் மனித மனத்தில் ஆழப்பதிந்து அவனை புடம் போடுகிறது.

உலகப்புகழ் பெற்ற நாடகாசிரியரான சேக்ஸ்பியரது நாடகங்கள் கூட அவல நாயகர்கள் பெரு வீழ்ச்சி அடைவதற்கு அவர்களிடமுள்ள ஒரு தீய பண்பே காரணம் என்ற படிப்பினை ஊட்டுகின்றன. "ஒதெல்லோவின் வீழ்ச்சிக்கு சந்தேகமும், மக் பெத்தின் வீழ்ச்சிக்கு பேராசையும், கம்லட் நாயகனின் வீழ்ச்சிக்கு பழிக்குப் பழி வாங்கும் குணமும், அன்ரனி கிறியோப்பற்றா நாடகத்தில் அன்ரனியின் வீழ்ச்சிக்கு காமமுமே" காரணமாக அமைந்ததை கூறி அதன் மூலம் மனிதன் தன்னைத் திருத்திக் கொண்டு வாழ வேண்டும் என்பதே ஆசிரியரின் நோக்கமாகும்.

பண்டைத் தமிழன் வரலாறுகள் கூட நாடகங்கள், கூத்துக்களாக ஆடப்படுகிறது. இது மக்களது சிந்தையில் வளர்ந்த எண்ணங்களையும் வாழ்க்கை முறைகளையும் காட்டும் உண்மை வரலாறு ஆகும். பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற நாடகங்கள் வரலாற்று நாடகங்களாக மக்கள் மனதில் பதிந்துள்ள பாடங்களே. இவ்வாறே வெவ்வேறின மக்களின் உண்மை வரலாற்றினை அவர்களது நாடகங்கள் மூலமாக காண முடிகிறது.

இசை மனித மனத்தை வசப்படுத்துவது அதனாலேயே இசையால் வசமாகா இதயம் எது? என பாடியுள்ளனர். மக்கள் தமது பொழுதுபோக்காகவும் தமது வாழ்க்கையின் அனுபவங்களை வெளிப்படுத்தும் வகையில் பாடல்களை பாடுகின்றனர். நாகரிகம் மேற்பட்ட சமுதாயத்தினர் இசை இலக்கண அமைவோடு கூடிய சங்கீதத்தினை பண்பட்டதொரு கலையாக போற்றுவது போல நாட்டுப் பாடல்களையும் போற்றிக் காக்கின்றனர். ஆதி மனிதன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் பெறுவதற்கு ஆடலையும் அதற்கேற்ப பாடலையும் கருவியாகக் கொண்டான். எழுத்தும் ஏடும் தோன்றுவதற்கு முன்னரே உண்டான அப் பாடல்கள் வாய் முறையாக எங்கும் பரவல் ஆயின. நாகரிகம் வளர்ந்த போது புலவர்களும் இசைவல்லோரும் அவற்றை பின்பற்றி இசை அமைப்பு தாளக்கட்டும், கற்பனைச் செறிவும், சொல் நயமும் கொண்ட பாடல்களை இயற்றினர். வரையறை வாய்ந்த இலக்கண நெறி கண்டு உயரிய இசைக்கலையை சமுதாயத்தின் மிக மூத்ததொரு கலையாவதோடு, பண்பட்ட இசை பொதுமக்களின் இதயப்போக்கு பழக்கவழக்கங்கள், ஆசைகள் என்பவற்றை சரியான பாதையில் இட்டுச் செல்ல வழி வகுக்கும். சோழர் காலத்தில் மக்களை சமய ரீதியில் நெறிப்படுத்த இசையை ஒரு ஊடகமாக கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

இசையோடு உடன்பிறந்த பிரிக்க முடியாத மொழிக் கூற்று நடனம். இசையே அசைதலின் ஊக்கியாக நடனத்திற்கு ஊக்கியாக தொழிற்படுகிறது. இது உடலசைவுகள் மூலம் உருவாக்கப்படுகின்ற ஒரு கலையாகும். மனித உடலே இதன் பிரதான சாதனம். இந்த நடனம் மூலம் பல செய்திகளை மக்களுக்கு வெளிப்படுத்தி அவர்கள் பகைமை உணர்வை நீக்கி அமைதியானவர்களாக ஒற்றுமையை நோக்கிச் செல்ல வழிவகுக்கின்றது.

எனவே உலக மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்துச் செல்வதற்கு புலவர்கள் பலர் படைத்தளித்த இலக்கியங்கள், கலைஞர்கள் வளர்த்த கலைகள் பேருதவி புரிகின்றன. உலக நாடுகளிடையே பல்வேறுபட்ட கோட்பாடுகள் காரணமாக காலத்திற்கு காலம் அவை பகைமை பூண்டு போர் புரிந்தார்கள் ஆயினும் எவரும் இலக்கியங்களையோ கலைகளையோ, அதனை ஆக்கித்தந்த கலைஞர்களையோ பகைப்பதில்லை. அன்றியும் இன்று வேற்று மொழி இலக்கியங்களும் வேற்று கலைகளும் எமது மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டு மக்களிடையே பரவலடைகின்றன. இவ்வாறு இலக்கியங்கள், கலைகள் அனைத்தும் மக்களை சென்றடையுமானால் அதன் மூலம் அவர்கள் பண்பட்டவர்களாகி உன்னத தேசத்தை கட்டியெழுப்புவார்கள் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவின் சதி

✍ நா. நவீந்திரா.
கண்டாவளை


மாதுவின் வளை நுதலால்
வாழ்க்கையின் காவலன்
இட்டு வைத்த
அடையாளச் சின்னம் போல்
பௌர்ணமியின் அடையாளம்
நீதானே......!
உனக்கேன் அவளது நுதலில்
ஒரு ஆசை
அமாவாசை ஆக்கிவிட்டாய்.

வடிகின்றது கண்ணீர்
அவள் விழிதனில்
அவைகூட உன்னைச் சுற்றும்
நட்சத்திரம் போல் தானே
போன ஜென்மம் ஏதும்
அவள் உனக்கு
திலகத்தைப் பறித்தவளோ
உன் சதி அறியா அவள்
உன்னையே நாடுகிறாள்
தனிமையைப் போக்க...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேச கல்வி அபிவிருத்திப் பணியில் நான் முகம் கொடுத்த பிரச்சினைகளும் சவால்களும்

✍ தேசமான்ய கந்தையா வைரமுத்து (சமாதான நீதவான்)
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
கல்வி முகாமைத்துவம்,
முன்னாள் வடபிராந்திய அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்

கிளிநொச்சி கல்விப் பிரதேசம் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு 1983 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வீ. ஆனந்தசங்கரி அவர்களது பெருமுயற்சியினால் கிளிநொச்சி தனியான கல்வி மாவட்டமாக ஆக்கப் பெற்றது.

இதில் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 24 பாடசாலைகள் கண்டாவளை கல்விக் கோட்டத்தில் உள்ளடங்குகின்றது.

01.01.1980 இல் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை நிறைவு செய்து கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு ஆங்கில ஆசிரியராகப் பல போராட்டங்களின் பின் நியமனம் பெற்றேன். அப்போது திரு. சி. வ. ஐயந்துரை அவர்கள் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இப் பாடசாலை 05 ஆம் வகுப்பு வரையே இயங்கிக் கொண்டிருந்தது. இப் பாடசாலையிலேயே நான் ஆரம்பக்கல்வியை நிறைவு செய்தேன்.

இப் பாடசாலை ஓரிருவரைத் தவிர ஏனை-யோர் வறுமை காரணமாகவும் மேல்வகுப்புப் படிப்பதற்கான பாடசாலைகள் மிகத் தொலைவில் அமைந்திருந்தமையாலும் தங்களது படிப்பை 05 ஆம் வகுப்புடன் நிறுத்தி பெற்றாருடன் வயல்வேலை, தோட்டச்செய்கை, மந்தை வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

இவை அதிபரது மனதிலும் என்னுடைய மனதிலும் மிகவேதனையை ஏற்படுத்தியது. இதனால் நாம் க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்கள் படிப்படியாக (வருடா வருடம்) வைத்து நடாத்தத் தொடங்கினோம். ஆனால் இதற்கான எந்த அனுமதியும் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. அதிபரும் நானுமே சகல பாடங்களையும் கற்பித்து வந்தோம். 06 ஆண்டுகளின் பின் அவர்கள் க.பொ.த சாதாரண வகுப்பை அடைந்தவுடன் அப் பரீட்சைக்கான மாணவரைத் தயார்படுத்தல்களையும் நாமே மேற்கொண்டோம்.

எமது பாடசாலை க.பொ.த (சா/த) வகுப்புள்ள பாடசாலையாக பரீட்சைத் திணக்களத்தில் பதிவு இல்லாமையால் எமக்கு க.பொ.த (சா/த) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் கிடைக்கவில்லை. அதிபர் அவர்கள் அயல் பாடசாலைக்கு வந்த படிவத்தில் ஒன்றைப் பெற்று வந்து பூரணப்படுத்தி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து ஆண்டு 06 வைப்பதற்கு அனுமதிக்கடிதத்தை மறு தபாலில் அனுப்பி வைக்குமாறு கடிதம் கிடைத்தது.

நாம் அதிர்ந்து விட்டோம். அவ்வாறு அனுமதி எதுவும் எடுத்திருக்கவில்லை. இம் மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத நிலை தோன்றிவிடுமோ என்ற பயம். பெற்றாருக்கு எவ்வாறு பதில் கூறுவது என்ற ஏக்கம். எமக்கு வந்த கடிதத்தில் கையொப்பமிட்டவர் பெயரை வாசித்தும் அறிய முடியவில்லை.

அதிபர் இப் பொறுப்பை என்னிடமே தந்து செலவாகும் பணத்தில் அரைவாசியைத் தான் தருவ-தாகவும் உறுதியளித்தார்.

நான் அன்றைய தினமே புறப்பட்டு கொக்குவிலில் வசிக்கும் எமது வட்டாரக் கல்வியதிகாரி திரு. A. தங்கராசா அவர்களது வீட்டுக்கு சென்று நடந்தவையைக் கூறினேன். அவரும் அக் கடிதத்தை வாங்கிப் படித்து கையெழுத்திட்டவரின் பெயரை அறிய முயற்சித்து இறுதியில் சின்னத்துரையென அடையாளம் கண்டு கொண்டார்.

உடனே அவர் இவர் தன்னுடன் படித்த ஒருவர் எனவும் எனது சாவகச்சேரி வீட்டிற்கு அருகில் வசிப்பவர் எனவும், கூறி நாளை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நிற்குமாறும் தான் வருவதாகவும் கூறியிருந்தார். அவ்வாறு அடுத்த நாள் காலை அவரும் நானும் உதவிப் பரீட்சை ஆணையாளர் வீட்டிற்கு சென்று அவரைச் சந்தித்து விடயங்களைக் கூறிய போது ஆண்டு 06 அனுமதிக் கடிதம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. அப்படியானால் அயல் பாடசாலை ஒன்றில் அம் மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்வதாகவும் கூறினார். ஆண்டு 06 வைப்பதற்கான கடிதத்தை அப்போதைய கிளிநொச்சி கல்விப் பணிப்பாளரிடம் பெற்று வருவதே சிறந்த வழியெனக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதைய கல்விப்பணிப்பாளர் ஜனாப். M. M. மன்சூர் அவர்கள் பதவி உயர்வு பெற்று மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராகத் திருகோணமலையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நான் அன்றைய தினமே திருகோணமலைக்குச் சென்று நடந்தவற்றை முழுமையாக அவரிடம் கூறினேன். அவர் என்னிலும் அதிபரிலும் அளவற்ற பாசம் கொண்டிருந்த காரணத்தால் உடனே கடிதத்தை ரைப் செய்து இறப்பர் முத்திரை பதித்து வழங்கியிருந்தார். நான் அதனை எடுத்துக் கொண்டு கொழும்பிற்கு சென்று உதவிப் பரீட்சை ஆணையாளரிடம் சமர்ப்பித்து அடுத்த நாள் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதியைப் பெற்று வந்தேன்.

எமது முதலாவது தொகுதி மாணவர்களில் ஒருவர் சிவசிதம்பரம் இரத்தினேஸ்வரி அவர்கள் தற்போது பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றுகின்றார். இதன் பின் இப் பாடசாலையில் படித்தவர்கள் பலர் உப அதிபராக, ஆசிரியர்களாக, முகாமைத்துவ அலுவலகர்களாக, சுகாதாரதிணைக்கள உத்தியோகத்தர்களாக, தபால் அலுவலர்களாகப் பணியாற்றி வருவது எனக்கு மிகவும் மனத்திருப்தி அளிக்கிறது.

எனது அதிபர் அவர்கள் எனக்கு ஒப்புதல் அளித்தவாறு செலவினத்தின் பாதியை தர முற்பட்ட போது நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆரம்பக் கல்வியை தந்த பாடசாலை என்பதற்கு அப்பால் நான் பயிற்சிக் கலாசாலை நிறைவு செய்து தி/சம்பூர் மகாவித்தியாலயத்திற்கு நியமிக்கப் பெற்றேன். எனது குடும்ப நிலையைக் குறிப்பிட்டு கௌரவ அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் சிபாரிசுடன் கல்வி சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்ததின் பெயரில் கலவெட்டிதிடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பெற்றேன்.

1980 ஆம் ஆண்டு யூன் மாத பாராளுமன்ற அமர்வில் அப்போதைய கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் இப் பாடசாலைக்கு என்னை நியமித்தது தவறானது எனவும் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரை 05 ஆம் வகுப்பிற்கு உட்பட்ட பாடசாலைக்கு நியமிக்க முடியாது எனவும் 06 ஆம் வகுப்பிற்கு மேல் உள்ள பாடசாலையில் கிழமையில் ஆக குறைந்தது 20 மணித்தியாலம் அவரது பாடத்தில் கற்பித்தலில் ஈடுபட வேண்டும் எனவும் அப்போது தான் அவருக்கான பயிற்றப்பட்ட தராதரத்திற்குரிய சம்பளம் வழங்க முடியும் எனவும் இதில் ஏதோ ஊழல் நடந்திருப்பதாக கேள்வி எழுப்பி இருந்தார்.

கௌரவ அமைச்சர் தொண்டமான் அவர்கள் இதற்கு பதில் அளிக்கும் வகையில் கலவெட்டித்திடல் பாடசாலை ஓர் மிகவும் பின் தங்கிய கிராமப்புற பாடசாலை இதற்கு வேறு ஆசிரியர்கள் எவரும் செல்லமாட்டார்கள். இவர் அக்கிராமவாசி அத்துடன் இப்பாடசாலையை ஏன் அவருடைய தரத்திற்கு கால கிரமத்தில் மாற்றமுடியாது என குறிப்பிட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் அதனை மறுத்துப் பேச முடியவில்லை.

எனவே இப்பாடசாலையைத் தரம் உயர்த்துவதில் எனக்கு பாரிய பொறுப்பு இருந்தது.

01.01.90 இல் நான் கண்டாவளை அரசினர் வித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றம் பெற்றேன். அன்று அப்பாடசாலை க.பொ.த சாதாரண வகுப்பு வரையுமே கற்பிக்கப் பெற்றது. 150 மாணவர் தொகைக்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. 09, 10, 11 வகுப்புக்களைத் தவிர ஏனைய மாணவர்கள் நிலத்திலேயே இருந்து கல்வி கற்றனர். ஆசிரிய ஆளணி பாரிய பற்றாக்குறையாகவிருந்தது. குறிப்பாக ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை. தொண்டர் ஆசிரியர்களைக் கொண்டே இவ் வெற்றிடத்தை நிரப்பக்கூடியதாக இருந்தது.

இங்கும் அநேக மாணவர்கள் O/L வகுப்புடன் தங்களது கல்வியை நிறுத்தி பெற்றோருடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மேல் வகுப்புக்கள் படிப்பதனால் முரசுமோட்டை முருகானந்தா ம.விக்கு செல்ல வேண்டும். போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. 05 இற்கு மேற்பட்ட ஆறுகளையே மாரிக்காலத்தில் கடந்து செல்ல வேண்டும் பாடசாலையிலிருந்து வெளிக் கண்டல் சந்திவரை காடு அடர்ந்திருக்கும் இதனால் மாணவர்க்கு காட்டு மிருகபயம் இருந்தது.

அங்கும் இப்பாடசாலையை உயர்தரம் வரை ஆக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அப்போதைய கல்விப் பணிப்பாளர் எனது மதிப்பிற்குரிய திரு. க. கந்தசாமி அவர்கட்கு மேற்குறித்த விடயங்களை குறித்து விண்ணப்பித்தேன். அவர் அதனை நிராகரித்தது மட்டுமல்ல என்னை அழைத்து எச்சரித்தும் இருந்தார்.

ஆனால் இப் பாடசாலையில் A/L வகுப்பு ஆரம்பிப்பதற்கு முருகானந்தா வித்தியாலய அதிபரும் கொத்தணி அதிபருமான திரு. A. J அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடும் எதிர்ப்பைக் காட்டியிருந்தார். கொத்தணி அதிபர் என்ற ரீதியில் அவரது சிபாரிசும் இதற்கு தேவைப்பட்டது. இதனால் அவருடன் எனக்கு இருந்த நீண்ட நாள் நட்பும் முறிவடைந்தது.

எனது நல்லகாலம் என்னவோ கல்விப் பணிப்பாளர் அவர்கள் 03 மாதத்தில் கலிபோணியாவிற்கு விடுதலையில் சென்று விட்டார். அவருக்கு அடுத்தாற் போல் கல்விப்பணிப்பாளர் பதவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றவர் கோதை சின்னத்தம்பி வேலாயுதம் அவர்கள். அவர் எப்பொழுதும் தாயின் பெயரை முதன்மையாக எழுதுபவர். ஓர் அறிவுக் கடல் எனது ஆசிரியத் தொழிலுக்கு முதலாவது அதிபர் எனவே தயக்கம் இல்லாமல் இவரிடத்தில் சென்று விடயங்களை முன் வைத்தேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

A/L படிப்பதற்கு தகுதியான 15 மாணவர்கள் பெயர் O/L கல்வித்தகைமை ஆகியவற்றுடன் முன் விண்ணப்பித்த விண்ணப்பத்தையும் இணைத்துத் தருமாறு கூறினார். என்னிடம் 06 மாணவர்களே தகுதி உள்ள மாணவர்கள் இருந்தனர். தகுதியுள்ள 04 மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் படிப்பதற்கு பெற்றார் வலியுறுத்தி விடுதலைப்பத்திரம் பெற்றுச் சென்று விட்டார்.எனக்கு எதுவும் செய்ய முடியாது இறைவனை மன்றாடிக் கொண்டேன்.

இவ்விடயத்திற்கு வலுச்சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் இறைவனுக்கும் இருந்தது என்பது போல் தர்மபுரம் மகாவித்தியாலயத்திற்கு விமானக் குண்டுகள் பொழியப்பட்டு பாடசாலை மூடப்பட்டது. அங்கு A/L படித்த எனது கிராம மாணவர்களை ஒன்று சேர்த்து கண்டாவளைப் பாடசாலையில் சேர்த்து பட்டியல் தயாரித்து விண்ணப்பத்தை புதிய கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பித்த போது நாளை நான் திருகோணமலைக்கு செல்வதாகவும் தன்னுடன் என்னை வருமாறும் கூறினார்.

நானும் அவரும் திருகோணமலை சென்று அவரது சிபாரிசுடன் விண்ணப்பத்தை மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு. மனோகரனிடம் சமர்ப்பித்தேன். அவர் என்னுடன் முன்னமே பழகியவர் என்பதினால் இரண்டு நாட்களில் அதற்கான அனுமதியைத்தந்து உதவி இருந்தார். அனுமதியளித்து இருந்தாலும் A/L வகுப்பிற்கு கற்பிற்பதற்குரிய ஆசிரியப் பற்றாக்குறை நிலவியது. கல்விப் பணிப்பாளர்களது உதவியுடன் ஆசிரிய வளத்தை பெற்று முதல் தொகுதி மாணவர்களைத் தயார் செய்து பரீட்சைக்கு தோற்றுவித்தோம். மாணவர்கள் அனைவரும் (100% சித்தி) பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் தகுதியைப் பெற்றிருந்தனர்.

இக் கற்பித்தல் செயற்பாட்டில் தற்போதைய யாழ்ப்பாணக்கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரும் எனது மாணவனுமாகிய திரு. சி. மாணிக்கராசா அவர்களும் அவரது துணைவியார் திருமதி கௌரி மாணிக்கராசா ஆகியோரது அர்ப்பணிப்பான சேவை குறிப்பிடற்குரியது.

முதல்தொகுதி மாணவர்களில் கனகராசா லதீஸ்வரி அவர்கள் விரிவுரையாளராகவும் திரு. இளையத்தம்பி அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் அங்கு படித்த இன்னும் பலர் பட்டதாரிகளாக தொழில் புரிவது எனது நெஞ்சுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது. இதனால் தான் கண்டாவளை மகாவித்தியாலயம் வெளியிடும் வளைகதிர் நூலில் என்னை உயர்கல்வியின் தந்தை என குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வரிசையில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிடப்பட வேண்டும். அநேகமான மாணவர்கள் நிலத்திலேயே இருந்து படித்து வந்தனர். யுத்த காலத்தில் ஆனையிறவுப் பாதை தடைசெய்யப்பட்டு கொம்படி கண்டாவளைப் பாதையே பாவிக்கப்பட்டது. கந்தசாமி சேர் கலிபோணியாவிலிருந்து வந்துவிட்டார். வருட இறுதியில் திணைக்களத்திற்கான புதிய தளபாடம் அனைத்தும் கோவில் வயலுக்கு கொண்டு வரப்பட்டது.

அதிபர்கள் கூட்டத்தில் கல்விப்பணிப்பாளர் அவர்கள் தளபாடம் தேவையானவர்கள் கோவில் வயலிலிருந்து ஏற்றுமாறு கூறினார். மாரிக்காலம் ஆரம்பித்து விட்டது. வள்ளங்கள் மூலம் தான் ஏற்ற வேண்டும். ஒருவரும் ஏற்ற முன் வரவில்லை நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். எனது பாடசாலை, எனது முன்னைய பாடசாலை ஆகியவற்றின் தேவையைப் பூரணப்படுத்திய பின்னே மிகுதி ஏனைய பாடசாலைகளுக்கு வழங்குவேன் என கூறிக்கொண்டேன். கல்விப்பணிப்பாளரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

25 வள்ளங்கள் ஒழுங்கு செய்து எனது பாடசாலையின் பெற்றோரின் முழுப் பங்களிப்புடன் சகல தளபாடங்களையும் இரண்டு நாட்களில் பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒருமுறை நான் வந்த வள்ளம் தளபாடத்துடன் கவிழ்ந்தது. வள்ள ஓட்டியும் பெற்றாரும் என்னைக் காப்பாற்றி மீளவும் தளபாடங்களை ஏற்றி வந்தமை மறக்க முடியாததொன்று ஆகும்.

பின்னர் கண்டாவளைக் கோட்டக் கல்வியதிகாரியாக வந்த பின் சகல பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் என்னாலான பங்களிப்பைச் செய்து மாணவர்களுடைய அடைவு மட்டம் கூட ஏதுவாக இருந்துள்ளேன்.

இவ்வாறான கல்விச் செயற்பாடுகள் என்னை இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 இற்கு உயர்த்தியது மட்டுமல்ல கண்டாவளைப் பிரதேச செயலகம் சென்ற வருடம் நடாத்திய கலாசார விழாவில் **கலைஒளி விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டேன். உண்மையில் நான் இதனை எதிர்பார்த்திருக்கவில்லை.

எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் திரு. த. முகுந்தன் அவர்களுக்கும் அவரது குழாத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிரான வாழ்க்கை

திருமதி ஜெ. வராகினி
ஆசிரியர்,
பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்.

கவிதை எழுத மனதில் எண்ணி
காகிதத்தை எடுத்தேன்
கம்பன் முதல் கவிப்பேரரசு வரை
கந்தன் முதல் கரீஸ் வரை
கடுகிலிருந்து கஞ்சா வரை
எழுதித்தீர்த்து விட்டார்களே- நீ
எழுத என்ன உண்டு
என்றது என்மனம்.

அப்போது தான் நான்
அண்மையில் சென்ற
ஆலயத் திருவிழாவின்
அற்புதக் காட்சிகள் மனதில்
அம்சமாய் நிழலாடியது.

புதுமைகள் பல கொண்ட
புளியம்பொக்கணை நாகதம்பிரான்
புண்ணியத்தலத்தின் திருமஞ்சனத் திருவிழா
புதுப்பொலிவுடன் ஆரம்பமாகியது.

அலங்கார விளக்குகள் என்ன
அழகு மலர் மாலைகள் என்ன
ஆலயம் எங்கும் இனிய அழகும்
அமைதியும் அற்புதமாய்- ஆனால்
அடியவர் தலைகள் தான்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்

ஆலய தரிசனத்திற்காய்
ஆறுமலை கடல் தாண்டி
ஓடி ஓடி வணங்கியவர்- இன்று
ஒதுங்கிப் போனதேன்?

அதிகாலை எழுந்து அம்மியில் சம்பல் அரைத்து
ஊதி ஊதி விறகடுப்பில் உணவாக்கி வைத்து
அயலவரை உறவினரைக் கூவி அழைத்து
அலங்காரம் செய்து ஆலயம் சென்று
அரோகரா சொன்னார்களே அன்று

மின்சார வசதியுடன் மிக்சியில் அரைத்து
காஸ்குக்கரில் சமைத்து பழுதாகாமல்
குளிரூட்டியில் பதப்படுத்தி
“ஹலோ” என்ற சொல்லில்
காரியம் யாவும் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து நிமிட பயணத்தில்
பலதூரம் விரைந்து செல்ல வசதியிருந்தும்
பக்தியுடன் வழிபட நேரமொதுக்க
பக்தர்கள் மறந்து போனதேன்?

ஐயகோ! இது மட்டுமா மாற்றம்
அரை மனதுடன் ஆலயம் செல்கின்றவர்களிலும்
பட்டுச்சட்டை தாவணியில்
பவனி வரும் மங்கையர்
பஞ்சாபி அணிந்தும்
கண்களால் இறைமுகம் பார்த்து
கரங்களைக் கூப்பி
கடவுள் நாமத்தைக் கருத்திலும் கொள்ளாது
கையிலே கமராபோன் கொண்டு
கடவுளின் உருவத்தைக் கண்டபடி
படமாக்கி அதைப் பேஸ்புக்கில் பதிவேற்றி
பலர் பார்க்கச் செய்யும் ஆவலில்
பக்தர்கள் செல்போனுடன் ஆலய தரிசனம்.

ஆவணப்படுத்தல்களில் ஆர்வம் அதிகமாக
ஆண்டவன் அலங்காரமும்
பொழுதுபோக்கு சாதனமாய்
போனிலே சிறைப்படுத்தப்படும் அவலம்- ஆனால்
ஆலய வாயிலில் போன் பாவிப்பது தடை என்று
அறிவித்தற்பலகை அலங்காரமாய்!

இவை மட்டுமா...
இறைவனின் புகழ்கூறும்
இனிய பாடல்களைப் பாட எண்ணி
வாய்திறக்கும் போது
காற்றிலே மிதந்தது- நாதஸ்வர
கானங்கள் சினிமாப் பாடலுடன்
அதைக் கேட்ட மனதில்
அழகிய காதல் வரிகள்
அடுக்கடுக்காய் நினைவுவர
அம்மையப்பன் பாடலங்கே
அடிமனதின் ஓரத்திலே.

புதுமை மிக்க தம்பிரானே - இந்தப்
புதுமைகள் எல்லாம் எதனாலோ
புரியவில்லை எனக்கும் இன்றைய
புதிரான வாழ்க்கை முறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிவரைந்த பாதையிலே...

சி. டனுசியா
A/L (2017)
கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்

அலைதாவும் கடலோரம் அழகான கிராம மொன்றில் ஐந்துபேர் அடங்கிய குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்தவன் தான் குணா. கடல் அன்னையின் மடி தவழ்ந்து பெரியவனாக வளர்ந்த அவனுக்கு வாழும் வழியையும் கடலன்னையே காட்டி நின்றாள். தன் குடும்பத்தை சுமைகளில் இருந்து காக்க வேண்டுமென்று பெரும் சுமையுடன் கடலை நோக்கி நடக்கத் தொடங்கினான் குணா. கட்டுமரத்தோணியில் வலைகளை ஏற்றிவிட்டு வலிக்கத் தொடங்கிய அவனுக்கு தோணியை வலிக்கும் போது கைகளில் ஏற்பட்ட வலி பெரிய வலியாகவே தெரியவில்லை. ஏனெனில் அவனுடைய மனதில் வலிகள் நிறைந்து காணப்பட்டது. தோணி கடலை நோக்கி நீருக்கு எதிராகச் சென்றது. ஆனால் அவனுடைய கூவுதலை அடையாளமாகக் கொண்டே விடியலை அறிவார்கள். ஆனால் கடற்கரைப்பிரதேசத்தில் வாழும் மக்கள் கடலலைகள் ஓய்வதைக் கொண்டே விடியலை அறிவார்கள். அன்றும் அப்படித்தான் கிழக்கு வெளுத்திருந்தது. குணாவிற்கு மூன்று தங்கைமார்கள். குணாதான் மூத்த பிள்ளை அப்போது குணாவின் வயது எட்டு. பட்டாம் பூச்சிபோல் துள்ளி விளையாடும் பருவம். தகப்பன் ஒரு கடற்தொழிலாளர். இருப்பினும் தன் பெரிய பாடசாலையில் படிக்க வைத்தார்.

அவ்வப்போது வரும் விடுமுறைகளில் தன்னுடைய வீட்டிற்கு வருவான். மாலைப் பொழுதுகளில் தன்னுடைய தகப்பனாரோடு கடலுக்கு விளையாடச் சென்றுவிடுவான். பட்டணத்துப் பாடசாலையில் ஆசிரியர்களின் பார்வைகள் குணாவைக் கொடுமைப்படுத்தினாலும் சுயமாக படித்து எப்படியாவது முதலாம் நிலைக்கு வந்து விடுவான். இதனைத் தகப்பனார் ஊரெல்லாம் பறைசாற்றுவார். அப்போது தகப்பனார் படும் சந்தோசத்திற்கு எல்லையே இருக்காது. குணாதான் வகுப்பில் முதல்நிலை. வீடே கலகலப்பாக இருந்தது. இருப்பினும் குணாவின் அப்பா என்றுமே இல்லாத போல வாட்டத்துடன் காணப்பட்டார். மாலைப்பொழுது குணா தன் தங்கைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான். விளையாட்டை இடையிலே நிறுத்தி விட்டு தந்தையிடம் சென்ற குணா அப்பா நீண்ட நாளாச்சு கடலுக்குப் போய் நானும் உங்களோட இண்டைக்கு வாறன் இந்த முறையும் நான் முதலாம் பிள்ளை தானே என்று அன்பாக எதிர்பார்ப்புடன் கேட்டான். அந்த எதுவுமறியாத பிஞ்சுமனம் என்றுமே இல்லாத மாதிரி "உனக்கு எந்த நேரமும் விளையாட்டுத் தான் பேசாம போய்ப் படி என்றார்" அந்தப் பிஞ்சு மனதில் முள்ளாய் தைத்தது. குணாவின் அப்பா அவசரமாக கடலுக்குப் புறப்பட்டார்.

குணாவின் "அம்மா கொஞ்சம் சாப்பிட்டுப் போகலாமெல்லே" என்றாள். நான் வந்து சாப்பிடுறன் நேரம் போட்டுது அவங்கள் போயிடுவாங்கள் என்று விட்டு புறப்பட்டார் குணாவின் அப்பா. கடலுக்குப் போகும் ஆசையில் "அப்பா நானும் வரட்டுமே" என்றான். ஆவேசத்துடன் பார்த்த அப்பா இது ஒரு சதத்திற்கும் உதவாது எத்தனை தடவை சொல்லியிருக்கிறன். வெளிக்கிடேக்குள்ள கூப்பிடக்கூடாதெண்டு எனத் திட்டினார். முன்பெல்லாம் குணாவின் அப்பா இப்படியே பேசியதில்லை. "என்ரதங்கக்குட்டி என்ர உசிர விட என் பிள்ளை தான் பெரிசு" என்று அடிக்கடி கூறும் அப்பாவின் வாயிலிருந்து "நான் ஒரு சதத்திற்கும் உதவாதவன்" என்ற வார்த்தை வெளிப்பட்டது என அந்தப் பிஞ்சு மனம் அல்லலப்பட்டது. அம்மாவின் அருகே குணா வந்தான் அம்மா கூறினா அதொன்றும் இல்ல பிள்ளை அப்பா இண்டைக்கு பழக்கமற்ற கடலுக்குப் போய் மீன் பிடிக்கச் சொன்னாங்களாம் அது தான் என அம்மா இழுத்தார். அன்று கடலுக்குப் போன அப்பா இன்னும் கரைதிரும்பவில்லை. அப்பா கரை திரும்புவார் எனத் தினம் வழிமேல் விழிவைத்திருந்த அம்மாவும் கண் மூடி கரை சேர்ந்து விட்டார். நான்காம் தரத்தோடு படிப்பை விட்டு மீன் விற்கச் சென்ற குணா இன்னும் கடல் கடந்து சென்று கட்டுமரம் ஏறி கடல் வலைவிரித்து கடல் மீன்களைப் பிடித்து கடல் அன்னையின் தயவில் கல்வி கற்க வேண்டிய வயதில் கந்தல் ஆடையுடன் தன் அன்புத் தங்கைகளுக்காய் கனவுகளைத் தொலைத்து இன்று நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

"இறைவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல
குணாவைப் போன்ற சிலரை மட்டுமே!"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திக்கெட்டும் பரவும் இன்னிசை வளை ஓசை"

# வேல் அழகன்

## அரிசி ஆலை



சகல விதமான சிவப்பு நாடு,
சிவப்புப் பச்சை
அரிசிகளை சில்லறையாகவும்,
மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

முல்லை வீதி, பரந்தன்.
தொ.பே : 077 9654201


## மக்கள் வங்கியின் YES கணக்கிற்கு "YES" சொல்லுங்கள்

வெற்றிகரமான வாழ்க்கைக்கு YES சொல்லும்
இளைஞர்களுக்கு மக்கள் வங்கியின் YES சேமிப்பு கணக்கு

வெற்றிக்கு இதயபூர்வமாக YES சொல்லும் இளைஞர்களே!

- நாளாந்த வட்டி வரவினை மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியும்.
- ரூ.25,000.00 க்கு மேற்பட்ட வைப்புகளுக்கு மேலதிக வட்டியினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.
- மக்கள் வங்கியின் கைத்தொலைபேசி வங்கிச் சேவைகள் மற்றும் இணைய வங்கிச் சேவைகளினை அனுபவித்துக் கொள்ளலாம்.
- வரவு அட்டை மற்றும் கடன் அட்டைகளினைப் பெற்று பயன் பெறலாம்.
- எதிர்காலம் நோக்கிய எந்த ஒரு தேவைக்கும் கடன் வசதி பெற்றுக் கொள்ள முடியும்.

**இன்றே YES கணக்கிற்கு YES சொல்லுங்கள்.**



Green BANKING with yes
YOUNG EXECUTIVE SAVER

yes Future Stars

மேலதிக தொடர்புகளுக்கு,
மக்கள் வங்கி பரந்தன் கிளை
தொலை பேசி - 021-22800010, 021-22800011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள்ளேயே வாழ்ந்து விடுகிறேன்

✍ யோ. கோபிநாத்
செயலாளர்,
"கலை ஒளி கலா மன்றம்",
கட்டைக்காடு.

உயிரை விதையாக்கி
உடலை எருவாக்கி
குருதி நீரால் - எனை
கருவறையில் வளர்ப்பவளே
உணர்கின்றேன் தாயே - உனை
நான் படுத்தும் வேதனையை.

ஈன்ற பொழுதினிலே
பெரிதுவக்கும் உன் மகனை
சான்றோன் (ள்) எனக் கேட்பதற்காய் - உன்
எண்ணங் கொள்ளும் கற்பனையை
உணர்கின்றேன் தாயே - உன்
தொப்புள் கொடி உடனிருப்பதனால்.

பூமியே குதூகலித்து
புன்னகையே கண்ணசைத்து
பாவியர் யாருமின்றி
பாவையர் திரிந்து வந்தால்
பத்துத் திங்களதில் - படைத்திடுவேன்
சாதனைகள் பலகோடி
இப் பூமி படும் வேதனையை
உணர்கின்றேன் தாயே - உன்
தொப்புள் கொடியுடன் நானிருப்பதனால்.

கோயிலுக்குச் சென்ற குஞ்சு
குருக்களால் சிதைவதாயும்
எழுத்தாணி பிடித்து ஏடமைத்த - ஆசான்
கழுத்தாணி பிடித்து கற்பைப் பறிப்பதாயும்
தந்தையொடு தனையனாலும்
தடி பிடிக்கும் தாத்தாவாலும்
அம்மாவாகி வரும் அதிசயத்தால்
தரணி படும் வேதனையை
உணர்கின்றேன் தாயே - உன்
தொப்புள் கொடி உடனிருப்பதனால்.

பூமிப் பந்தினிலே - நீ
பிரசவித்து விட்டு விட்டால்
பெரிதாய் ஒன்றும் படைத்து விடும்
பிள்ளையென எண்ணாதே
பொல்லாத கற்பனையை
முடித்து விடு கருவறையில்
போதுமென நீ நினைத்தால் - எனை
மாற்றி விடு கல்லறைக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை ஒரு பழமை

கலை ஒளி. மயில் வேலாயுதம்பிள்ளை
ஓய்வுநிலை உப அஞ்சலதிபர்
புளியம்பொக்கணை.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பழமையான பல பிரிவுகளில் கரைச்சி என்பதும் ஒரு பிரிவாகும். இன்னொருபுறம் மன்னர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்திற்குட்பட்டதாகவே வன்னிராச்சியம் இருந்ததென்றும் வன்னிராச்சியத்தின் அல்லது வன்னிமையின் ஒரு பகுதிதான் கரைச்சி என்றும் சொல்லப்படுகின்றது. எனினும் கரைச்சி என்பது தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பெரிய பிரதேசமாகும். கிளிநொச்சி தனியாக நிர்வாக மாவட்டமாக இருந்தாலும் கரைச்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்குட்பட்டதாகவே இருந்து வருகின்றது.

கரைச்சி பெரும் பிரதேசமாக இருந்தமையால் கரைச்சி வடக்கு, கரைச்சி தெற்கு எனப்பிரித்து சில நிர்வாகமையங்கள் நடைபெற்றுவருகின்றன. எனினும் கரைச்சி என்பதன் அடிநாதமே புளியம்பொக்கணை கிராமமும் அதனோடு இணைந்த கலவெட்டித்திடல் கிராமமும் ஆகும். இவற்றுடன் புன்னைநீராவி என்பதும் ஒருகிராமம். இதனாலேதான் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புதிய புன்னைநீராவி என ஒரு கிராமம் உதயமானதும் அதன் பின்பு இது பழைய புன்னைநீராவி என்றிருந்தும் தற்போது மறைந்து வருகிறது. இப்போது கரைச்சியின் அடிநாதம் பற்றிப் பார்ப்போம். கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் தோற்றமும், தொன்மையும் அதன் வரலாற்றுச் சான்றுகளின்படி சுமார் நானூறு வருடங்களுக்கு முற்பட்ட காலமாகும். இதன்படி மேற்குறிப்பிட்ட மூன்று கிராமங்களும் ஆலய வரலாற்றுக் காலத்துடன் சமமானதாக அல்லது அதற்கு முற்பட்ட காலம் கொண்டவை என்பது வெள்ளிடை மலை.

இக்கிராமங்கள் அடங்கியுள்ள வட்டாரம் என்ற பிரிவுக்குட்பட்டதாகவே கொழுந்துப்புலவு என்ற கிராமமும் இருந்ததென்றும் இங்கே வவுனியவேள், உடையாவேள், சைவவேள் என மூன்று பிரிவு மரபினர் வாழ்ந்தனரென்றும் அறியப்படுகின்றது. இவ்வாறான மரபுவழியைச் சார்ந்தவர்கள் முறையே, சிவனையும், கண்ணகியையும், விநாயகரையும் தங்கள் தங்கள் குல தெய்வங்களாக வழிபட்டு வந்ததாக அறிந்தபோதிலும் எழுதப்பட்ட வரலாற்றுரீதியான ஆவணங்களினால் உறுதிசெய்ய முடியவில்லை. இவையெல்லாம் எமது மூதாதையினரதும் அவர்களின் முன்னோர்களாலும் எமக்குத் தரப்பட்ட பரம்பரை வழியான தரவுகளாகும்.

இவ்வாறாக இந்த மூன்று மரபினரும் குறிப்பிட்ட குலதெய்வங்களின் வழிபாட்டோடு, கமச்செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களையும் செய்து செல்வச்சீரோடு மேன்மையுடன் வாழ்ந்து வந்தனர். இக்காலப்பகுதியில் வழிப்போக்கராக வந்து கொழுந்துப்புலவுக்கிராமத்தில் தங்கியிருந்த ஒரு சந்நியாசி கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து மிகவும் அரிதான ஏட்டுச்சுவடிகள் அபகரிக்கப்பட்டன. இதன்விளைவு சந்நியாசியின் காவல்தெய்வமான வைரவரின் தொந்தரவுகளினால் அக்கிராமத்தவர்கள் மிகவும் துன்பப்பட்டனர். மீளமுடியாத நோய்த்தாக்கம் இதனால் இறப்பு, கால்நடைகள் அழிவு, பயிர்ச்செய்கையில் நட்டம், காட்டு மிருகங்களினால் தொல்லை இப்படிப் பலவழிகளிலும் பாதிக்கப்பட்டனர்.

இப்படியான தொடர்ந்த தொல்லைகளினால் பயங்கொண்ட இவர்கள் தங்களது குலதெய்வங்களையும் எடுத்துக்கொண்டு வெளியேறினர். வெளியேறி வந்தவர்கள் புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் கிராமங்களில் குடியேறினர். தங்கள் குலதெய்வங்கட்கும் கோயில் அமைத்து, பொங்கல், பூசை வைத்து வழிபட்டு, தங்கள் குலத்தொழிலான விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை மேற்கொண்டு வந்தனர்.

எப்படி இருந்தபோதிலும் குறித்த வைரவரின் தொல்லைகள் இங்கும் தொடர்ந்தன. இதனால் கண்ணகி அம்மனுடைய பார்வையில் இருந்தால் வைரவரின் தொல்லைகள் குறையும் என்ற நம்பிக்கையில் கண்ணகியின் வாசலிலே வைரவருக்கும் ஒரு கோயில் வைத்து சந்நியாசி வைரவர் என்று ஆதரித்து வணங்கி வந்தனர். அதோடு பலியிடுவதாகவும் நேர்த்தி செய்து வேண்டினர்.

வேண்டுதல் செய்ததின்படியே பரம்பரை பரம்பரையாக இன்றுவரை ஆடும் கோழியும் பலியிடப்பட்டு வருகின்றது. இப்பொழுதுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் பலியிடுவது நிறுத்தப்பட வேண்டிய ஒன்று எனப் பலர் பேசிக்கொண்டாலும் தெய்வ பழிக்கு ஆளாகிவிடுவோம் என்று அஞ்சுகின்றனர்.

கண்ணகை அம்மன் ஆலயத்தின் உரிமைக்காரர்கள் கலவெட்டித்திடலில் கோயில் அமைத்து வழிபட்டாலும் சுண்டிக்குளம் என்ற அயல் கிராமத்திலும் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்து வந்தும் பூசை செய்து வந்தனர். அத்தோடு கலவெட்டித்திடல் கிராமத் தலைவராக அதாவது விதானையாக ஆரம்பத்தில் சுண்டிக்குளம் கிராமத்தவரே கடமையாற்றி வந்தனர். முன்பு விதானை, உடையார், மணியகாரன் என்ற சொல்லில் பணிநிலைகள் இருந்துள்ளமையும் அறியப்படுகின்றது.

இவ்வாலயங்கள் இப்போது புனரமைப்புச் செய்யப்பட்டு விட்டன. என்றாலும் இவை செங்கல், செதுக்கப்பட்ட காட்டுக்கல் என்பவற்றாலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தமைக்கான சிதறலான ஆதாரங்கள் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கின்றன. இப்போது கலவெட்டித் திடலில் இரண்டு கண்ணகை அம்மன் கோயில்கள் உள்ளன. ஆதி கண்ணகை அம்மன் என்றும் புதிய கண்ணகை அம்மன் என்றும் கூறப்படுகின்றது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கருத்தின் அடிப்படையில் 1949ஆம் ஆண்டு புதிய கோயில் நிர்மாணிக்கப்பட்டது.

இப்பொழுது சிவன் ஆலயம் எப்படி நாகதம்பிரான் ஆலயமாகியது என்று பார்ப்போம். சிவனை வழிபாடு செய்த வம்சத்தைச் சார்ந்த நீதிநாயக முதலியாருக்கு பிள்ளைப்பேறு இல்லாமை பெரும் குறையாக இருந்தது. இதன் காரணமாகத் தங்கள் குலதெய்வமான சிவனையும், பார்வதியையும் வணங்கி விரதமிருந்து பல தர்ம காரியங்களைச் செய்து வந்தனர். இதன் பயனாக இவர்கள் குழந்தைச் செல்வம் பெற்று மகிழ்ந்தனர். இரண்டு ஆண் மகவும் ஒரு பெண் மகவும் கூடவே ஒரு பாம்பையும் பெற்றனர். இந்த சர்ப்பக் குழந்தையின் பெயர் தம்பிரான் என்றும் திருவிளையாடல்கள், திருவருள், தெய்வீகத்தன்மை என்பவற்றால் தெய்வமாக வழிபாடு செய்தனர். இக்காலப்பகுதியில் சிவ வழிபாடு நலிந்து நாகதம்பிரான் வழிபாடு முதன்மை பெற்றது. எனினும் புனருத்தாரண காலத்தில் நாகதம்பிரானுக்கு மட்டும் கோயில் அமைப்பது என்ற சர்ச்சையில் அப்போதைய பூசகரின் கனவில் காட்டியதின்படி சிவனுக்கும், நாகதம்பிரானுக்கும் தனித்தனியான மூலாலயங்கள் நிர்மாணிக்கப்பட்டமையை அறியலாம்.

கரைச்சியின் பழமையான கிராமங்களான புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல், புன்னைநீராவி ஆகிய கிராமங்களின் பெயர்களை நோக்குவோம். புளி என்பது புளிய மரத்தையும் பொக்கணைஎன்பது போர்அல்லதுகிடங்குஎனப்படும் பொக்கணையுடைய பல முதிர்ந்த புளிய மரங்கள் நின்ற இடம் என்பதால் புளியம்பொக்கணையானது. பழைய கல்வெட்டுகள் இருந்த திடல் என்றும், அரசர் காலத்து கலை ஓட்டுச் சிதறல்களின் திடல் என்றும் இதுவே மருவி கலவெட்டித்திடலானது என அறியப்படுகிறது. புன்னை மரத்தின் கீழ் உருவான வாவி பின்பு புன்னைநீர் வாவியாகி புன்னைநீராவி என மருவியது என்றும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான புளியம்பொக்கணை கிராமத்தின் ஓரத்தில் உள்ள சிறுகாட்டுப் பகுதியில் சிறுதீவுகளும் இந்தத் தீவுகளின் இடையே ஒரே சமயத்தில் பார்த்திட முடியாத நீர்க்குன்றுகளும் அரசர் காலத்தவை என்று சொல்லப்படும் கற்களும் இருக்கின்றமையை அறியலாம்.

இக்கிராமங்களில் நின்ற மிகவும் வைரம் பொதிந்த பனை மரங்கள், நூற்றாண்டு காலம் பழமை கொண்ட தோம்பு உறுதிகள், குளங்கள், ஆறுகள் போன்றவையும் இவற்றின் தொன்மையை எடுத்தியம்புகின்றன. ஆரம்பத்தில் பத்துக் குடும்பங்கள் வரை இருந்ததாகவும், பிரதான வீடு வட்டமானதாக காட்டுத் தடிகளால் அமைத்து பனையோலையால் வேயப்பட்டிருக்கும். இது வட்ட வீடு என அழைக்கப்படும். சமைப்பதற்கும் சிறகு குடில் அழகாக வேய்ந்து மட்டை வரிந்து படலை போடப்பட்டிருக்கும் மற்றும் மாட்டுக்குக் குடில் இப்படி தேவைக்கேற்றபடி கொட்டில்கள் போட்டுக்கொள்வார்கள்.

பழமையான இக்கிராமங்களின் எல்லைகளாக படு வேலி அல்லது அக்கில் வேலி போடப்பட்டிருக்கும். இவ்வேலி சிறுதடிகள், முள்ளுகள் என்பவற்றை வெட்டி அடுக்காகப் போடப்படுவதாகும். இவ்வேலியின் பிரதான நுழைவிடங்கள் சங்கடம் என்று சொல்லப்படும். இது நாலு அல்லது ஐந்து தடிகள் சொருகிக் கழட்டக்கூடியவாறு அமைந்திருக்கும்.

இவர்களுடைய போக்குவரத்து நடந்து செல்வதும், மாட்டு வண்டியில் பயணிப்பதுமாகும். தென்மராட்சிப் பிரதேசத்துடன் நெருக்கமான தொடர்பும், உறவுமுறையும் இருந்து வந்துள்ளது. கண்டாவளை, மடுக்கரை, பன்றிமோட்டை, தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்கள் ஊடாக ஆனையிறவை அடைந்து பயணிப்பர்.

கமச்செய்கையும், கால்நடை வளர்ப்பும் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தமையால் குறிப்பிட்ட காலங்களிலேயே முறைப்படி செய்யவேண்டியவற்றைச் செய்துவிடுவர். காரியம் எதுவானாலும், நாள் கோள் பார்ப்பதில் தவறமாட்டார்கள். வயல்களில் கால்நடைகளைக் கட்டி அதன் எருவையும், சேமித்து வைத்திருந்த சாணம், குப்பை கூழங்களையும், வயலில் போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுது பண்படுத்தி வைத்திருப்பர். மழையை நம்பிச் செய்யப்படும் மானாவாரி நிலங்களானதால் ஆவணி மாதத்திலேயே விதைப்பு ஆரம்பமாகிவிடும். இதைப் புழுதி போடல் என்பர். இதற்கிடையில் நாள் பார்த்து வளர்பிறைகூடிய நல்ல நாளில் நாள் நெல்லு கொத்தி விடுவர்.

வயல் விதைப்பில் பத்துக்கு மேற்பட்ட சோடி மாடுகள் கூட்டாக உழவில் ஈடுபடும். மாடுகளையும் நல்ல முறையில் பராமரிப்பர். ஏர் என்ற கலப்பையின் பாகங்கள் இப்படி அழைக்கப்படும். படவாள், மேழி, ஏர்க்கால் கொழு. இதேபோல நுகத்தையும் ஏரையும் இணைக்கும் கயிறு நந்தையாகும். விதைப்பு நிறைவு பெறும் நாள் கார்த்திகை விளக்கீட்டு நாளாகும். இன்று இறுதியாகவுள்ள ஒரு வயல் விதைக்கப்படும். இதைப் பொலிசை விடுவதாகக் கூறுவர். உழவு மாடுகளுக்கும் நெல்லு வைத்து அந்தப் போகத்திற்குரிய விதைப்பை நிறைவு செய்வர்.

இங்குள்ளவர்கள் காவல் தெய்வங்களாகப் பிள்ளையார், வைரவர், நாச்சிமார், வீரபத்திரர் என வயல் நிலங்களின் எல்லைகளில் கோயில் வைத்து வழிபடுவர். அதோடு நாகதம்பிரான், கண்ணகை அம்மன் ஆலயங்களில் மழை வேண்டி மழை அபிஷேகமும், நெற்பயிரை நோய்த்தாக்கம், காட்டு மிருகங்களின் அழிவு போன்றவற்றில் இருந்து பாதுகாப்பதற்காக பயிர்ப்பூசை என்றும் வைத்து வழிபடுவது இப்பவும் இருந்து வருகின்றது.

அறுவடைக்கு முன்னதாகப் புதிர் எடுக்கப்படும். அன்றைய தினம் சாணத்தால் முற்றத்தில் மெழுகிப் பிள்ளையார் பிடித்து வைத்துக் கோலம் போட்டு நிறைகுடம் வைத்து விபூதி, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களுடன் குடும்பத் தலைவன் வயலுக்குச் சென்று கதிர் எடுத்து வந்து வீடுகளுக்கும் கட்டுவர். அதன் பின்பு புதிர் உண்ணுதல் நடைபெறும். அன்றைய தினம் சகல மரக்கறிகளும் சமைத்து புதுப்பானையில் குடும்பத் தலைவி அரிசி போட குடும்பத் தலைவன் தேங்காய் உடைப்பது வழமை. சமையல் முடிந்த பின்பு கடகத்தில் படையல் செய்து முக்காலி கட்டி அதில் வைத்து காவலாளிக்குப் படைத்தபின் குடும்பத் தலைவரால் குழையல் செய்து எல்லோர்க்கும் புதிர் கொடுக்கப்படும்.

முந்திய காலங்களில் மாட்டினாலே சூடு மிதிப்பார்கள். பேச்சு வழக்கில் சூட்டடி என்பர். மாட்டுச் சூட்டடிக்கு நாலுபேர் மட்டுமே பங்குகொள்வர். இதில் பொருத்தமான இடத்தில் களக் கட்டையை நடுவர். களக்கட்டை காரை மரத்தில் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டிருக்கும். களக்கட்டையைச் சுற்றி மெழுகியும் அல்லது பனை ஓலையால் இளைக்கப்பட்ட பாய்கள் விரிக்கப்படும். இப்பாய்களை முடஞ்சான் என்பர். மாடுகளை நடையன் என்றும் பாவிக்கும் கயிறுகளைக் கந்த தொடுப்பான். ஆத்திரி என்றும் குறிப்பிடுவர். நெல்லைக் கூரன் என்றும், பொலி என்றும் சுளகைக் குல்லம் என்றும் சாணத்தைப் போல் என்றும், வேலையாட்களைப் போலன் என்றும் சொல்வர்.

இக்கிராமங்களில் வாழ்ந்த மூதாதையர் சைவசமய விதிமுறைகளைக் கைக்கொள்பவர்களாகவும், பல விரதங்களை அனுட்டிப்பவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். ஆண்கள் வேட்டி, சால்வை அணிபவர்களாகவும், சிறு குடுமி வைத்திருப்பவர்களாகவும் பெண்கள் சேலை கட்டுவதும் அதில் மாறாடி போடுவதும், காதில் கடுக்கண் அணிவதும், மாத விலக்குக் காலங்களில் வீட்டிலே தங்குவதும் பழமையாகக் கொண்டிருந்தனர். விரத நாட்களில் தென்னை ஓலையில் செய்யப்பட்ட கல்லை என்ற பாத்திரத்தில் சாப்பிடுவர்.

பல வருடங்கள் பழமையான பனை மரங்கள் நிறைய நின்றன. பனை மரங்களின் ஒவ்வொரு பாகமும் பலவிதமான முறையில் பயன்பாட்டில் இருந்தன. இதில் தட்டுவம், தலைப்பெட்டி, பாய், கயிறு என்றும், பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் என உணவு வகையும் இன்றும் புழக்கத்தில் உள்ளன.

பிந்திய காலத்தில் 1960இலும் அதையொட்டிய காலங்களிலும் காடாக இருந்த நிலங்கள் அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. பத்து ஏக்கர் வீதம் புளியம்பொக்கணை மத்திய வகுப்புத்திட்டமாகவும், ஐந்து ஏக்கர் வீதம் மத்திய வகுப்புத்திட்டப் பகுதி இரண்டாகவும், நாலு ஏக்கர் வீதம் நாலேக்கர் திட்டமாகவும், ஒரு ஏக்கர் வீதம் ஒரேக்கர் திட்டமாகவும் வழங்கப்பட்டது. ஒரேக்கர் திட்டம் இப்போது நாகேந்திரபுரம் என்ற கிராமமாகவுள்ளது. நாகதம்பிரானை முதன்மைப்படுத்தியே இப்பெயர் உருவானது. இப்போதுள்ள புளியம்பொக்கணைக் கிராமசேவகர் பிரிவில் புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல், நாகேந்திரபுரம், கானான், முசுறன்பிட்டி என்ற கிராமங்கள் உள்ளடங்குகின்றன. முன்பு யாழ் மாவட்டத்துடன் இருந்தபோது கிராம அலுவலர் இலக்கம் 165 ஆகவும் தற்போது KN/56 ஆகவும் இருக்கின்றது. அங்கே இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இரண்டு மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், இரண்டு பாடசாலைகள், சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், இரண்டு கமக்காரர் அமைப்புகள், இன்னும் இதர அமைப்புகளும் கொண்டவையாக அமைந்த புளியம்பொக்கணை ஒரு பழமை வாய்ந்த பூர்வீகக் குடிகளைக் கொண்ட கிராமமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே தமிழர் கலாசாரம்....

திருமதி சத்தியகலா கமலானந்தன்
கிளி/முருகானந்தா கல்லூரி முரசுமோட்டை

கல்தோன்றி மண்தோன்றி கடல் தோன்றா
காலத்து முன்தோன்றிய மூத்தகுடி என்று
நம்மை நாமே புகழ்ந்து கொள்வதும்
புனைந்து கொள்வதுமாக கழித்து
வருகிறோம் நம் வாழ்க்கையினை!

வாய்ச் சொல்லில் வீரர்களாய்
வார்த்தைகளால் கோர்த்துவிட்டால்
வாழாது நம் தமிழ்! செயல் வீரம் கொண்ட
சேவையாளர்களாய் மாற வேண்டும் மறத்தமிழன்
மனமுண்டேல் மானமுண்டேல் மாறிவிடலாம்!

அந்நிய நாடுகளில் அந்நியர் கூட
பற்ற ஏங்கும் எமது கலாசாரம்
சுதந்திர இலங்கையில் சுதேசிகளும்
சுமக்கத் தயங்கும் நிலை ஏன்....?
ஒழுக்கமென்றா அல்லது இழுக்கமன்றா....?

மதுப்பிரியர்களும் மாதுப்பிரியர்களும் இங்கு
மண்டியிட்டுக் கிடக்கின்றார்கள்! தட்டிக்கேட்பவனுக்கு
முட்டுக்கட்டை. இதுமட்டுமா? துட்டுக்காக
துணையையே விலைபேசும் விகடகவிகள்
விஞ்சியிருப்பதும் இங்கேதான்!! அப்பப்பா......
எத்தனை எத்தனை அழிவுகள் அவை
ஒவ்வொன்றும் சீர் அழிவுகள்!!

மேடைகளிலே கலக்கமின்றி முழக்கமிடுகின்றோம்
பின்னர் வேலியே பயிரை மேய்கிறது!
யாரிடம் முறையிட? யாரை நம்ப?
வேடதாரிகள் நம்மிடையே விரவிக்கிடக்கின்றார்கள்!
கேட்டால் தன்மானத் தமிழனாய்! புரியவில்லை எமக்கு!
தன்மானத் தமிழா? அல்லது தன் மானத்தை
விலைபேசுகின்ற தமிழா? என்று!

எத்தனை முதியோர் இல்லங்கள் எத்தனை
விபச்சார விடுதிகள்? முதியோரைப் பேணுதல்
ஒருவனுக்கு ஒருத்தி ஆகிய தமிழ்
கலாசாரங்கள் எங்கே...?
திருட்டுப் போய்விட்டதா? அல்லது திருடப்போய்விட்டதா?
புரியவில்லை....?

இனத்தின் தனித்துவம் இரத்தத்தில் இல்லை
மொழியின் தனித்துவம் பேச்சில் இல்லை
பண்பாட்டின் தனித்துவம் பண்பாட்டில் இல்லை
கலாசார தனித்துவம் கலைகளிலும் இல்லை
மொத்தத்தில் தமிழன் தமிழனாக இல்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத்தேடி...

ந. நிசாந்தினி
தரம் – 12
கிளி / கண்டாவளை மகாவித்தியாலயம்

காலைக் கதிரவனின் ஒளிக்கரங்கள் பூமியை வியாபிக்கும் பொன்னான விடியற் பொழுது. இருளைக் கௌவி ஒளிபரப்பும் பகலவன் வருகையையிட்டு ஒருபுறம் ஐந்தறிவு ஜீவன்களின் குதூகலிப்பு, மறுபுறம் துயில் கலைந்து தேடலில் ஈடுபடும் மனித குலம். கடிகார முட்கள் கடிவாளம் போட்ட மனித வாழ்க்கையில் இது ஒரு பௌதீக மாற்றம். இந்த விடியலை வரவேற்க மனித குலத்திடையே எத்தனை மாற்றங்கள்! பாமரர்க்கும் இரவலர்க்கும் இந்த விடியல் ஒரு கேள்விக்குறி. இந்த விடிந்தும் விடியாத வாழ்வுக்குள் விடை தேடும் ஒரு பிஞ்சு உள்ளம்.

நேரம் ஏழு முப்பதைத் தாண்டி விட்டது. ஓர் கிராமத்தில் ஓலைக் குடிசையிலிருந்து ஒரு சிறுமி வீதியை நோக்கி நடை போடுகிறாள். அவள் நடையில் அவசரம் தெரிகிறது. நடைபாதைப் பயணிகளிடையே மாணவர்களுடன் அவளும் சென்று கொண்டிருக்கிறாள். காலில் பழைய செருப்பும் வெண்மை குறைந்த ஆடையும் அச்சிறுமியின் வறுமையை அம்பலப்படுத்தி நிற்கின்றன. பெயர் கவிதா. நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் பாரதியின் வரிக்கு எப்போதும் உயிர் கொடுப்பாள். அவள் இப்பொழுது எங்கு செல்கிறாள்...?

படைப்பில் இறைவன் வஞ்சகம் செய்கின்றான் என்பது இவள் வாழ்வில் புலப்படும். வறுமையுடன் போராடி மரத்துப் போன இந்தப் பிஞ்சு உள்ளத்தில் தோல்விகளின் காயங்கள் இன்னமும் ஆறாமல் வலித்துக் கொண்டிருக்கின்றன. இளமையில் வறுமை மிகக் கொடியது எனும் மூதுரையை சிறுவயதிலேயே பட்டறிந்து கொண்டவள். தான் கற்கும் கல்வியால் இந் நிலைமை மாற்ற முடியும் எனச் சிறுவயதில் தன்னை வருத்திக் கற்றவள்.

இவளால் மட்டும் எப்படி முடிகிறது என எல்லோரும் எண்ணிக்கொள்வர். வகுப்பில் முதலிடத்தில் வரும் போதெல்லாம் அவள் நம்பிக்கை அங்கே வெளிப்படும். நம்பிக்கை அவளின் மூல தனம். வறுமையிலும் கூட செம்மையாகவும் நேர்த்தியாகவும் வாழப் பழகிக் கொண்டாள். வீட்டில் அவள்தான் முதல் பிள்ளை. அவளுக்கு அடுத்தாற் போல் நான்கு சகோதரர்கள். தந்தை மணியம், தாய் பார்வதி. மணியம் ஒரு சாதாரண மீனவத் தொழிலாளி. உழைக்கும் பணத்தில் பெரும் பணத்தைக் குடித்தே செலவு செய்து விடுவான். மீதிப் பணம் இருந்தால் மட்டுமே வீட்டில் அடுப்பு எரியும். வாழ்வில் முன்னேற வேண்டும் பிள்ளைகளுக்காகச் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் அறவே அற்றவனாக மணியம் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டான். வருமானக் குறைவால் குடும்பச் செலவை நிவர்த்தி செய்ய முடியாது பார்வதி திண்டாடினாள். வீட்டு வேலைகளுக்குச் சென்று தன் பிள்ளைகளுக்கு ஒருவேளை உணவு போட மட்டுமே அவளால் முடிந்தது. உயரும் விலைவாசியும் பொருளாதாரக் குறைவும் அனைவரையும் வருத்தும் போது இவர்களுக்கென்ன விதிவிலக்கா? தந்தையின் பொறுப்பற்ற போக்கும் தன் ஏழைத் தாயின் கண்ணீரும் கவிதாவின் பிஞ்சு உள்ளத்தைப் பாடாய்ப்படுத்தியது. தன்னுடைய உணவைத் தன் சகோதரர்களுக்கு ஊட்டிவிட்டு தன் தாய்க்கு நிகராய்த் தியாகம் செய்வாள். எத்தனை தடவைகள் தன் காலை உணவை அந்தச் சிறுமி மறந்திருப்பாள்.


இத்தனைக்கும் அவள் எண்ணம் எல்லாம் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பெரிய பாடசாலையில் சேர்ந்து கல்வியால் குடும்பத்தின் துன்பதுயரங்களையெல்லாம் துடைத்து எறிய வேண்டும் என்பதே. தன் சிரமம் பாராது இரவு பகலாய் படித்தாள். நாளுக்கு நாள் மணியத்தின் அட்டகாசம் அதிகரித்தது. குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்துத் துன்புறுத்தினான். தன் தந்தை மீது வெறுப்படைந்து வெறித்த பார்வையால் தன் இயலாமையை வெளிப்படுத்துவாள் கவிதா. இத்தனைக்கும் அவள் வாழ்வில் இடிக்கு மேல் இடியாக விழுந்தது. மணியம் அதிகமாக மதுவை அருந்தியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையானான். புலமைப்பரிசில் பரீட்சையும் நெருங்கிக் கொண்டிருந்தது. பரீட்சைக்கு ஒருநாள் இருக்கையில் மணியத்தின் உடல்நிலை மோசமடைந்தது. அவன் இறந்துவிட்டான். இத்துன்ப நிகழ்வால் சுமதியால் பரீட்சை எழுத முடியாமல் போகவே இந்தப் பிஞ்சு உள்ளத்தின் ஆசைகள், கனவுகள், எல்லை கடந்த கற்பனைகள் எல்லாம் வெறும் கானல் நீராய்ப் போயின. அந்தக் கணமே அவள் வாழ்வு இருண்டு விட்டது. வீட்டில் முதற்பிள்ளை என்ற அங்கீகாரம் சிறுவயதிலேயே தீர்க்கமான எண்ணங்கள் அவள் மனதைப் பக்குவப்படுத்த தன் தாயுடன் சேர்ந்து தன் குடும்பச் சுமையை ஏற்றுக்கொண்டாள்.

அடடே நேரம் இப்போது எட்டு மணியை தாண்டிவிட்டது. ஆமாம் இந்தச் சிறுமி எங்கு போகிறாள் நிச்சயமாகப் பாடசாலைக்கல்ல. செல்வந்தர் ஒருவரின் வீட்டிற்கே வேலைக்கு போகிறாள். இது அவள் வாழ்வில் எழுதப்படாத விதி. இந்த நியதியை உணர்ந்து அந்தச் சிறுமி இப்பொழுது தன் சகோதரர்களின் கல்வியில் தன்னிலை மறந்து பூரிப்படைகின்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றமுறும் இளையோரே!

✍ ஈ. தர்சிகா
வர்த்தகப் பிரிவு 2018
கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

இன்றைய இளைஞர் நாளைய நாயகர் என
நன்றெனப் பயணிக்க நாம் முயல வேண்டும் - தினமும்
குன்றிடா கொள்கையும் வென்றிடும் நடையும் கொண்டு
சென்று நீர் முயன்றால் நிச்சயம் நாளைய நாயகனே!

இலக்குடன் கூடிய பயணமதை நாடுபவன்
இன்றே உயருவான் என்றே எண்ணியே
தோற்றிடா எண்ணமும் உயர்ந்திடும் வெறியும் உடைய
நோக்கமொன்று உனக்கிருந்தால் நீண்ட பயணம் உனக்கு நிச்சயம்.

வாழ்ந்திடும் வாழ்வுதனை சொர்க்கமென எண்ணாதே
வாழ்ந்திட்ட மூத்தோர்கள் முன் சொன்ன வார்த்தைகள்
உனக்களித்த பொக்கிஷமென நினைத்திட்டாயானால்
மகத்தான வழிகாட்டல் வலுவாய் உனக்கமையும்.

வாழ்ந்து காட்டியவர் வழியினிலே வாழ வந்தவரெலாம்
வாழ்ந்திட்ட வரலாறு உனக்கு வழிகோலாய் அமையும் தோழா!
தலைமுறையின் தலைவிதியைத் தமக்கென நினைத்திடாதே
இன்றே நீ நினைத்தால் தலைமுறையின் எதிர்காலம் உனக்காய் ஏங்குதடா

திசை மாறிப் பறந்தாலும் திசை மாறித் திரிந்தாலும் - நீ
திசை மாறிப் பயணித்தால் நிச்சயம் உன்வாழ்வு திசை மாறிப் போகும்
தலையினிலே தலைவன் கீறிய திசையிலே நீ வாழ நினைக்காதே
உனக்கென ஓர்திசையை நீ உருவாக்கு உலகம் உன்னைப் பார்க்கும்.

நாளைய உலகினைப் படைக்கவே முற்படு - நீ
வீடாளுவது மட்டுமல்ல நாடாளவும் புறப்படு - உனக்காய்
ஓர் எதிர்காலம் உள்ளதடா தோழா - உன்
எதிர்காலம் தளைத்திடவே தலைமுறையும் ஏங்குதடா இளைஞா!

செல்லும் வழி எதுவோ சிறந்த வழி அதுவே
முன்னோர் கூறிய வழி எதுவோ உனக்கதுவே நல்வழி
உனக்கென ஒரு வழி உலகினிலே இருக்குதடா இளைஞா!
உன் உயர்வதனைப் பார்க்க வென்றே அது ஏங்குதடா இளைஞா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வழி நில்லடா அது உன் எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும்
ஈன்றிட்டத் தாயுனை எதற்காக வளர்த்திட்டாள்
வாழ்ந்திடும் உலகினில் வழி சமைத்திடவே - உனக்கு
வளமாய் ஓர் எதிர்காலம் வளருதடா மண்ணிலே.

தலைமறை எனும் தாயகம் உன்னைத் தாங்குதடா தமிழா
நிலைபேறான உன்நிலைகாண உன் தலைமுறையே ஏங்குதடா தமிழா
நிலவின் ஒளி போல் நிச்சயம் ஓர் நாள் உன் வாழ்வும் ஒளிருமடா
தலைமுறையின் எதிர்காலம் உன் தலையினிலே தலையெழுத்தாய் இருக்கும் வரை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதிறன் நற்சான்றிதழ்

கோ. சேகர்
நிர்வாக கிராம அலுவலர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

அந்த அலுவலகம் காலை 9.00 மணி தொடக்கம் பரபரப்புடன் இயங்கத் தொடங்கிவிடும். காணிப்பிரச்சினை, கசிப்பு பிரச்சினை, வேலிப்பிரச்சினை, பசளைமானியம்,.......... உதவிப்பணம் பெறல் என காலையிலேயே மக்கள் சேவை பெற வந்துவிடுவர். ஏனென்றால் மதியத்துடன் G.S ஐ அலுவலகத்தில் சந்திக்க முடியாது. (காணக்கிடைக்காது) நானும் எனது ஓய்வூதியம் தொடர்பான காரியமாக எனக்கான தவணை வரும் வரை அங்கு நடப்பவற்றை காத்திருந்து பார்த்து கொண்டு இருக்கிறேன்.

"தம்பி உனக்கு என்ன வேணும்....... வந்த பையன் சேர் நான் இன்டர்வியுவுக்குப் போக வேணும் கரக்டர் வேணும்" நல்லவிசயம் என்ன வேலைக்கு...... அரசாங்க வேலைக்கு "சரி இப்ப புதுசா வந்துள்ள கரக்டர்ல கேக்கப்படுற கேள்விகளுக்கு உன்னுடைய பதிலை பொறுத்துத் தான் கரக்டர் தரமுடியும் முதலில் இந்தப்படிவத்தை சரியாக நிரப்பித் தர வேண்டும். அதில நீ குறிப்பிட்ட விசயங்கள் சரியா என்பதை நான் நேரடியாக பரிசோதிக்க வேண்டும் பரிசோதனையில் எல்லாம் சரி என்றால் உனக்கு Smart charactor தருவேன். இல்லையெண்டால் charactor சாதாரண charactor தான் தருவன்.

வந்த பையனுக்கு தலை சுற்றுவது போலிருந்தது.. படிவத்தை வேண்டி வாசித்தான் பெயர், முகவரி, அடையாள அட்டை போன்ற வினாக்களுக்கு அடுத்து வந்த கேள்விகள் தான் பிரச்சினை 1.1 வீட்டுத்தோட்டம் செய்கிறாயா? (உன்னுடைய முயற்சியில்), 1.2 பயிர்களின் விபரம், 1.3 விவசாய இராசாயனம் பாவிக்கப்படுகிறதா, 2.1 உடற்பயிற்சி கிரமமாக செய்கிறாயா, 3.1 சுற்றுச்சூழல் தூய்மையாக வைத்துள்ளாயா?, 3.2 டெங்கு நுளம்பு காணப்படாதவளவு / வீடு என்ற ஆவணம் உள்ளதா, 4. சிரமதான வேலைகளில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ் உள்ளதா, 5. தேவையற்று வீதியில்/ சந்தியில் காணப்படாமைக்கான இரண்டு சாட்சிகள், வந்த பையனுக்கு ஒரே திகைப்பு.

என்ன தம்பி திகைத்து போய் நிற்கிறாய்? இது புது நடைமுறைகள் அரசாங்கம் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தரக்கூடிய புதிய புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு எங்களிடம் பொறுப்பளித்துள்ளது. போதைவஸ்து ஒழித்தல் போஷாக்கான இரசாயன பாவனையற்ற உணவு உற்பத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீரிழிவு நோயற்ற நாடு என புரட்சிகரமான சிந்தனைகளை மக்களிடத்தில் உருவாக்க பாடுபடுகிறது. அதே போல் அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் கல்வித் தகுதியை முழுமையாக்கி இருந்தாலும் இம்மாதிரியான மனித வாழ்க்கைக்கு தேவையான அம்சங்களையும் பூரணப்படுத்தி இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தனியார் துறையில் வேலை பார்க்க விரும்புபவர்களுக்கும் பொருத்தம் ஆகவே தம்பி மக்கள் மனங்களில் மாற்றத்தைக் கொண்டுவர முதலாவது அரச சேவையை அல்லது தனியார்துறை வேலை வாய்ப்பைப் பெற விரும்புவர்க்கு Smart Charactor Certificate ஐ அரசாங்கம் அறிமுகப்படுத்தி உள்ளது. படிவத்தை நிரப்பி தா..... விபரங்களை உறுதிப்படுத்தி கொள்வதற்கு மாலை வீட்டுக்கு வருவேன். நாளை உனக்கு பொருத்தமான நற்சான்றிதழ் கிடைக்கும் என்றார் கிராம அதிகாரி.

உண்மைதான் பெற்றோர்கள் பிள்ளைகளை படிப்பு படிப்பு என்று பாடசாலைகளுக்கும் பாடசாலை நேரம் தவிர தனியார் வகுப்புக்கும் அனுப்பி பாடத்திட்டத்தை பூர்த்தி செய்து விட்டு ஓர் வேலையை தேடிக்கொள்ளவே தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லி கொடுக்கின்றார்கள்.

வீட்டுத்தோட்டம் செய்வதன் மூலம் இரசாயனமற்ற உணவினை உற்பத்தி செய்து கொள்வது பற்றியோ சுற்றுச்சூழலை பாதுகாப்பதைப் பற்றியோ உடற்பயிற்சி மூலம் நீரிழிவு போன்ற நோய்களைத் தவிர்த்து கொள்வது பற்றியோ பயனுள்ள பொழுதுபோக்கு பற்றியோ சொல்வதை மறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படியான நிர்ப்பந்தங்கள் மூலம் மாற்றத்தைக் கொண்டுவர அரசாங்கம் செய்வது நல்லதே என நினைத்துக் கொண்டு கிராம அதிகாரியை நெருங்கிக் கொண்டு இருந்தேன்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டின் "கலை ஒளி" விருது பெறும் சான்றோர்கள்



**திருமதி மகாலிங்கம் தங்கமுத்து**

ஆசிரியர்

கல்விப்பணி




**திரு. வீரகத்திப்பிள்ளை இராமநாதன்**

தலைவர்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்

சமயப்பணி



**திரு. செல்லையா புஸ்பராசா**

சமாதானநீதவான்

சமூகப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
KILINOCHCHI PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY (LTD)

A9 ROAD, KARADIPPOKKU JUNCTION,
KILINOCHCHI.

ஏ9 வீதி, கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

REGISTER NO : PA-50 (08.03.1972)
T.P : 021 228 3632 / 021 492 4218 / 021 492 4217
E.mail - kilinochchipalamcoop50@gmail.com

# PALMYARAH JAGGERY

| Natrients | Average Quantity Per 100g | Average Quantity Per Serving (10g) |
|---|---|---|
| Energy | 1593.6kj | 159.36kj |
| Protein | 0.73g | 0.073g |
| Fat | 0.11g | 0.011g |
| Carbohydrate | 91.76g | 9.176g |
| Total Sugar | 86.15g | 8.615g |
| Reducing Suger | 2.22g | 0.222g |
| Dietary Fiber | 3.16g | 0.316g |
| Vitamin B1 | 24mg | 2.4mg |
| Vitamin B2 | 432mg | 43.2mg |
| Vitamin B3 | 5.2mg | 0.52mg |
| Vitamin B12 | 15mg | 1.5mg |
| Vitamin C | 11mg | 1.1mg |
| Calcium | 699mg | 69.9mg |
| Magnesium | 52mg | 5.2mg |
| Iron | 24mg | 25.4mg |
| Phosphorous | 92mg | 9.2mg |
| Potassium | 86mg | 8.6mg |
| Sodium | 93mg | 3.9mg |




பனை வெல்லத்தில் அடங்கியுள்ள தாதுப்புக்களின் அளவுகள்




சங்கத்தின் கிராமியவங்கி
அங்கத்தவர்களின் சேமிப்பு, கடன்,
நிலையானவைப்பு போன்ற செயற்பாடுகள்



கூட்டுறவு தினவிழா பணியாளர்களுக்கான
சீருடை வழங்கல்

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org